

# மாற்றுக் கல்விக் கொள்கைக்கான மக்கள் சாசனம்

பொருளடக்கம்


1. ஒரு நிமிடம் உங்களோடு 5

2. எங்கள் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் 9

3. முன்னுரை 22

4. ஒரு தொலைநோக்கு 28

5. வரலாற்றில் கல்வி ஆங்கிலேயர் ஆட்சி மற்றும் அதன் பின்னர் 30

6. பள்ளிக் கல்வியின் படிநிலைகள் 35

7. பச்சிளம் குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி 35

8. குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி 39

9. ஆரம்பக் கல்வி 42

10. உயர்கல்வி & மேல்நிலைப்பள்ளி நிலை.. 45

11. உயர்கல்வி 51

12. ஆய்வுக்கான கல்வி 54

13. ஆசிரியர் கல்வி 55

14. கல்வியில் பட்டியலின / பழங்குடி மக்களுக்கான நலன்களுக்கான பரிந்துரைகள் 57

15. பழங்குடி குழந்தைகளுக்கான சிறப்பு பரிந்துரைகள் 59

# மாற்றுக் கல்விக் கொள்கைக்கான மக்கள் சாசனம்

வரைவுக் கொள்கையின் மீது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க...

**Blogspot: http://kupkaep.blogspot.in/**
**E-mail: kupkaep.2016@gmail.com**

*தொடர்பு முகவரி:*
**கல்வி உரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு**
*245, அவ்வை சண்முகம் சாலை,*
*கோபாலபுரம், சென்னை - 600086*

# மாற்றுக் கல்விக் கொள்கைக்கான மக்கள் சாசனம்

<u>கொள்கை உருவாக்கக்குழு</u>

*முனைவர்* **வே. வசந்தி தேவி,** *(தலைவர்),*

*திருமிகு* **ஆயிஷா நடராஜன்,** *(செயலர்)*

*முனைவர்* **ச.சீ. இராஜகோபாலன்,**

*பேரா* **வெங்கடேஷ் ஆத்ரேயா**

*திருமிகு* **பு.பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு**

*பேரா.* **மு. முருகேசன்**

*பேரா.* **ஜே. ஹாஜாகனி**

*திருமிகு* **ஆர். ஓடியன் இலட்சுமணன்**

*பேரா* **பி. ராஜமாணிக்கம்**

*பேரா.* **ச. மாடசாமி**

*பேரா.* **இராமானுஜம்**

*பேரா.* **ஏ. பொன்ராஜ்**

*முனைவர்* **எஸ்.எம். ஜான் கென்னடி**

*பேரா.* **ஜே. பாலசுப்ரமணியம்**

*திருமிகு* **உச்சிமாகாளி**

*திருமிகு* **தீபா**

*பேரா.* **எஸ். கிருஷ்ணசாமி**

# ஒரு நிமிடம் உங்களோடு

*ஒரு ஜனநாயக நாட்டில் கல்வியும் மருத்துவமும் அனைவருக்கும் சமமாகவும் தரமாகவும் வழங்கப்பட வேண்டும். இவ்விரண்டுமே ஒரு நாட்டில் பெருவாரியான மக்களுக்கு எட்டாக்கனியாக இருப்பதோடு, இவை ஜனநாயகத்தின் பண்புக்கூறுகள் என்பதைக் கூட புரிந்து கொள்ளாதவாறே கல்வியும் விழிப்புணர்வும் மக்களுக்கு தரப்படுகிறது. தமிழ்நாட்டில் காமராஜரால் வலுவாகக் கட்டப்பட்ட பொதுக்கல்வி முறை சிதலமடையாமல் வலுவாகத் தொடர்ந்திருந்தால், "தரமான இலவச மருத்துவம் கல்வி" என்ற முழக்கங்கள் மக்கள் முழக்கங்களாக மாறி அது சாத்தியப்பட்டிருக்குமோ? தெரியவில்லை. ஆனால், நிச்சயம் ஒன்றைத் தீர்க்கமாக அனுமானிக்க முடிகிறது. அது, குறைந்தபட்சம் பொதுக்கல்வியாக நீடித்திருந்திருந்தால், 60களில் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டு அரசியலில் ஓர் திருப்பு முனை அமைந்தது போல, புதிய கல்வி கொள்கைக்கு எதிரான பெரும் பிரளயம் அல்லது அரசியல் மாற்றம் நிகழ்ந்திருக்கக் கூடும். பொதுக்கல்வி நீர்த்துப் போனதன் விளைவை இன்று முழுமையாக உணரமுடிகிறது.*

*அப்படியான அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சந்தைப் பொருளாதார நிதி நெருக்கடிகளைக் காரணம் காட்டி, பொதுக் கல்வி முறை சீரழிக்கப்பட்டு, தனியார்மயம் உட்புகுத்தப்பட்டது. இது கல்வியை பண்டமாக கருதி, மதிப்பெண்கள் பின்னால் மாணவர்களையும் பெற்றோர்களையும் ஓடச் செய்து, கல்வியின் உண்மையான பண்புக்கூறுகளை மழுங்கடித்து, மாணவர்களின் படைப்பாற்றல் திறனை குறைத்துவிட்டது. இதன் விளைவாக, அனைவருக்கும் தரமான, இலவசக் கல்வி கொடுக்க வேண்டியதற்கு பதிலாக, 40 ஆண்டுகளுக்கு முன் முன்மொழிந்த அருகமைப் பள்ளி முறை பொதுப்பள்ளி முறைமையை இன்னும் ஏன் சாத்தியப்படுத்த முடியவில்லை என ஆராய்ந்து அறிந்து, நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் தயாரிப்பதற்கு பதிலாக, அதற்கு நேர்மாறான, பள்ளி வயது எட்டியதிலிருந்து, உயர்கல்வி ஆராய்ச்சி கல்வி வரை, எப்படிப் படிக்க விடாமல் செய்வது என்பதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. அதுதான் புதிய கல்விக் கொள்கை முன்மொழிவுகள்-2016.*

*சுதந்திரப் போராட்ட காலத்திலேயே, அதுவும் இங்கிலாந்தில் கட்டாய கல்வி சட்டம்(1870) கொண்டுவந்த போதே, இந்தியாவுக்கும்*

அதுபோன்ற கல்வி வேண்டும் என்ற குரல், நம் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களால் எழுப்பப்பட்டது. ஆனால் அப்போது ஆங்கியல் ஏகாதிபத்தியத்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் சுதந்திர இந்தியாவுக்கான அரசியல் சாசனத்தில் ஏன் சாத்தியமாகவில்லை என்பதை புரிந்து கொள்வது சற்று கடினம். ஆனால் சுதந்திரப் போராட்டத்திற்கு பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், அவர்கள் சார்ந்து இயங்கும் கட்சிகள், இந்திய சாதிய கட்டுமான அடித்தளத்திலும், அரை நிலப்பிரபுத்துவ கட்டுமானத்திலும் இயங்குவதாலேயே இது சாத்தியமாகவில்லை. கல்வியை மருத்துவத்தை ஜனநாயகத்தின் பண்புக் கூறுகளாகக் கருதவில்லை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இந்நிலையில், இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலேயே பல ஜனநாயக விரோத கொள்கைகளை அதன் பண்புகளாகக் கொண்ட, மீண்டும் ஒரு பிராமணீய ஆட்சியை இந்தியாவில் கட்டமைக்க வேண்டும் என்று திட்டமிடுகிற ஆர்.எஸ்.எஸ்ஸின் அரசியல் பிரிவான பாஜக ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் படிப்பை பண்டமாக்கி, பெரும்பகுதி மக்களுக்கு கிடைக்கப்பெறாத பொருளாக மாற்றி தனது திட்டத்தை நிறைவேற்றும் முகமாகவே பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தரம் என்ற பெயரில் பல்வேறு தடைகளை உருவாக்கி, அதற்கு புதிய கல்விக் கொள்கை எனப் பெயரிட்டுள்ளது.

ஆசிரியராக, மாணவராக, பெற்றோராக கல்விச் செயல்பாட்டாளராக உள்ளோரை இந்தப் புதிய கல்விக் கொள்கை முன்மொழிவுகள்-2016 கொதிப்படையச் செய்துள்ளது. இதன் விளைவாக சுதந்திர இந்தியாவில் என்றும் இல்லாத வகையில் மேற்படி பிரிவினரை ஒன்றிணைத்துள்ளது.

இந்த 40 அமைப்புகளும் இணைந்து மாற்றுக் கல்விக் கொள்கையை வெளியிடத் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருக்கும் குழுவிற்கு முன்னாள் துணைவேந்தர் வே.வசந்தி தேவி அவர்களை தலைவராக நியமித்து இருக்கிறோம். பன்முகத் தன்மை கொண்ட எழுத்தாளரும் கல்வியாளருமான ஆயிஷா இரா.நடராசன் இதன் செயலர். இதுதவிர 16 பேர் இக்குழுவில் இடம் பெற்று உள்ளனர். அனைவரும் கல்வியாளர்கள், களப் பணியாளர்கள். மக்கள் சேவையே மகத்தான சேவை என வாழ்ந்து வருபவர்கள்.

முன்னுரை, கல்விக் கொள்கையின் நோக்கம், இலக்கு, இந்தியக் கல்வி வரலாறு, முன்பருவக் கல்வி, தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்கல்வி, ஆசிரியர் கல்வி, கலைதிட்டம், விளிம்பு நிலை மக்களுக்கான கல்வி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான கல்வி எனப் பிரிக்கப்பட்டு மாற்றுக் கல்விக் கொள்கை வரைவு அறிக்கை தயார்

செய்துள்ளனர் வசந்தி தேவி குழுவினர் விளிம்பு நிலை மக்களின், இன்னும் பிற பிரிவினரின் உள்ளீடுகள் தேவை எனப்படுகிறது. அதேபோல் மாணவர்கள் பார்வையில் கல்வி எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து கருத்துக்கள் வரப்பெற்றால் மாற்றுக் கல்வி கொள்கையை இறுதிப்படுத்தும் போது இவை குறித்து பரிசீக்கலாம்.

மாற்றுக் கல்விக்கான வரைவுக் கொள்கையை இந்திய, தமிழ்நாட்டு மக்கள் முன் இந்தக் கூட்டமைப்பினராகிய நாங்கள் திறந்த மனதோடு விவாதத்திற்கு முன்வைக்கிறோம். மின் அஞ்சல், வலைப்பூ, கடிதங்கள் வாயிலாக வரும் கருத்துக்களை எங்கள் மாற்றுக் கல்விக் குழுவினர் சிரத்தையுடன் பரிசீலித்து ஏற்கத்தக்கவற்றை ஏற்று இந்த ஆவணம் திருத்தம் செய்யப்படும். கூட்டமைப்பு மூலமாக கூட்டு விவாதங்களுக்கும் மக்கள் கருத்தறிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எல்லாவற்றையும் தொகுத்து நவம்பர் வாரம் இறுதி வாரத்திற்குள் வெளியிட இருக்கிறோம். அடுத்த கட்டமாக இந்த மாற்றுக் கல்வி கொள்கை சரத்துக்களை நடைமுறைப்படுத்தக் கோரி மத்திய மாநில அரசுகளை வலியுறுத்துவோம். இந்த ஆவணத்தில் உள்ளவையே இந்தியக் கல்வி நெருக்கடிகளுக்கு நிரந்தர தீர்வு என்ற விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்ப்போம். அரசியல் கட்சிகளிடம் ஆதரவு கோருவோம். கல்வி உரிமைப் பாதுகாப்பு கூட்டமைப்பு என்ற இந்த அமைப்பு இத்தகைய முயற்சி மேற்கொண்ட போது அதனை உடனடியாக ஏற்றுக் கொண்டு, வரைவு ஆவணத்தை வகுத்தஅளித்ததோடு, இதனை முழுமைப்படுத்தி மக்கள் முன் சமர்ப்பிக்கும் வரை எங்களோடு இரண்டறக் கலந்து இயங்க சித்தமாக இருக்கும் கல்வி குழுவினருக்கும் மனம் கனிந்த நன்றி. குறுகிய காலத்தில் புத்தகமாக இந்த ஆவணத்தை தமிழ்-ஆங்கிலம் என இரு மொழிகளிலும் கொணர்ந்த பாரதி புத்தகாலயத்திற்கு எங்கள் நன்றி. கூட்டமைப்பு பொதுக்குழு திட்டமிட்ட இப்பணிகளை முழு மனதோடு ஏற்று பட்டிதொட்டியெங்கும் எடுத்துச் செல்ல இருக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகள் பலப்பல.

**என். மணி**

அமைப்பாளர்,

கல்வி உரிமை பாதுகாப்புக் கூட்டமைப்பு

# எங்கள் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள்

கல்வி விடுதலைக்கானது, மனிதம் போற்றுவது, சமத்துவம் வளர்ப்பது என்பதே மாபெரும் சிந்தனையாளர்கள் கல்விக்கு வகுத்த லட்சியங்கள். அவற்றில் இருந்து இன்று நாம் வெகு தூரம் விலகிச் சென்றுவிட்டோம். இந்தியா அந்த லட்சியங்களை முற்றிலும் மறுக்கும் கல்வியை இன்று தழுவிக் கொண்டிருக்கிறது; அடிமைப்படுத்தும், அன்னியப்படுத்தும், மனிதம் அழிக்கும், ஏற்றத் தாழ்வுகள் வளர்க்கும், வணிகமயமான கல்வியே இன்றைய இந்தியக் கல்வி.

கல்வியின் நோக்கம் என்ன? கல்வி மனித நேயம் வளர்ப்பது; உணர்வுச் செழுமை ஊட்டுவது. மானுட சமுதாயத்தை அறிவு, உணர்வு, விடுதலை, சமூகப் பொறுப்பு ஆகிய விழுமியங்களின் வழி மேலும் மேலும் உயர்த்துவது கல்வி. இந்த நால்வகைப் பரிமாணங்களில் அறிவு வளர்த்தல் ஒன்றே கல்வியின் பொறுப்பு என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மற்ற மூன்றும் கல்வியின் பணிகளாகக் கருதப்படுவதில்லை. கல்வியின் முழுமைத்துவத்தை நாம் இழந்துவிட்டோமானால், மனித மாண்புகளும், நீதியும், முன்னேற்றமும் அற்ற ஒரு உலகைத்தான் நாம் உருவாக்குவோம்.

கல்விக்கு இத்தகைய உயர் இலக்கணம் ஒன்றை வகுக்கும் போதே, அது தொலை வானில் மின்னும் தாரகை என்பது நமக்குப் புரிகிறது. வரலாற்றில் என்றுமே கல்வி அனைத்து மக்களின் உரிமைகளை வளர்க்கும் சாதனமாக இருந்ததில்லை. ஆதிக்க சக்திகள் மக்களைப் பாகுபடுத்த, அடிமைப்படுத்த, ஆட்டிப்படைக்க பயன்படுத்திய வலிமை மிக்க ஆயுதமாகக் கல்வி இருந்திருக்கிறது. சமீப காலம் வரை கல்வி ஆளும் வர்க்கங்களின் ஏகபோகமாகத்தான் இருந்தது. இந்தியாவில் இந்த ஏகபோகம் சாதியம்-ஆண்ஆதிக்கம் என்ற தகர்க்கவியலா இரும்புச் சட்டகத்திற்குள் பாதுகாக்கப்பட்டது. நமது ‘தர்மம்‘ கல்வி மேல் சாதிகளுக்கு மட்டுமே உரியது என்று விதித்தது. அந்த தர்மத்தை மீறத் துணிந்தவர்களுக்கு எத்தகையக் கொடூர தண்டனைகள் விதிக்கப்பட்டன என்பதற்கு நம் புராண-இதிகாசங்கள் சான்று பகர்கின்றன. உண்மையான கல்வி ஆதிக்கங்களுக்கும், ஆணவங்களுக்கும் விடும் சவாலாகும்; ஆகவேதான் பெரும்பாலான மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது.

நவீன சமுதாயம் பழம் பாகுபடுத்தல்களை விட்டுவிட்டது; ஆயினும், பெரும்பாலான மக்களுக்கு சக்தியும், சமத்துவமும் அளிக்கும் அறிவை மறுப்பதற்குப் பல தந்திரோபாயங்களைக் கையாளுகிறது. ஆகவேதான், சிறந்த கல்வி சிந்தனையாளர் இவான் இலியிச் (Ivan Illyich) 'பள்ளியமற்ற கல்வி' வேண்டுமென்றார். புகழ் பெற்ற புட்சியாளர் பௌலோ ஃபிரெய்ரே மாற்றுக் கல்வியின் மூலம் 'ஒடுக்கப்பட்டோருக்கான கற்பிக்கும் கலை' (Pedagogy of the Oppressed) ஒன்றைத் தேடினார். கல்வியின் உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள் ஆகியவை பெரும்பாலான மக்களை ஒதுக்குதல், அவர்கள் மனதை மயக்குதல், எதிர்ப்பவர்களை தங்கள் பக்கம் ஈர்த்து, அமைப்பின் ஆதரவாளர்களாக ஆக்குதல் என்ற உள் நோக்கங்களுடன் வடிவமைக்கப்படுகின்றன.

இந்தியாவில் கல்வி பெரும்பாலும் அன்னியப்படுத்துகிறது. அன்னியப்படுத்தும் கல்வி மனித உரிமைகள், நீதி, சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டத் தவறுவது மட்டுமல்ல; தனது ஒரே குறிக்கோள் என்று சொல்லிக்கொள்ளும் அறிவு தேடலிலும் கடும் தோல்வியை சந்திக்கிறது. தன்னைச் சுற்றிலுமுள்ள உலகைக் காண விடாமல் திரை போடும் கல்வியின் மூலம் மாணவன் காண்பது உண்மையின் முழுமையல்ல, அதன் துகள்களைத்தான். உறவாடுதல் இன்றி, அறிதல் இல்லை. உன் சமூகத்துடன் நீ உறவாடாவிடில், அதன் கொடிய ஏழ்மை, இதயமற்ற சுரண்டல், பாகுபடுத்தல், ஆகியவற்றுடன் உனக்கு எந்த உறவும் இல்லையெனில், நீ பெறும் அறிவு குறைபட்ட அறிவே; பெரும்பாலும் திரிக்கப்பட்ட அறிவே.

நவீன உலகில் கல்வி என்பது ஒரு சமுதாயம் தன் குழந்தைகளுடன் செய்துகொள்ளும் ஒரு உடன்படிக்கை. சமுதாயம் தன் குழந்தைகளுக்கு ஒரு பவித்திர பிரமாணம் அளிக்கிறது. சமூக உற்பத்தியான உழைப்பிலிருந்து குழந்தைகளுக்கு விடுதலை அளித்து, 'மகளே, நீ கற்று, சிந்தித்து, உண்மையைக் கண்டுபிடித்து, புதுமையைப் படைத்து, திரும்பி வா; அதன் பின் என் உடலின், உயிரின் ஆழத்திலிருந்து, நீ பெற்ற சக்திக்கான கடனைத் திரும்பக் கொடு.' என்று சொல்கிறது. அவர்கள் பெறும் பல்லாண்டுக் கல்வி உழைப்புடனான உயிர் பந்தத்தை மீட்க முடியாமல் துண்டித்துக் கொள்வதற்காக அல்ல. மாறாக, ஒரு சமுதாயத்தின் குழந்தைகள், மனித சமுதாயம் முழுதும் சேர்த்து வைத்திருக்கும் ஞானத்தில் மூழ்கித் திளைத்து, பிரபஞ்சப் பார்வையைப் பெற்று, தங்கள் சமுதாயத்திற்குத் திரும்பி வந்து, சொந்த மண்ணில் இயங்கத் தொடங்க வேண்டும். அவர்கள் பெற்ற அறிவு, கற்றுத் தேர்ந்த தொழில்நுட்பம், ஆயிரமாயிரம் நாளங்கள் வழியாகப் பரவிச் சென்று, தங்களை ஈன்ற மண்ணின் வறண்ட பூமிக்கு வளம் சேர்க்க வேண்டும். அத்தகைய இரு வழிப் பிரவாகம் ஒரு புதிய தலைமுறை உலகக் குடிமக்களைப் (citizens of the world ) படைக்கும்.

### இந்தியாவின் பாகுபடுத்தும் கல்வி

*உலகிலேயே மிகுந்த ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட கல்வி அமைப்பை இந்தியா உருவாக்கி இருக்கிறது. ஏற்றத் தாழ்வுகள் இன்று கொடூர நிலை எய்தி, ஆயிரம் வழிகளில் இயங்குகின்றன. கல்வியின் ஒவ்வொரு இழையிலும் பாகுபாடு பின்னிக் கிடக்கிறது.*

*நமது சாதியப் படியமைப்பு போலவே, கல்வியிலும் ஆயிரம் மட்டங்கள். ஒவ்வொரு பொருளாதார மட்டத்திற்கும் ஒரு வகைப்பட்ட பள்ளி. இதில், வெவ்வேறு மட்டக் குழந்தைகள் சந்திப்பதற்கான வாய்ப்பே இல்லை. உலகம் முழுவதும், மிகுந்த வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகள் முதலாக, அனைத்துக் குழந்தைகளும் பொதுப் பள்ளிகளான அருகமைப் பள்ளிகளுக்குத் தான் போகிறார்கள். பள்ளிதான் பேதங்கள் உடைபடும், சமத்துவம் வளரும் களம். ஆனால், நம் நாட்டிலோ அந்தப் பேச்சுக்கே இடமில்லை.*

### சுதந்திரம் அடைந்த முதல் சில ஆண்டுகள்

*சுதந்திரத்திற்குப் பின்னான சில பத்தாண்டுகளில் அரசின் செலவிலேயே நடக்கும் பொதுப் பள்ளிகள்தான் பெரும்பாலும் இருந்தன. சுதந்திரப் போராட்டக் காலத்தின் கனவுகள் இன்னும் மடிந்து விடவில்லை. அந்தக் கனவுகளைக் கண்களில் ஏந்தி, தேசப் புனருத்தாரணத் திட்டங்கள் தீட்டப்பட்டன. நாடு முழுவதிலும் பள்ளிகள் அனேகமாக அருகமைப் பள்ளிகளாகத்தான் இயங்கின. பணக்கார வீட்டுக் குழந்தைகளும், சாமான்யரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில்தான் படித்தார்கள். அந்தத் தலைமுறை பொதுப் பள்ளிகளில் கற்றோர் அனைத்துத் துறைகளிலும் - அரசியல், பொருளாதாரம், அறிவியல், நிர்வாகம், பொது வாழ்வு போன்ற அனைத்திலும் - சிகரம் கண்டனர். இவை அனைத்தும் மேல் சாதியினருக்கு மட்டுமே உரியனவாக இருந்தது உண்மைதான். ஆனால், சில மாநிலங்களில் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு ஜனநாயகமாதல் நடந்து கொண்டிருந்தது.*

### நவீன தாராளமயக் காலம்

*பொதுப் பள்ளிகளின் வீழ்ச்சியும், பல்மட்டப் பள்ளிகளின் வளர்ச்சியும் ஒன்றாக நடந்தன. சொல்லப்போனால், பல்மட்டப் பள்ளிகளின் வளர்ச்சியின் காரணமாகவே, பொதுப் பள்ளிகளின் வீழ்ச்சி ஏற்பட்டது. கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகள் 70களின் பிற் பகுதியில் வரத் தொடங்கி, 90களுக்குள் பல மடங்கு பெருகின. மேல் வர்க்கங்களும், மேல் சாதிகளும் பொதுப் பள்ளிகளை விட்டு, தனியார் பள்ளிகளுக்குப் போகத் தொடங்கினர். பொதுப்பள்ளிகள் ஏழைகளுக்கு மட்டுமே உரியவையாகின; ஏழைகள் உலகின் அனைத்தும் தரமற்றவையாகக் கருதப்படுவது போல், அவர்கள் மட்டுமே கற்கும்*

பள்ளிகளும் தரமற்றவையாகப் பார்க்கப்பட்டன. வசதி படைத்தவர்கள் தங்கள் குழந்தைகள் போகாத பள்ளிகளுக்கு அரசு ஏன் செலவிட வேண்டும் என்று எண்ணத் தொடங்கினர். அரசு பெரும்பாலான குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிக்க வேண்டிய தன் பொறுப்பை உதறித் தள்ளியது; பொதுப் பள்ளிகளை மோசமாகப் புறக்கணிக்கத் தொடங்கிற்று. அவற்றின் உள் கட்டமைப்பு நாசமாகிற்று; ஆசியர் நியமிக்கப்படவில்லை. அனைத்தும் சேர்ந்து பொதுப் பள்ளிகளின் தரம் தாழ்ந்து போயிற்று.

நவீன தாராளமயம் நாட்டை ஆட்கொண்ட பிறகு, இன்று நாம் காண்பது வெட்கக்கேடான வர்க்கக் கல்வியே. கல்வி உலகம் அசுரத்தனமான போட்டி உலகாகிக் கிடக்கிறது. மனிதனை மனிதம் விழுங்கும் போட்டிக்குக் குழந்தைகள் பலியிடப்படுகிறார்கள். ஈவிரக்கமற்ற வணிக உலகிற்குள் அவர்கள் தள்ளப்படுகிறார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே போட்டிபோட, அதில் சிறக்க, வென்றெழ programme செய்யப்படுகிறார்கள். பெற்றோர்கள், பள்ளி நிர்வாகங்கள், பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துவோர் சேர்ந்து நடத்தும் அதிகார வேட்டையில் குழந்தைகள் பகடைக்காயாகிறார்கள். அமார்த்திய சென் சொல்வதைப் போல், “முதல் மாணவனை உருவாக்கும் தேசிய வெறி” அனைவரையும் ஆட்கொள்கிறது.

மத்தியதர, மேல் வர்க்கத்தினர் தங்கள் குழந்தைகள் உலகை வெல்வதற்காகவென்றே programme செய்கின்றனர். இந்தக் குழந்தைகளுக்கு வானமே எல்லை. இந்த வர்க்கக் குழந்தைகள்தான் தேசத்தின் பெருமையைப் பறை சாற்றுபவர்கள்; புதிய நூற்றாண்டின் சூபர் பவர் ஆகிய இந்தியாவின் பதாகையை ஏந்தி உலகை வெல்ல வளைய வரும் வாலிபர் குழாம் இது. இவர்களின் ஆளுமைக்கும், ஆதிக்கத்துக்குமான ஒரு தனி உலகம் எப்பாடுபட்டேனும் உருவாக்கப்பட வேண்டும். அந்த ஏகபோக உலகம் கண்டவர்களும் நுழைந்துவிடா வண்ணம் பதுகாக்கப்பட வேண்டும். அதற்காக குண்டு துளைக்காத கவசங்களும், தாண்டமுடியாத மதிற்சுவர்களும் கட்டமைக்கப்பட வேண்டும்.

### பாகுபடுத்தும் பாடத் திட்டம் உருவாக்கப்படுகிறது

ஏற்றத் தாழ்வும், பாகுபடுத்தலும் பல்வகைப் பள்ளிகளின் வழி மட்டுமே நடைபெறுவதில்லை. பாடத்திட்டம், கற்பித்தல், திறனாய்வு-தேர்வு முறைகள் ஆகியவையும் இதே வேலையைச் செய்கின்றன. பாடத் திட்டம் எந்த குறிக்கோளுடன் உருவாக்கப்படுகிறது? வசதி பெற்ற குழந்தைகளுக்குப் போட்டியில் அனுகூலம் (advantage) அளிப்பதற்கும், அவர்கள் உலகளாவிய போட்டியில் வென்று, உலகாளுவதற்கும் ஏற்ற வண்ணம் பாடத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. அது பெரும்பாலான

குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறது. ஏழ்மையில் வாடும் முதல் தலைமுறைக் குடும்பத்துக் குழந்தைகள் அந்தப் பாடத்திட்டத்தின் பெரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற படாதபாடுபடுகின்றனர். அவ்வாறு சில ஆண்டுகள் தவிப்பிற்குப் பின் பள்ளியைவிட்டு விலகி விடுகின்றனர். அந்தக் குழந்தைகள் பெரும்பாலும் நம் சாதிய-ஆணாதிக்க சமுதாயத்தின் விளிம்பு நிலை மக்களான எஸ்ஸி-எஸ்.டி, சிறுபான்மைப் பிரிவுகளைச் சேர்ந்தவரும், அவற்றின் பெண்களுமாவர். தாங்கமுடியா சுமை கொண்ட பாடத் திட்டத்தை உருவாக்குவதன் உள் நோக்கம் (hidden agenda ) பெரும்பாலான குழந்தைகளைக் கல்வி அமைப்பிலிருந்து விரட்டுவதுதான். அந்த வர்க்க-சாதி நோக்கம் அருமையாக நடந்தேறுகிறது.

பாடத்திட்டம் பாகுபடுத்துவது அதன் சுமையினால் மட்டுமல்ல, உள்ளடக்கத்தின் (content) மூலமும்தான். பாடத் திட்ட உள்ளடக்கம் கிராமப்புற, உழைக்கும் வர்க்கக் குழந்தைகளின் வாழ்வுலகிற்கும், கலாச்சார சூழலுக்கும் கொஞ்சமும் பொருத்தமற்றதாக இருக்கிறது. அது மத்தியதர வர்க்க உலகில் வேர் கொண்டதாய், அதன் கலாச்சாரம், கண்ணோட்டம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் போற்றுவதாகவே உள்ளது. உழைக்கும் வர்க்கக் குழந்தையின் வலிமைகள், திறமைகள், கலாச்சார-சிந்தனைச் செழுமைகள் ஆகியவற்றிற்குப் பாடத்திட்டத்திலும், வகுப்பறையிலும் இடமே இல்லை. உழைக்கும் வர்க்கக் குழந்தையின் பிரபஞ்சமே இவ்வாறு மறுக்கப்படுவதும், அவள் சிறுமைப்படுத்தப்படுவதும், அவளே மறுக்கப்படுவதும் இன்றைய கல்வியின் சோகங்களில் முக்கியமானது.

### வகுப்பறை மொழி

வகுப்பறை மொழியே கருணையின்றி அன்னியப்படுத்துகிறது. உழைக்கும் வர்க்கக் குழந்தையின் பேச்சு மொழியே கொச்சையான, பாமர மொழி என்று எள்ளி நகையாடப்படுகிறது. கிராமப்புற தலித் காலனியிலிருந்தோ, நகர்ப் புறச் சேரியிலிருந்தோ, வகுப்பறைக்குள் முதல் முறையாகக் காலடி எடுத்து வைக்கும் சிறுமி வகுப்பறைச் சூழலின் அச்சுறுத்துதலில் வெம்பி, வதங்கி, திகைத்துப் போய், மிரண்டு போய், தன் குரலையே இழக்கிறாள். பின், கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மௌனக் கலாச்சாரத்திற்குள் மூழ்கிப் போகிறாள்; அந்தக் மௌனக் கலாச்சாரமே ஒடுக்கும் அடிமை சமுதாயத்திற்கு அங்கீகரமாகிறது.

மொழியைப் பற்றிப் பேசும்போது, பாகுபடுத்தும் முறைகளில் முக்கியமானது கல்வி மொழி. ஆங்கில மொழியைச் சுற்றி பாகுபடுத்தும் ஒரு பிரபஞ்சமே உருவாகி இருக்கிறது. ஆங்கிலம் ஒன்றே இன்று வாய்ப்பு, வளர்ச்சி, ஆதிக்கம், ஆக்கிரமிப்பு அனைத்துக்குமான மொழி.

இன்றைய இந்தியாவில் ஆங்கிலத்தை லகுவாக, லாவகமாகக் கையாள முடிந்தோரும், தங்கள் தாய் மொழி / மாநில மொழியில் மட்டுமே இயங்க முடிந்தோரும் இரு வேறு உலகங்களைச் சேர்ந்தவர்கள்.

### வணிகப் பண்டமாக மாறும் கல்வி

*அறிவு என்பதே கடைச் சரக்காக, சந்தைப் பண்டமாக ஆனதுதான் இறுதிச் சீரழிவு. உலக கார்பொரெட் முதலாளித்துவம்தான் இன்று அறிவுக்கு இலக்கணம் வகுக்கிறது. அதற்கு விலை நிர்ணயிக்கிறது. கார்ப்பொரெட் சந்தையில் அந்தக் கட்டத்தில் எதற்கு அதிக விலை இருக்கிறதோ, அதுதான் அனைவரும் வேண்டும் உயர்ந்த அறிவு, ஒப்பற்ற ஞானம். உயர் கல்வி நிறுவங்கள் அவசரம் அவசரமாகத் தங்கள் சட்டங்களையும், சாசனங்களையும் திருத்தி, அந்தப் பகட்டுத் துறைகளுக்கு முன்னுரிமையைத் திருப்புகின்றன. மனித வரலாறு முழுதும் ஆராதிக்கப்பட்ட அறிவின் அர்த்தத்தில் இது ஆழிச் சுழற்சி. இன்று உலக கார்ப்பொரெட் முதலாளித்துவம் ஆணவச் செறுக்குடன், மானுடத்தின் ஞான சிகரங்களைத் தரைமட்டமாக்கி, லாபப் பெருக்கு என்ற ஒற்றைப் பட்டறையில் அறிவை வார்க்கத் துணிந்த போது, அறிவிற்கு மீண்டும் இலக்கணம் படைப்பது நம் காலத்தின் பெரும் பொறுப்பாகிறது.*

### வேறு ஒரு உலகம் சாத்தியமே!

*இத்தகைய அநீதி மிகுந்த, வர்த்தகமயமான, அடக்குமுறைக் கல்வியை மாற்றும் பிரம்மாண்டப் பணியை எங்கு தொடங்குவது? வேறொரு உலகம் சாத்தியம்தானா? மனிதம் போற்றும், ஜனநாயக, விடுதலைக் கல்வியைக் கட்டி எழுப்புவதற்கான் செங்கற்களை எவ்வாறு வார்க்கப் போகிறோம்? அந்த இமாலயப் பணியைத் தொடங்கும் போது, இன்றைய கல்வியின் அனைத்துப் பரிமாணங்களையும், அதன் அமைப்பு, உள்ளடக்கம், கற்பிக்கும் முறை, நிர்வாக, அதிகார அமைப்பு அனைத்தையும், மனதில் கொண்டு ஏற்க வேண்டும்.*

### மக்கள் சாசனம்

*புதிய கல்விக் கொள்கையானது இன்று நம்மை வருத்தும் நோய் நாடி, நோய் முதல் நாடி, அதனைத் தீர்க்கும் சிகிச்சையாக இருக்க வேண்டும். அடுத்து, இந்தத் தேடலில், நமது வரலாற்று முன்னோடிகள், உலகெங்கிலும் தலை சிறந்த கல்வி அமைப்பை உருவாக்கி, அதன் மகத்தான பலன்களை அறுவடை செய்து வரும் நாடுகளின் அனுபவங்களின் அடி ஒட்டி உருவாக்க வேண்டும்.*

*இன்றைய இந்தியக் கல்வியின் முதல் தோல்வி, முதல் துயரம் எது?*

*உலகில் எங்கும் இல்லா அளவிற்குக் கொடும் ஏற்றத் தாழ்வுகள் கொண்ட கல்வி அமைப்பு; வெவ்வேறு பொருளாதார மட்டத்துக்*

குழந்தைகளுக்கும் வெவ்வேறு தரமுடைய பலமட்டப் பள்ளிகள். உச்சி குறுகி, அடி பரந்த இந்த சமுதாயப் பிரமிடின் உச்சியில், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வசதி படைத்தோர் இன்றைய உலகின் வாய்ப்புகளை அள்ளிச் செல்லும் திறமை பெருகின்றனர். பெரும்பான்மையினோர் தகுதியற்றவர்கள் என்று முத்திரைக் குத்தப்பட்டு, வடிகட்டப்பட்டு, வெளியே தள்ளப்படுகின்றனர். இவ்வாறு இழப்புக்கும், தவிப்புக்கும் உள்ளாகுபவர் பெரும்பாலும் நமது சாதிய சமுதாயத்தின் அடித் தட்டினரான தலித்துகள், பழங்குடியினராகியோரே.

இந்தியக் கல்வியின் இந்த வர்க்க-சாதியத் தன்மைக்குக் காரணம், கல்வி தங்குதடையில்லா தனியார்மயமாதலும், வணிகமயமாதலும், அரசு அனைவருக்கும் சம தரமுடைய கல்வி அளிக்கும் தன் அடிப்படைப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டதும்தான்.

உலகின் வளர்ச்சி அடைந்த அனைத்து நாடுகளும், இன்று வேகமாக வளரும் பல நாடுகளும் நிறுவியிருக்கும் கல்வி அமைப்பு ஒரே வகைப்பட்டதுதான். அருகமைப் பள்ளிகளைக் கொண்ட பொதுப்பள்ளி முறையில், அரசின் முழு நிதிப் பொறுப்பில், அனைத்துக் குழந்தைகளும், பெரும் பணக்காரரும், அடித்தட்டு ஏழைகளும் ஒரே பள்ளிகளில், அனைவரும் இலவசமாக, தாய்மொழி வழியே கற்கும் பள்ளிகள் மட்டுமே இந்த நாடுகள் அனைத்திலும் உள்ளன. இந் நாடுகளின் பெரும் வளர்ச்சியின் அஸ்திவாரமே இத்தகைய பொதுப் பள்ளி முறைதான். அமெரிக்காவோ, ஐரோப்பிய நாடுகளோ, குறிப்பாக பிஃலாந்து, நார்வே, ஸ்வீடன் என்ற கல்வியில் ஒளிரும் ஸ்கான்டிநேவிய நாடுகளோ, கிழக்கு ஆசிய நாடுகளோ, இவை அனைத்திலும் ஊன்றி செழித்திருப்பது இவ்வமைப்புதான்.

இத்தனை முன்னணி நாடுகளும் இப் பொதுப் பள்ளி அமைப்பில் வைத்திருக்கும் அசைக்க முடியா நம்பிக்கையின் ஆதாரக் குறிக்கோள் என்ன? ஒரு நாடு தன் முழு மனித வள வளர்ச்சியைப் பெற வேண்டுமென்றால், அனைத்துக் குழந்தைகளுக்கும் சம வளர்ச்சி வாய்ப்பு அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் அறிவு சுரந்து வரும், என்றைக்கும் பொய்யா பொங்கு மா கடலாக மாறும். அது அரசின் முதலீட்டில்தான் நடக்க இயலும்; இலவசமாக அளித்தால்தான் அனைத்துக் குழந்தைகளின் திறன் அக் கடலில் சேரும். இந்த நாடுகள் எல்லாம் சமத்துவ சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்ட சோஷலிச நாடுகள் அல்ல. அனைத்தும் முதலாளித்துவ நாடுகள். ஆனால், மக்கள் நல அரசுகள் (welfare states). இந்தியா மட்டும் இந்த வரலாற்றுப் பாதைக்கு விதி விலக்காக முடியாது.

மேற்சொன்ன இரு அடிப்படைகளின் மேல் இந்த மக்கள் சாசனம் எழுப்பப்படுகிறது.

1. அரசு அனைத்துக் குழந்தைகளுக்கும், 18 வயது வரை, சிறந்த சம தரமுடை கல்வியை உறுதி செய்ய வேண்டும். இக் கல்வி அமைப்பு மேல் சொன்ன மற்ற நாடுகள் போன்று, அருகமைப் பள்ளிகளைக் கொண்ட பொதுப் பள்ளிகளாக இருக்க வேண்டும்.

- அனைத்துப் பொருளாதார, சமூக மட்டக் குழந்தைகளும், எத்தகைய பாகுபாடுமின்றி ஒரே பள்ளிகளில் கற்க வேண்டும். ஒரு அருகமைப் பகுதியைச் சேர்ந்த குழந்தைகள் அனைவரும் ஒரே பள்ளியில் படித்தல்.
- 8 ம் வகுப்பு வரை குழந்தைகள் நடந்து செல்லக் கூடிய தொலைவிலேயே பள்ளிகள் அமைய வேண்டும். அதற்கு அப்பால் வசிக்கும் குழந்தைகள் சேர்க்கப்படக்கூடாது. 8 ம் வகுப்பு வரை வாகனங்களில் ( சொந்த வாகனமோ, பள்ளி / பொது (public transport) வாகனமோ) பயணம் செய்தல் அனுமதிக்கக் கூடாது. சில தனிப்பட்டத் தேவைகளுக்காக, மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் போன்றவருக்கு மட்டுமே வாகன அனுமதி அளிக்கப்பட வேண்டும். மழலையர் பள்ளிகளுக்குக் குடும்பத்தினரோ, பள்ளி உதவியாளர்களோ குழந்தைகளைக் கொண்டு விட வேண்டும்.
- தரமான முன் பருவக் கல்வி அனைத்துக் குழந்தைகளுக்கும் 3 வயதிலிருந்து அளிக்க வேண்டும்.
- 18 வயது வரை எந்தக் குழந்தையும், குடும்பத் தொழில் உட்பட்ட, எத்தகைய தொழிலிலும், ஈடுபடக்கூடாது.
- சமீபத்தில் மத்திய அரசு கொண்டு வந்துள்ள Child Labour ( Prohibition and Regulation) Amendment Act, 2016 நாட்டின் அடித்தட்டுக் குழந்தைகளுக்கு மிகப் பெரும் அநீதியை விளைவிக்கும். 14 வயதுக்கு முன்பே அவர்கள் குடும்பத் தொழிலிலோ, கூலி வேலையிலோ தள்ளப்பட்டு, கல்வியையும், வாழ்வையும் இழக்கும் பெரும் கொடுமை நிகழும். இச் சட்டத் திருத்தம் உடனே திரும்பப் பெற வேண்டும்.
- கல்வி தனியார் மயமாதலும், வணிகமயமாதலும் அனுமதிக்க இயலாது. கல்வி முழுதும் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளுக்கு அனுமதி இல்லை.
- தனியார் பள்ளிகள் கட்டணம் இன்றி, சேவை நிறுவனங்களாக இயங்கினால், அனுமதிக்கப்படலாம்.
- ஒரு மாநிலத்திற்கு ஒரு பொதுவான பாடத் திட்டம் (curriculum) வரையறுக்கப்பட வேண்டும். மத்திய அரசு நடத்தும் சிபிஎஸ்இ, அல்லது வேறு வகைப்பட்டத் திட்டங்களோ அனுமதிக்கப்படமாட்டா. மத்திய அரசுப் பணியாளர்கள், மற்ற

மாநிலங்களுக்குப் பணி மாற்றம் பெறக்கூடியவர்கள் மட்டுமே, மத்திய அரசின் பாடத் திட்டத்திற்குள் வரலாம். அதற்காக கேந்திரிய வித்யாலயா போன்ற பள்ளிகள் அனுமதிக்கப்படும். இவற்றில் மற்ற மாணவர் சேர்க்கை கூடாது.

2. கல்விக்கான முழு நிதியும் அரசே செலவழிக்க வேண்டும். வளரும் தேவைகளுக்கும், ஒரு குழந்தையும் விடப்படாமல், அனைத்துக் குழந்தைகளும் சமமான கல்வி பெறுவதற்கு வேண்டிய வண்ணமும், நிதி ஒதுக்கப்பட வேண்டும். தேச வருமானத்தில் குறைந்த பட்சம் 6% என்று 1960-களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு இன்றுவரை 3.75%-க்கு மிகவில்லை. அமர்த்திய சென் சொல்கிறார், " கல்விக்கும், சுகாதாரத்திற்கும், இந்திய அரசிடம் பணமில்லை என்று சொல்வது அப்பட்டமான, முழுப் பொய்."

- அனைத்துப் பள்ளிகள் / கல்லூரிகள்/ பல்கலைக் கழகங்கள் /ஆய்வு நிறுவனங்கள் அனைத்திலும் கட்டுமானங்களை சிறந்த தரத்திலும், வளர்ந்து வரும் உலகத் தரத்திற்கு ஈடாகவும் அரசு அமைக்க வேண்டும். ஆண்டு தோறும் அவற்றை மேம்படுத்துதல்.
- போதுமான ஆசிரியர் பள்ளிகளில் / கல்லூரிகளில் நியமனம் செய்தல். ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர், ( ஒரே குழந்தைதான் ஒரு வகுப்பில் இருந்தாலும்) அத்துடன், பல சிறப்புப் பாடங்களுக்கான ஆசிரியர் ( ஓவியம், உடற்கல்வி, கைத்தொழில், சமூகப் பணி, என்.எஸ். எஸ். ) நிறுவுதல்.

3. தாய் மொழி / பிராந்திய மொழி ஒன்றே கல்வி மொழியாக (medium) இருக்க வேண்டும்.

- ஆங்கிலம் கல்வி மொழியாக அனுமதித்தல் கூடாது. ஆங்கில வழிக் கல்வி நம் வகுப்பறைகளைப் புரியாமை இருளில் மூழ்கடித்து, கல்வியை வெறும் மனனமாக்கி விட்டது. ஆனால், அதன் சர்வதேச முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, ஆங்கிலம் இரண்டாவது / மூன்றாவது மொழியாகச் சிறப்பாகக் கற்பித்தல். அதற்கு, மற்ற ஆங்கிலம் பேசாத நாடுகளில் நிலவுவதைப் போன்று, ஒரு மொழியை இரண்டாவது மொழியாகக் கற்பிக்கும் தனிப்பட்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- எந்த ஒரு மொழியும் நாடு முழுதும் அனைத்துக் குழந்தைகளும் கற்க வேண்டும் என்ற நிர்பந்தம் கூடாது. ஒரு பிராந்தியக் குழந்தைகள் மற்றொரு பிராந்திய மொழியை, விருப்பத்திற்குகந்து கற்கும் வசதிகள் ஏற்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, வட மாநிலத்தவர், ஒரு தென்னிந்திய / வட கிழக்கு மொழியைக் கற்கலாம்.

4. கல்வித் திட்டம், பாடத்திட்டம், உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள்,

அனைத்தும் நம் அரசியல் சாசன விழுமியங்களை ஒட்டியே, சிறந்த தரமுடையதாக அமைக்கப்படவேண்டும்.

- மாபெரும் கல்வியாளர்கள், சமுதாய சிற்பிகள் ஆகியோரின் சிந்தனைகளில் மலர்ந்த இலட்சியங்கள் கல்விக் கொள்கையின் ஆன்மாவாக விளங்க வேண்டும். பொருளாதார உற்பத்திக்கான திறன்களை மட்டுமே கல்வி வளர்ப்பதாக இருத்தல் கூடாது.
- கல்வி மனித ஆற்றலைப் போற்றி வளர்க்கும் சமுதாய சாதனம். கல்வியின் நோக்கம் மனித நேயத்துடன் கூடிய ஜனநாயக, சமத்துவ, சமயம் சாராத சமூகத்தைக் கட்டி எழுப்புவதாகும். தனிமனிதரிடையே புதைந்திருக்கும் முழு ஆளுமையை வளர்த்தெடுப்பதும், அதை மொத்த சமுதாயத்தின் நலனுக்குப் பயன்பெற வைப்பதும் கல்வியின் இலக்குகளாகும். கல்வி சிலரின், இலாபம், ஆதிக்கம், அதிகாரக் குவியல் ஆகியவற்றிற்கான சாதனமாக இருத்தல் கூடாது. கல்வி மாணவரிடம் சமூகப் பிரச்சனைகள் குறித்த உணர்வும், புரிதலும், அவற்றைத் தீர்ப்பதற்கான ஈடுபாடும் வளர்க்க வேண்டும்.
- அத்துடன், ஆயிரம் பாகுபாடுகளும், ஒடுக்குமுறைகளும் கொண்ட நம் நாட்டில், பொருளாதார, சமூக அநீதிகளுக்கு உட்பட்டோரை மேலெழச் செய்யும் வலிமை மிக்க ஆயுதமாகக் கல்வி விளங்க வேண்டும்.
- இத்தகைய கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கு, பெரும் பாராட்டுகளைப் பெற்ற தேசிய கல்வித் திட்டம், 2005 (National Curriculum Framework, 2005) இனைப் பயன்படுத்தலாம்.
- சுமையற்ற பாடத்திட்டம் தேவை. வயதுக்கேற்ற கல்வி என்பது வலியுறுத்தப்படுதல். 8 வயதுக் குழந்தைக்கு, 10 வயதுக்குரிய பாடங்கள் வகுத்தல் தரமான கல்வி அல்ல; தரமற்ற கல்வி என்பதை வலியுறுத்தல். யஷ்பால் கமிட்டி சுமையின்றிக் கற்றல் தொடர்பாக அளித்த பரிந்துரைகளை நிறைவேற்றல்.
- 11 ம் வகுப்பிலிருந்தே பாடப் பிரிவுகளைத் (specialisation) தேர்ந்தெடுத்தல் கூடாது. பல வகைப்பட்ட அறிவுத் துறைகளில் மாணவர் பள்ளிக் கல்வி முடியும் வரையேனும் கற்க வேண்டும். இன்று தமிழ் நாட்டின் அனைத்துத் தனியார் பள்ளிகளிலும், 10 ம் வகுப்புக்குப் பின் வரலாறு, சமூக இயல் போன்ற பாடங்கள், மனிதனை, சமூகத்தை, உலகைப் புரிந்து கொள்ளும் பாடங்கள் இல்லை. அத்துடன், தொழிற்கல்வி நுழைவிற்கும், மற்ற அனைத்து நுழைவுத் தகுதிக்கும், பள்ளி இறுதியின் அனைத்துப் பாட மதிப்பெண்களையும் தகுதிக்காக எடுத்துக் கொள்ள வேண்டும். உலகின் பல நாடுகளில், Social Sciences, Humanities, Science,

Mathematics, Languanges, Physical Education போன்ற அனைத்துப் பாடங்களும், பள்ளி இறுதிவரை மட்டுமல்ல; கல்லூரியில் முதல் இரண்டு ண்டுகளும் கற்க வேண்டும். அதற்குப் பின்தான் தனது துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- வகுப்பறைக் கல்விக்கு அப்பால், மாணவரின் பல திறமைகள், படைப்பாற்றல் ஆகியவற்றை வளர்க்க, விளையாட்டு, சங்கீதம், ஓவியம் முதற்கொண்ட கலைகள் கற்றுத் தருதல். பல வளர்ந்த நாடுகளில் இத்தகைய திறமைகளும், பல தொழிற் திறமைகளும் அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயப் பாடங்களாக மேல் நிலைக் கல்வி வரை கற்றுத் தரப்படுகிறது.
- 5 ம் வகுப்பு வரை வீட்டுப்பாடம் கொடுக்கக் கூடாது. மாறாக, பல வகைப்பட்ட project work, குழந்தைகள் தாங்களாகவே சிந்தித்து, சுற்றிலுமிருக்கும் உலகை, சமுதாயத்தை கவனித்து, சிறிய கட்டுரைகள் எழுதுதல்.
- மாலை /காலை நேர டியூஷன் கறாராகத்தடுத்தல். அதில் ஈடுபடும் ஆசிரியருக்கு தண்டனை வழங்கல்.
- மழலையர் வகுப்புகளிலிருந்தே குழந்தைகள் கேள்வி கேட்க, சிந்திக்க, புரிந்து கொள்ள, புரிந்ததை தங்கள் வாழ்க்கைச் சூழலுடன் பொருத்திப் பார்க்கத் திறமைகளை வளர்த்தல்.
- தொடக்கப் பள்ளிகள் முதல் அனைத்துப் பள்ளிகளிலும் நல்லதோர் நூல் நிலையம் தேவை. ஒன்றாம் வகுப்பிலிருந்தே குழந்தைகள் நூல்நிலையத்திற்குச் சென்று புத்தகம் படிக்கும் பழக்கம், அருகில் ஆசிரியர் இருந்து குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை உருவாக்குதல், வாசித்த புத்தகத்தைப் பற்றி வகுப்பில் ஒவ்வொரு குழந்தையும் பேச வேண்டும்.
- நவீன தகவல்-தொழிற்நுட்ப உபகரணங்கள் அனைத்துப் பள்ளிகளிலும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
- ஆசிரியர் பயிற்சிக்குப் பெரும் முக்கியத்துவம் அளித்து, அதனைப் பல ஆண்டுகள் நீடித்து, பணிக்காலம் முழுதும் தொடர்ந்து ஆசிரியர் தங்கள் அறிவையும், திறமைகளையும் வளர்க்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். ஆசிரியர் பள்ளியின் அருகமை சமுதாயத்துடன் ஒன்றும் பண்புடையோராக விளங்க வேண்டும்.
- கல்வித் திட்டம், பாடத் திட்டம், கற்பித்தல் முறைகளை உருவாக்குவதில் ஆசிரியருக்கு முக்கியப் பங்கு அளித்தல் வேண்டும்.

5. அநேகமாக அனைத்து நாடுகளிலும், குறிப்பாக முன் குறிப்பிட்ட வளர்ந்த நாடுகள் அனைத்திலும் தேர்வுகளும், மாணவரை எந்த

வகுப்பிலும் பெஃயிலாக்குவதும் என்றோ கைவிடப்பட்டு விட்டன. அதே போன்று இங்கும் மாணவரை வருத்தி, அச்சுறுத்தும் தேர்வுகள் கைவிடப்பட வேண்டும். அந் நாடுகள் போல் ஆசிரியர் ஒவ்வொரு குழந்தையின் ஒவ்வொரு திறனையும் தொடர்ந்து நாள்தோறும் மதிப்பிடுதல்; பின் தங்கிய மாணவருக்கு, தனி கவனம் செலுத்தி திறன் பெறச் செய்தல் போன்ற முறைகள் கடை பிடிக்கப்பட வேண்டும்.

- மாணவர் போட்டி போடும் முறையைத் தவிர்த்து, குழுவாகக் கற்றல் போன்ற, ஒன்றுபடுதல், ஒத்துழைத்தல், மற்றவருடன் அனுசரித்தல், அவரைப் பாராட்டுதல் போன்ற பண்புகள் வளரும் முறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
- நாடு முழுமைக்கும் ஒரே வகையான தேர்வு முறைகள் எந்த நாட்டிலும் இல்லை; இங்கும் கூடாது.

6. கல்வி நிர்வாகத்தில் பெரும் மாற்றங்கள் தேவை. அதிகாரம் மையப்பட்டுக் கிடக்கும் நிலை மாறி, அதிகாரப் பரவலும், அதிகாரிகளின் கையிலிருந்து கல்வி மீட்கப்படுதலும் (de-bureaucratisation) தேவை.

- கல்வி பொதுப் பட்டியலிலிருந்து, 1975-க்கு முன் இருந்தது போன்று, மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். நாட்டின் கூட்டாட்சி முறையையும், சமூக-கலாச்சார- மொழிப் பன்முகச் செழுமையையும் காப்பாற்ற இது அத்தியாவசியம். மிகச் சிறிய நாடுகள் அன்றி வேறு எந்த நாட்டிலும் கல்வி நாடு முழுவதற்கும் ஒன்றாக இல்லை.
- உயர் கல்வி உட்பட அனைத்துக் கட்டக் கல்வியிலும் மாநிலங்களுக்கு முழு அதிகாரம் அளிக்கபப்ட வேண்டும்.
- மாநில மையத்திலும் அதிகாரக் குவிப்பு கூடாது.
- தமிழ் நாட்டில் 1970களுக்கு முன் இருந்த வண்ணம், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு கல்வி நிர்வாகம் மாற்றப்பட வேண்டும். பள்ளிகள் பஞ்சாயத்துகள், நகராட்சிகளால் நிர்வகிக்கப்படுதல். அன்றாடக் கண்காணித்தல் பெற்றோர் குழுக்கள் கையில் ஒப்படைக்கப்படுதல்; அக் குழுக்களில் பெண்களுக்கும், எஸ்.ஸி / எஸ்.டி.யினருக்கும் தலா மூன்றில் ஒரு பங்கு ஒதுக்குதல். அனைத்து வளர்ந்த நாடுகளிலும் இத்தகைய கல்வி நிர்வாகம்தான் அமைந்திருக்கிறது.
- தமிழ் நாட்டில் ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகள், கல்வித் துறையுடன் இணைக்கப்பட வேண்டும்.
- ஆசிரியர் பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள்தான் வசிக்க வேண்டுமென்ற ஆணை கடை பிடிக்கப்பட வேண்டும்.

- அரசு பள்ளி ஆசிரியரிடையே இட மாற்றங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்படுதல்; பணிக்காலத் தொடக்கத்தில் ஒரு பள்ளியைத் தேர்வு செய்து, அங்கேயே பணி உயர்வு பெறுதல்.
- கல்வி நிலையங்கள் ஜனநாயகத்தின் தொட்டில்கள். மாணவர் ஒரு ஆரோக்கியமான ஜனநாயக சமுதாயத்தின் பிரஜைகளாக வளர்வதற்கான் பயிற்சி மாணவப் பருவத்திலேயே அளிக்கப்பட வேண்டும். அனைத்து உயர்கல்வி நிலையங்களிலும், மேல் நிலைப் பள்ளிகளிலும் மாணவர் பேரவைகள் அமைக்கப்பட வேண்டும். அவற்றிற்கான தேர்தல்கள் ஜனநாயக முறையில் நடக்க வேண்டும். பள்ளி / கல்லூரி / பல்கலைக்கழக அதிகார அமைப்புகளில் மானவருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

7. கொடிய ஏற்றத் தாழ்வுகளில் கட்டுண்டு கிடக்கும் இந்திய சமுதாயத்தில், அதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன், பின் தங்கிய மாணவருக்கு, மற்றவர்களுக்கு சமமான நிலை அடைய அனைத்தும் சலுகைகளிம், வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.

- எஸ்.ஸி., எஸ்.டி., சிறுபான்மையோர், சமூக-கல்வி நிலையில் பிற்பட்டவர் அனைவருக்கும் அனைத்து மட்டக் கல்வியிலும், அனைத்து நிறுவனங்களிலும் ஒதுக்கீடு உறுதிப்படுத்தல்;
- இப்பிரிவினைச் சேர்ந்தவருக்கும், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், மாற்றுப் பாலினத்தினர் (transgenders) ஆகியோருக்கும் முழு உதவித் தொகையும், மற்ற நிதி உதவியும் ஆராய்ச்சிக் கல்வி வரை அளித்தல்;
- மேற் சொன்னவர்களுக்கு உண்டு-உறைவிடப் பள்ளிகளும், விடுதிகளும் பெரும் எண்ணிக்கையிலும், சிறந்த தரமானவையாகவும் அமைத்தல்;
- மதிய உணவுத் திட்டம் 12 ம் வகுப்பு வரை விரிவாக்கப்பட வேண்டும்.
- கல்வி நிறுவனங்களில் அனைத்துப் பாகுபடுத்தலும் தடுக்கப்பட்டு, குற்றம் புரிவோர் தண்டிக்கப்படுதல்.

8. உயர் கல்வி அனைவரின் உரிமை, வசதி உடையவருக்கு மட்டுமல்ல, என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

- இந்தியாவில் இன்றும் உயர்கல்விக்குச் செல்பவர் 13% தான் (Gross Enrolment Ratio). உயர்கல்வி பெற முடியாமல் தவிப்பவரில் பெரும்பாலானோர் எஸ்.,எஸ்.டி., சிறுபான்மையினோர், மற்ற ஒடுக்கப்பட்ட பிரிவினரைச் சேர்ந்தவர், குறிப்பாக இப் பிரிவைச் சார்ந்த பெண்கள்.

- உயர் கல்வி நிலையங்களுக்கு - பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் - முழு சுதந்திரமும், அதிகாரமும் அளித்தல். அவற்றில் அரசியல் தலையீடு முழுமையாகத் தவிர்த்தல்.
- அரசு உயர்கல்வி நிறுவங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைப் பல மடங்கு அதிகரித்தல்.
- ஏராளமான கல்லூரிகளை அரசு நிறுவதல்; குறிப்பாக, கல்லூரிகள் இல்லாத பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் செயல்பட அனுமதி அளிக்கக் கூடாது. W.T.O. வினுடைய விதிமுறைகளுக்கு இணங்கி, இந்தியா கல்வியில் தன் இறையாண்மையை இழந்து விடாமல் உறுதியுடன் நிற்க வேண்டும்.

9. ஆசிரியர் கல்வியிலும், பயிற்சியிலும் இந்தியா மிகவும் பின்னடைவு பெற்றிருக்கிறது. ஆசிரியர் கல்வி மிகவும் வலிமைப்படுத்தப்பட வேண்டும். சிறந்த தொழில் திறமையும் (professionalism), தங்களது தொடர்ந்த கற்றலில் ஆர்வமுடையவராகவும், மாணவரின் சமுதாயத்துடன் எளிதில் ஒன்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.

- காளான்களாக முளைத்திருக்கும் தனியார் ஆசிரியர் பயிற்ச்சி நிறுவங்கள் பெரும்பாலானவை எந்தத் தரமும் அற்றவை. அவை மூடப்பட்டு, அரசின் நிதியில் ஏராளமான ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படவேண்டும்.

மேற் குறிப்பிட்டவை சில முன்னுரிமை பெறுபவை மட்டுமே.

சுதந்திர இந்தியாவின் மாபெரும் தோல்வி, இமாலயத் தோல்வி கல்வியில்தான் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் அனைத்துக் குழந்தைகளும், இளைஞரும், கூர்ந்த அறிவும், சிறந்த திறமைகளும் பெற்று, தங்கள் மலர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் தங்கள் பங்கை செலுத்தும் கல்வி அமைப்பை நிறுவ இந்தியா தவறிவிட்டது. இந்தியாவின் பிரம்மாண்டமான மக்கள் தொகை அனுகூலம் ( demographic dividend) நமது வர்க்க-சாதி-நவீன தாராளமயப் பொருளாதாரக் கல்வி அமைப்பால் பயனளிக்கும் திறமை இழந்து கிடக்கிறது. காலம் தாழ்த்தியேனும், இன்றைய பாதையினை மாற்றி, புதிய பாதையில் பயணம் தொடங்க வேண்டும். அந்தப் பெரும் பயணத்தில் நாடு அடித்து வைக்க எங்களது மக்கள் சாசனம் உந்து சக்தியாக இருக்குமென்று நம்புகிறோம்.

5.10.2016 — **வே. வசந்தி தேவி**

சென்னை — தலைவர்,

# முன்னுரை

கல்வி விடுதலைக்கானது, மனிதம் போற்றுவது, சமத்துவம் வளர்ப்பது என்பதே மாபெரும் சிந்தனையாளர்கள் கல்விக்கு வகுத்த லட்சியங்கள். அவற்றில் இருந்து இன்று நாம் வெகு தூரம் விலகிச் சென்றுவிட்டோம். இந்தியா அந்த லட்சியங்களை முற்றிலும் மறுக்கும் கல்வியை இன்று தழுவிக் கொண்டிருக்கிறது; அடிமைப்படுத்தும், அன்னியப்படுத்தும், மனிதம் அழிக்கும், ஏற்றத் தாழ்வுகள் வளர்க்கும், வணிகமயமான கல்வியே இன்றைய இந்தியக் கல்வி.

கல்வியின் நோக்கம் என்ன? கல்வி மனித நேயம் வளர்ப்பது; உணர்வுச் செழுமை ஊட்டுவது. மானுட சமுதாயத்தை அறிவு, உணர்வு, விடுதலை, சமூகப் பொறுப்பு ஆகிய விழுமியங்களின் வழி மேலும் மேலும் உயர்த்துவது கல்வி. இந்த நால்வகைப் பரிமாணங்களில் அறிவு வளர்த்தல் ஒன்றே கல்வியின் பொறுப்பு என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மற்ற மூன்றும் கல்வியின் பணிகளாகக் கருதப்படுவதில்லை. கல்வியின் முழுமைத்துவத்தை நாம் இழந்துவிட்டோமானால், மனித மாண்புகளும், நீதியும், முன்னேற்றமும் அற்ற ஒரு உலகைத்தான் நாம் உருவாக்குவோம்.

கல்விக்கு இத்தகைய உயர் இலக்கணம் ஒன்றை வகுக்கும் போதே, அது தொலை வானில் மின்னும் தாரகை என்பது நமக்குப் புரிகிறது. வரலாற்றில் என்றுமே கல்வி அனைத்து மக்களின் உரிமைகளை வளர்க்கும் சாதனமாக இருந்ததில்லை. ஆதிக்க சக்திகள் மக்களைப் பாகுபடுத்த, அடிமைப்படுத்த, ஆட்டிப்படைக்க பயன்படுத்திய வலிமை மிக்க ஆயுதமாகக் கல்வி இருந்திருக்கிறது. சமீப காலம் வரை கல்வி ஆளும் வர்க்கங்களின் ஏகபோகமாகத்தான் இருந்தது. இந்தியாவில் இந்த ஏகபோகம் சாதியம்-ஆண்ஆதிக்கம் என்ற தகர்க்கவியலா இரும்புச் சட்டகத்திற்குள் பாதுகாக்கப்பட்டது. நமது 'தர்மம்' கல்வி மேல் சாதிகளுக்கு மட்டுமே உரியது என்று விதித்தது. அந்த தர்மத்தை மீறத் துணிந்தவர்களுக்கு எத்தகையக் கொடூர தண்டனைகள் விதிக்கப்பட்டன என்பதற்கு நம் புராண-இதிகாசங்கள் சான்று பகர்கின்றன. உண்மையான கல்வி ஆதிக்கங்களுக்கும், ஆணவங்களுக்கும் விடும் சவாலாகும்; ஆகவேதான் பெரும்பாலான மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது.

நவீன சமுதாயம் பழம் பாகுபடுத்தல்களை விட்டுவிட்டது; ஆயினும்,

பெரும்பாலான மக்களுக்கு சக்தியும், சமத்துவமும் அளிக்கும் அறிவை மறுப்பதற்குப் பல தந்திரோபாயங்களைக் கையாளுகிறது. ஆகவேதான், சிறந்த கல்வி சிந்தனையாளர் இவான் இலியிச் (Ivan Illyich) 'பள்ளிகளற்ற சமுதாயம்' வேண்டுமென்றார். புகழ் பெற்ற புட்சியாளர் பௌலோ ஃபிரெய்ரே மாற்றுக் கல்வியின் மூலம் 'ஒடுக்கப்பட்டோருக்கான கற்பிக்கும் கலை' ஒன்றைத் தேடினார். கல்வியின் உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள் ஆகியவை பெரும்பாலான மக்களை ஒதுக்குதல், அவர்கள் மனதை மயக்குதல், எதிர்ப்பவர்களை தங்கள் பக்கம் ஈர்த்து, அமைப்பின் ஆதரவாளர்களாக ஆக்குதல் என்ற உள் நோக்கங்களுடன் வடிவமைக்கப்படுகின்றன.

இந்தியாவில் கல்வி பெரும்பாலும் அன்னியப்படுத்துகிறது. அன்னியப்படுத்தும் கல்வி மனித உரிமைகள், நீதி, சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டத் தவறுவது மட்டுமல்ல; தனது ஒரே குறிக்கோள் என்று சொல்லிக்கொள்ளும் அறிவு தேடலிலும் கடும் தோல்வியை சந்திக்கிறது. தன்னைச் சுற்றிலுமுள்ள உலகைக் காண விடாமல் திரை போடும் கல்வியின் மூலம் மாணவன் காண்பது உண்மையின் முழுமையல்ல, அதன் துகள்களைத்தான். உறவாடுதல் இன்றி, அறிதல் இல்லை. உன் சமூகத்துடன் நீ உறவாடாவிடில், அதன் கொடிய ஏழ்மை, இதயமற்ற சுரண்டல், பாகுபடுத்தல், ஆகியவற்றுடன் உனக்கு எந்த உறவும் இல்லையெனில், நீ பெறும் அறிவு குறைபட்ட அறிவே; பெரும்பாலும் திரிக்கப்பட்ட அறிவே.

நவீன உலகில் கல்வி என்பது ஒரு சமுதாயம் தன் குழந்தைகளுடன் செய்துகொள்ளும் ஒரு உடன்படிக்கை. சமுதாயம் தன் குழந்தைகளுக்கு ஒரு பவித்திர பிரமாணம் அளிக்கிறது. சமூக உற்பத்தியான உழைப்பிலிருந்து குழந்தைகளுக்கு விடுதலை அளித்து, 'மகளே, நீ கற்று, சிந்தித்து, உண்மையைக் கண்டுபிடித்து, புதுமையைப் படைத்து, திரும்பி வா; அதன் பின் என் உடலின், உயிரின் ஆழத்திலிருந்து, நீ பெற்ற சக்திக்கான கடனைத் திரும்பக் கொடு.' என்று சொல்கிறது. அவர்கள் பெறும் பல்லாண்டுக் கல்வி உழைப்புடனான உயிர் பந்தத்தை மீட்க முடியாமல் துண்டித்துக் கொள்வதற்காக அல்ல. மாறாக, ஒரு சமுதாயத்தின் குழந்தைகள், மனித சமுதாயம் முழுதும் சேர்த்து வைத்திருக்கும் ஞானத்தில் மூழ்கித் திளைத்து, பிரபஞ்சப் பார்வையைப் பெற்று, தங்கள் சமுதாயத்திற்குத் திரும்பி வந்து, சொந்த மண்ணில் இயங்கத் தொடங்க வேண்டும். அவர்கள் பெற்ற அறிவு, கற்றுத் தேர்ந்த தொழில்நுட்பம், ஆயிரமாயிரம் நாளங்கள் வழியாகப் பரவிச் சென்று, தங்களை ஈன்ற மண்ணின் வறண்ட பூமிக்கு வளம் சேர்க்க வேண்டும். அத்தகைய இரு வழிப் பிரவாகம் ஒரு புதிய தலைமுறை உலகக் குடிமக்களைப் (citizens of the world ) படைக்கும்.

### இந்தியாவின் பாகுபடுத்தும் கல்வி

உலகிலேயே மிகுந்த ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட கல்வி அமைப்பை இந்தியா உருவாக்கி இருக்கிறது. ஏற்றத் தாழ்வுகள் இன்று கொடூர நிலை எய்தி, ஆயிரம் வழிகளில் இயங்குகின்றன. கல்வியின் ஒவ்வொரு இழையிலும் பாகுபாடு பின்னிக் கிடக்கிறது.

நமது சாதியப் படியமைப்பு போலவே, கல்வியிலும் ஆயிரம் மட்டங்கள். ஒவ்வொரு பொருளாதார மட்டத்திற்கும் ஒரு வகைப்பட்ட பள்ளி. இதில், வெவ்வேறு மட்டக் குழந்தைகள் சந்திப்பதற்கான வாய்ப்பே இல்லை. உலகம் முழுவதும், மிகுந்த வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகள் முதலாக, அனைத்துக் குழந்தைகளும் பொதுப் பள்ளிகளான அருகமைப் பள்ளிகளுக்குத் தான் போகிறார்கள். பள்ளிதான் பேதங்கள் உடைபடும், சமத்துவம் வளரும் களம். ஆனால், நம் நாட்டிலோ அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

### சுதந்திரம் அடைந்த முதல் சில ஆண்டுகள்

சுதந்திரத்திற்குப் பின்னான சில பத்தாண்டுகளில் அரசின் செலவிலேயே நடக்கும் பொதுப் பள்ளிகள்தான் பெரும்பாலும் இருந்தன. சுதந்திரப் போராட்டக் காலத்தின் கனவுகள் இன்னும் மடிந்து விடவில்லை. அந்தக் கனவுகளைக் கண்களில் ஏந்தி, தேசப் புனருத்தாரணத் திட்டங்கள் தீட்டப்பட்டன. நாடு முழுவதிலும் பள்ளிகள் அனேகமாக அருகமைப் பள்ளிகளாகத்தான் இயங்கின. பணக்கார வீட்டுக் குழந்தைகளும், சாமான்யரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில்தான் படித்தார்கள். அந்தத் தலைமுறை பொதுப் பள்ளிகளில் கற்றோர் அனைத்துத் துறைகளிலும் - அரசியல், பொருளாதாரம், அறிவியல், நிர்வாகம், பொது வாழ்வு போன்ற அனைத்திலும் - சிகரம் கண்டனர். இவை அனைத்தும் மேல் சாதியினருக்கு மட்டுமே உரியனவாக இருந்தது உண்மைதான். ஆனால், சில மாநிலங்களில் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு ஜனநாயகமாதல் நடந்து கொண்டிருந்தது.

### நவீன தாராளமயக் காலம்

பொதுப் பள்ளிகளின் வீழ்ச்சியும், பல்மட்டப் பள்ளிகளின் வளர்ச்சியும் ஒன்றாக நடந்தன. சொல்லப்போனால், பல்மட்டப் பள்ளிகளின் வளர்ச்சியின் காரணமாகவே, பொதுப் பள்ளிகளின் வீழ்ச்சி ஏற்பட்டது. கட்டணம் வசூலிக்கும் தனியார் பள்ளிகள் 70களின் பிற் பகுதியில் வரத் தொடங்கி, 90களுக்குள் பல மடங்கு பெருகின. மேல் வர்க்கங்களும், மேல் சாதிகளும் பொதுப் பள்ளிகளை விட்டு, தனியார் பள்ளிகளுக்குப் போகத் தொடங்கினர். பொதுப்பள்ளிகள் ஏழைகளுக்கு மட்டுமே உரியவையாகின; ஏழைகள் உலகின் அனைத்தும் தரமற்றவையாகக் கருதப்படுவது போல், அவர்கள் மட்டுமே கற்கும் பள்ளிகளும் தரமற்றவையாகப் பார்க்கப்பட்டன. வசதி படைத்தவர்கள்

தங்கள் குழந்தைகள் போகாத பள்ளிகளுக்கு அரசு ஏன் செலவிட வேண்டும் என்று எண்ணத் தொடங்கினர். அரசு பெரும்பாலான குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிக்க வேண்டிய தன் பொறுப்பை உதறித் தள்ளியது; பொதுப் பள்ளிகளை மோசமாகப் புறக்கணிக்கத் தொடங்கிற்று. அவற்றின் உள் கட்டமைப்பு நாசமாகிற்று; ஆசியர் நியமிக்கப்படவில்லை. அனைத்தும் சேர்ந்து பொதுப் பள்ளிகளின் தரம் தாழ்ந்து போயிற்று.

நவீன தாராளமயம் நாட்டை ஆட்கொண்ட பிறகு, இன்று நாம் காண்பது வெட்கக்கேடான வர்க்கக் கல்வியே. கல்வி உலகம் அசுரத்தனமான போட்டி உலகாகிக் கிடக்கிறது. மனிதனை மனிதம் விழுங்கும் போட்டிக்குக் குழந்தைகள் பலியிடப்படுகிறார்கள். ஈவிரக்கமற்ற வணிக உலகிற்குள் அவர்கள் தள்ளப்படுகிறார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே போட்டிபோட, அதில் சிறக்க, வென்றெழ programme செய்யப்படுகிறார்கள். பெற்றோர்கள், பள்ளி நிர்வாகங்கள், பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துவோர் சேர்ந்து நடத்தும் அதிகார வேட்டையில் குழந்தைகள் பகடைக்காயாகிறார்கள். அமார்த்திய சென் சொல்வதைப் போல், "முதல் மாணவனை உருவாக்கும் தேசிய வெறி" அனைவரையும் ஆட்கொள்கிறது.

மத்தியதர, மேல் வர்க்கத்தினர் தங்கள் குழந்தைகள் உலகை வெல்வதற்காகவென்றே programme செய்கின்றனர். இந்தக் குழந்தைகளுக்கு வானமே எல்லை. இந்த வர்க்கக் குழந்தைகள்தான் தேசத்தின் பெருமையைப் பறை சாற்றுபவர்கள்; புதிய நூற்றாண்டின் சூபர் பவர் ஆகிய இந்தியாவின் பதாகையை ஏந்தி உலகை வெல்ல வளைய வரும் வாலிபர் குழாம் இது. இவர்களின் ஆளுமைக்கும், ஆதிக்கத்துக்குமான ஒரு தனி உலகம் எப்பாடுபட்டேனும் உருவாக்கப்பட வேண்டும். அந்த ஏகபோக உலகம் கண்டவர்களும் நுழைந்துவிடா வண்ணம் பதுகாக்கப்பட வேண்டும். அதற்காக குண்டு துளைக்காத கவசங்களும், தாண்டமுடியாத மதிற்சுவர்களும் கட்டமைக்கப்பட வேண்டும்.

### பாகுபடுத்தும் பாடத் திட்டம் உருவாக்கப்படுகிறது

ஏற்றத் தாழ்வும், பாகுபடுத்தலும் பல்வகைப் பள்ளிகளின் வழி மட்டுமே நடைபெறுவதில்லை. பாடத்திட்டம், கற்பித்தல், திறனாய்வு-தேர்வு முறைகள் ஆகியவையும் இதே வேலையைச் செய்கின்றன. பாடத் திட்டம் எந்த குறிக்கோளுடன் உருவாக்கப்படுகிறது? வசதி பெற்ற குழந்தைகளுக்குப் போட்டியில் அனுகூலம் (advantage) அளிப்பதற்கும், அவர்கள் உலகளாவிய போட்டியில் வென்று, உலகாளுவதற்கும் ஏற்ற வண்ணம் பாடத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. அது பெரும்பாலான குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் இருக்கிறது. ஏழ்மையில் வாடும் முதல் தலைமுறைக் குடும்பத்துக் குழந்தைகள் அந்தப் பாடத்திட்டத்தின்

பெரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற படாதபாடுபடுகின்றனர். அவ்வாறு சில ஆண்டுகள் தவிப்பிற்குப் பின் பள்ளியைவிட்டு விலகி விடுகின்றனர். அந்தக் குழந்தைகள் பெரும்பாலும் நம் சாதிய-ஆணாதிக்க சமுதாயத்தின் விளிம்பு நிலை மக்களான எஸ்ஸி-எஸ்.டி, சிறுபான்மைப் பிரிவுகளைச் சேர்ந்தவரும், அவற்றின் பெண்களுமாவர். தாங்கமுடியா சுமை கொண்ட பாடத் திட்டத்தை உருவாக்குவதன் உள் நோக்கம் ( hidden agenda ) பெரும்பாலான குழந்தைகளைக் கல்வி அமைப்பிலிருந்து விரட்டுவதுதான். அந்த வர்க்க-சாதி நோக்கம் அருமையாக நடந்தேறுகிறது.

பாடத்திட்டம் பாகுபடுத்துவது அதன் சுமையினால் மட்டுமல்ல, உள்ளடக்கத்தின் (நீஷீஸீமீமீஸீமீ) மூலமும்தான். பாடத் திட்ட உள்ளடக்கம் கிராமப்புற, உழைக்கும் வர்க்கக் குழந்தைகளின் வாழ்வுலகிற்கும், கலாச்சார சூழலுக்கும் கொஞ்சமும் பொருத்தமற்றதாக இருக்கிறது. அது மத்தியதர வர்க்க உலகில் வேர் கொண்டதாய், அதன் கலாச்சாரம், கண்ணோட்டம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைப் போற்றுவதாகவே உள்ளது. உழைக்கும் வர்க்கக் குழந்தையின் வலிமைகள், திறமைகள், கலாச்சார-சிந்தனைச் செழுமைகள் ஆகியவற்றிற்குப் பாடத்திட்டத்திலும், வகுப்பறையிலும் இடமே இல்லை. உழைக்கும் வர்க்கக் குழந்தையின் பிரபஞ்சமே இவ்வாறு மறுக்கப்படுவதும், அவள் சிறுமைப்படுத்தப்படுவதும், அவளே மறுக்கப்படுவதும் இன்றைய கல்வியின் சோகங்களில் முக்கியமானது.

### வகுப்பறை மொழி

வகுப்பறை மொழியே கருணையின்றி அன்னியப்படுத்துகிறது. உழைக்கும் வர்க்கக் குழந்தையின் பேச்சு மொழியே கொச்சையான, பாமர மொழி என்று எள்ளி நகையாடப்படுகிறது. கிராமப்புற தலித் காலனியிலிருந்தோ, நகர்ப் புறச் சேரியிலிருந்தோ, வகுப்பறைக்குள் முதல் முறையாகக் காலடி எடுத்து வைக்கும் சிறுமி வகுப்பறைச் சூழலின் அச்சுறுத்துதலில் வெம்பி, வதங்கி, திகைத்துப் போய், மிரண்டு போய், தன் குரலையே இழக்கிறாள். பின், கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மௌனக் கலாச்சாரத்திற்குள் மூழ்கிப் போகிறாள்; அந்தக் மௌனக் கலாச்சாரமே ஒடுக்கும் அடிமை சமுதாயத்திற்கு அங்கீகரமாகிறது.

மொழியைப் பற்றிப் பேசும்போது, பாகுபடுத்தும் முறைகளில் முக்கியமானது கல்வி மொழி. ஆங்கில மொழியைச் சுற்றி பாகுபடுத்தும் ஒரு பிரபஞ்சமே உருவாகி இருக்கிறது. ஆங்கிலம் ஒன்றே இன்று வாய்ப்பு, வளர்ச்சி, ஆதிக்கம், ஆக்கிரமிப்பு அனைத்துக்குமான மொழி. இன்றைய இந்தியாவில் ஆங்கிலத்தை லகுவாக, லாவகமாகக் கையாள முடிந்தோரும், தங்கள் தாய் மொழி / மாநில மொழியில் மட்டுமே இயங்க முடிந்தோரும் இரு வேறு உலகங்களைச் சேர்ந்தவர்கள்.

## வணிகப் பண்டமாக மாறும் கல்வி

அறிவு என்பதே கடைச் சரக்காக, சந்தைப் பண்டமாக ஆனதுதான் இறுதிச் சீரழிவு. உலக கார்பொரெட் முதலாளித்துவம்தான் இன்று அறிவுக்கு இலக்கணம் வகுக்கிறது. அதற்கு விலை நிர்ணயிக்கிறது. கார்ப்பொரெட் சந்தையில் அந்தக் கட்டத்தில் எதற்கு அதிக விலை இருக்கிறதோ, அதுதான் அனைவரும் வேண்டும் உயர்ந்த அறிவு, ஒப்பற்ற ஞானம். உயர் கல்வி நிறுவங்கள் அவசரம் அவசரமாகத் தங்கள் சட்டங்களையும், சாசனங்களையும் திருத்தி, அந்தப் பகட்டுத் துறைகளுக்கு முன்னுரிமையைத் திருப்புகின்றன. மனித வரலாறு முழுதும் ஆராதிக்கப்பட்ட அறிவின் அர்த்தத்தில் இது ஆழிச் சுழற்சி. இன்று உலக கார்ப்பொரெட் முதலாளித்துவம் ஆணவச் செறுக்குடன், மானுடத்தின் ஞான சிகரங்களைத் தரைமட்டமாக்கி, லாபப் பெருக்கு என்ற ஒற்றைப் பட்டறையில் அறிவை வார்க்கத் துணிந்த போது, அறிவிற்கு மீண்டும் இலக்கணம் படைப்பது நம் காலத்தின் பெரும் பொறுப்பாகிறது.

## வேறு ஒரு உலகம் சாத்தியமே!

இத்தகைய அநீதி மிகுந்த, வர்த்தகமயமான, அடக்குமுறைக் கல்வியை மாற்றும் பிரம்மாண்டப் பணியை எங்கு தொடங்குவது? வேறொரு உலகம் சாத்தியம்தானா? மனிதம் போற்றும், ஜனநாயக, விடுதலைக் கல்வியைக் கட்டி எழுப்புவதற்கான் செங்கற்களை எவ்வாறு வார்க்கப் போகிறோம்? அந்த இமாலயப் பணியைத் தொடங்கும் போது, இன்றைய கல்வியின் அனைத்துப் பரிமாணங்களையும், அதன் அமைப்பு, உள்ளடக்கம், கற்பிக்கும் முறை, நிர்வாக, அதிகார அமைப்பு அனைத்தையும், மனதில் கொண்டு ஏற்க வேண்டும்.

# ஒரு தொலைநோக்கு

இன்றைய உலகில் நவீனத்துவம் என்பது குழந்தையை நாம் எவ்வாறு கருதுகிறோம் என்பதில் உள்ளது. நவீன நாடுகள் ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச, கட்டாய கல்வி தரக் கடமைப்பட்டுள்ளது. இலவசம் என்பதை விட, தரமான கல்வி பெறுவதில் எல்லா இடையூறுகளையும் நீக்கிய சுதந்திரமான கல்வி என்ற பொருள் அவசியம்.

இந்தியா உலகில் ஒரு புதிய பரிசோதனை எனலாம் - பல மொழிகள், இனங்கள், மதங்கள், அரசியல் கோணங்கள் எல்லாம் சேர்ந்த கலவை. செறிந்த பாரம்பரியமும் அதே நேரம் ஆழ்ந்த பிளவுகளும் கொண்ட சமூகம்; நில, நீர் வளங்கள் சிறந்தும், ஏழ்மை பிணித்த சமூகம். இத்தகைய கல்வி குறித்த எண்ணம் ஏதும் எண்ணிக்கை, தரம் மற்றும் சமத்துவம் என்ற மூன்று புள்ளிகள் கொண்ட முக்கோணத்தை எதிர்கொள்ள வேண்டும். இதில் ஏது பிரச்சனைக்குரியதானாலும் கல்விக்குத் தோல்விதான்.

வேகமாய் மாறும் இவ்வுலகில் பழம்பெரும் உற்பத்தி முறைகளில் பிணைந்துள்ள இந்திய மக்களுக்கு நவீன முறைகளைப் பழக, மேற்கொள்ள, சமூகப் பொருளாதார உயர்வு பெற கல்வி ஒன்றே திறவுகோல். இத்தகைய மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கல்வி முறை நிவர்த்தி செய்தே ஆக வேண்டும். அதேநேரம் நம் மக்களை அடிமையாக்கியுள்ள மூடப்பழக்க வழக்கங்களையும். பிற்போக்குத்தனத்தையும் ஒழிக்க விமர்சன மனப்பான்மை தரும் கல்வி அவசியம். அதுவே நம் பொதுவாழ்வில் ஊடுருவிய ஊழல்களை ஒழிக்கவும் வழி. ஆய்வு வழிமுறையும் விவேகமும் பொதுமேடைகளில் இயல்பாக வேண்டுமென்றால் கல்வியே அதை உறுதி செய்ய இயலும்.

ஆக, நாட்டின் கலாச்சார, அறிவு வளத்தை வார்த்தலிலும், செழுமைப்படுத்துவதிலும் கல்வி வழிமுறையின் மையமான குறிக்கோள் ஆகிறது. இதை மிகச் சுருக்கமாக இவ்வாறு பட்டியலிடலாம்

- ஒவ்வொரு மாணவரையும் பள்ளிக்கு வரச் செய்ய வேண்டும்.
- பள்ளிக்கு வரும் ஒவ்வொரு மாணவரும் கல்வியில் முழுமையுடன், மனநிறைவுடன் பங்கேற்க வேண்டும்.

- பள்ளியின் பாடத்திட்டம் ஒவ்வொரு மாணவரையும், சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டுக்கு உதவி செய்யும் பொறுப்புள்ள குடிமக்களாக முயற்சி செய்ய வேண்டும்.
- உயர்கல்வியை நாடும் ஒவ்வொருவருக்கும் அது சாத்தியமாவதோடு, அக்கல்வி உற்பத்தி முறைகளோடு அறிவூட்டங்களோடும் இணைந்து, கல்வி பெறுவோருக்கு பொருளாதார வளர்ச்சியில் பங்குபெற மட்டுமல்லாது, சமூக விமர்சனத்திலும் பயிற்சி தர வேண்டும்.

இதில் ஒவ்வொரு அங்கமும் அரசின் பொறுப்பையும் கடமையையும் வலியுறுத்துகிறது. பள்ளி செல்லாத ஒவ்வொரு குழந்தையும் பிரதிபலிக்கும் யதார்த்தம் கல்வி மூலமே எதிர்கொள்ள இயலும். பள்ளி செல்லும் தரமான கல்வி பெறாத குழந்தை அதன் மீது சமூக அக்கறை இல்லை என்றே காட்டுகிறது. கல்வி என்பது தகவல்களை மனப்பாடம் செய்து பின் மறந்துவிடல் என்றால் அத்தகைய கல்வி நாட்டு வளர்ச்சிக்குப் பயன் தராது. பல்கலைக்கழகங்கள் உற்பத்தி முறைகளிலிருந்தும் வளர்ச்சி அரசியலிலிருந்தும் அந்நியப்பட்டு நின்றால் சமூக மாற்றம் சாத்தியமில்லை.

இது இறுக்கமற்ற கல்வி முறையின் தேவையை சுட்டிக் காட்டுகிறது. கட்டாயக் கல்விக்குப் பிறகு தங்களுக்கேற்றவாறு உள்வரும், வெளிச்செல்லும் திறந்த கல்வி முறை தேவையாகிறது. மையத்தில் பள்ளியும், ஓரத்தில் முறைசாராக் கல்வி முறைகளும் ஒன்றோடொன்று தொடர்பு பெற்று பணிபுரிய வேண்டுகின்றன. வயதுவந்தோர் கல்வியும் சான்றிதழ்களும் இம்முறையின் அங்கமே. இத்தகைய கல்விக் கொள்கை திட்டமிட்டு அமல்படுத்தப்பட வேண்டும். அதுவே சுதந்திரமான மத்தியப்படுத்தாத கல்விக்கான திறம் வளர்க்க இயலும். இதெல்லாம் அரசே கல்வி தரும் முக்கியமான அங்கமானால்தான் சாத்தியமாகும்.

இத்தகைய தொலைநோக்கு, பாடத்திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கிறது. பள்ளிக்குள், பல்கலைக்கழகத்துள் கல்வி வெளி உலகின் அறிவோடு இணைந்து இயங்க வேண்டும்; கற்பவர் தானே கற்கும் திறன் வளர்க்க வேண்டும்; கற்போரின் படைப்பாற்றும் திறனைச் செறிவுப்படுத்த வேண்டும்; அரசியல் சட்டத்தின் அம்சங்களும், உரிமைகளும், கடமைகளும் வலியுறுத்தப்பட வேண்டும்; வேலைக் கூடத்திற்கான தயாரிப்பு வேண்டும். கற்போரும் கற்பிப்போரும் சேர்ந்து தேடும், கற்கும் பங்கேற்பாளராக இயங்க வேண்டும். இது மதிப்பீட்டு முறைக்கும் வழி காட்டுகிறது - மதிப்பீடு கற்போரின் திறனை வெளிச்சப்படுத்துவதோடு அதன் மீது சவால் விடுகிறது. தேர்ச்சி, தோல்வி என்ற சான்றிதழை விட கற்போரின் திறன்களில் பல பரிமாணங்களை வகைப்படுத்துகிறது. இத்தகைய போதனாமுறை நெறிகளைத் தனித்துப் பாராது, கல்வியின் ஒவ்வொரு

அம்சங்களிலும் உள்ளார்ந்ததாகும். ஒருங்கிணைந்த அறிவு செறிந்த வாழ்க்கை முறையாக்குகிறது. நெறியும் நீதியும் கற்போரின் பார்வையில் கலந்து விடுகிறது.

நாம் கூறும் தொலைநோக்கு ஒரே தலைமுறையில் யதார்த்தம் ஆக்க இயலும். ஆக வேண்டும். நம் பார்வையில் கல்வி தரமான சமூக மாற்றத்தை முக்கியப்படுத்தும், சமூக நீதியையும் சமத்துவத்தையும் அடிப்படையாக்க் கொண்ட கல்வி ஒன்றிணைந்து அதே நேரம் திறந்த்தான கல்வி, கலாச்சாரத்திலும் பணியிலும் வேரூண்றி, அதே நேரம் அறிவில் வானெட்டும் கல்வி, அறிவியல் உலகப் பார்வையுரும் கல்வி, தொழில்நுட்பத்தைப் படைப்பாற்றும் கல்வி, உலகளாவிய கல்வி, தன் இயற்கைச் சூழலோடும் சமூக சூழலோடும் அர்த்தமுள்ள உறவு கொண்ட கல்வி.

எதிர்காலம் பற்றிய தெளிவு பெற்றால்தான் நிகழ்காலத்தை மதிப்பிட இயலும். நாட்டின் எதிர்காலம் என்பது பல கிளைகள் கொண்டு நீள்கிறது. எப்பாதையை நாம் தேர்ந்தெடுக்கிறோம் என்பது எத்தகைய கல்வி முறையைப் பின்பற்றுகிறோம் என்பதிலே நிர்ணயிக்கப்படுகிறது.

# III.
# வரலாற்றில் கல்வி
# ஆங்கிலேயர் ஆட்சி மற்றும் அதன் பின்னர்

சுதந்திர போராட்ட காலத்தில் கல்வி மிகுந்த முக்கியத்துவம் பெற்ற நோக்கமாக இருந்தது. பிரிட்டனில் 1870 ல் அனைவருக்கும் கட்டாயக் கல்வி சட்டமாக்கப்பட்டபோதே, சில தேசிய போராளிகள் 1880 களிலேயே அதே போன்ற ஒரு சட்டம் இந்தியாவிலும் அமலாக்கப்பட கோரினர். ஆனால் ஆங்கிலேய அரசு கண்டுகொள்ளவில்லை. இருந்தாலும் பரோடா போன்ற மன்னராட்சி சாம்ராஜியங்களில் கல்வி கட்டாயமாக்கப்பட்டது.இருந்தும் கோகலே இவ்விஷயத்தில் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவர முயன்று தோற்றார். சில மாகாணங்களில், ஐக்கிய மாகாணம் (Uniter Provinces) 1919 மற்றும் சென்னை மாகாணம் (1920) போன்ற வைகளில் இதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டன என்றாலும் அனைவருக்கும் கல்வி என்பது தொலைதூர கனவாக இருந்தது தேசிய பள்ளிகள் (National Schools) என்று தங்களை அழைத்துக்கொண்ட சில பள்ளிகள் அங்கங்கே தோற்றுவிக்கப்பட்டாலும் அவையும் அரசாங்க - பாடமுறை படியே பயிற்றுவிக்க வேண்டி இருந்ததால் தேச நேசப்பள்ளிகளாக அவைகளால் இருக்கமுடியவில்லை.

அனைவருக்கும் கல்வி விஷயத்தில் காந்தியடிகள் நாயிதாலிம் (Nai Talim) - ஆதார கல்வி - என்பதை எளிய விலை மலிவான திட்டமாக அனைவருக்கும் கல்வியை அடைய முன்மொழிந்தார். இந்த திட்டம் டாக்டர்.ஜாகீர் உசெய்ன் தலைமையிலான கல்வி குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு கைவேலை மைய - ராட்டை மைய கல்வியாக அதன்வழியே அறிவை போதிக்கும் ஒன்றாக முன்மொழியப்பட்டது.

சுதந்திரம் அடைந்த உடன் காங்கிரசு ஆட்சிசெய்த மாகாணங்கள் ஆரம்ப கல்வியை அறிமுகம் செய்தாலும் பெரும்பாலும் நீர்த்துப்போனதாக இருந்தமையால் டாக்டர்.ஜாகீர் உசெய்ன் இந்தியாவில் கடைபிடிப்பதாக சொல்லப்படும் ஆரம்ப கல்வி ஒரு ஏமாற்று என பகிரங்கமாக குற்றம் சாட்டினார். மெதுவாக ஆரம்ப ஆதார கல்வி என்பது கல்வியின் திட்ட வரையறைலிருந்தே காணாமல் போனது.

இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்தவர் மவுலானா அபுல்கலாம் ஆசாத் - சுதந்திர போராட்ட வீரர் மற்றும் சிறந்த

தேசியவாதி. அவரது காலத்தில் பல்கலைகழக கல்வி கமிஷன் டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் தலைமையிலும் மற்றும் உயர்நிலை பள்ளி கல்வி கமிஷன் டாக்டர் ஏ.எல். முதலியார் தலைமையிலும் அமைக்கப்பட்டன. பல்கலைகழக கமிஷன், கல்லூரி பட்டப்படிப்பை மூன்றாண்டாக்கியது வேலைவாய்ப்பை - பட்டங்களிடமிருந்து பிரித்து கடைபிடிக்க அது வழங்கிய ஆலோசனை ஏற்கபடவில்லை. இந்திய தொழில் நுட்ப கல்வியகங்கள் (ITI) தொடங்கப்பட்டு அவை ஏனைய பொறியியல் கல்லூரிகளின் கல்விதரத்தையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. முதலியார் கமிஷன் பெண்கல்வி கிராமப்புர குழந்தைகளின் கல்வி மற்றும் முதியோர்கல்வியை ஊக்குவித்த்து. ழிசிணிஸிஜி எனும் தேசிய பள்ளிக்கல்வி அமைப்பு அவர் தந்ததே தவிர நாடு முழுதும் ஆசிரியர்களுக்கு ஒரேமாதிரி ஊதியம் வழங்கிட அவர் போராடினார். ஆனால் அவர் நிர்ணயிக்க பரிந்துரைத்த ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் என்பதை மாநில அரசுகள் ஏற்கவில்லை. மைய அரசின் மானியம் (ஐந்தாண்டு) முடிவரும பட்சத்தில் அந்த செலவை தாங்கும் சக்தி இல்லை என கைவிரித்தன.

கல்வி பொதுவில் மாநில பட்டியலிலேயே இருந்தது. மத்திய அரசு தனது பொருளுதவியோடு அறிமுகம் செய்யும் கல்வி திட்டங்கள் மூலம் மட்டுமே தலையீடு செய்யமுடியும். அவற்றில் சில திட்டங்கள் நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் வளர்ச்சி, ஒட்டுமொத்த பாடபோதானமுறையை பலப்படுத்த வழங்கப்படும் பொருளுதவி மற்றும் புதிய கலை கைவினை கல்வி இப்படிஞ்., உயர்கல்வி விஷயத்தில் பல நல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன அவை பல்கலைகழக கல்லூரி அளவிலான தளவாட வளர்ச்சி கட்டமைப்புகள் மற்றும் பேராசிரியர்களின் திறன் வளர்ச்சிக்கானவையாக இருந்தன.

முதலியார் கமிஷன் சில தேர்ந்தெடுத்த உயர்நிலைபள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்திட பரிந்துரை செய்தது. அது சில மாநிலங்களில் சி.பி.எஸ்.இ. (CBSE) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் பத்தாண்டு பள்ளிக்கல்வியை நிராகரித்த ஒரே மாநிலமாய் அப்போது தமிழ்நாடு இருந்தது.

அதிகம் கவனம் பெறாத ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு கல்விக்குழு டாக்டர் ஹன்சா மேத்தா தலைமையிலானது. ‘சமநிலை நோக்கி”(Towards Equality) என்பது அதன் அறிக்கை தலைப்பு இது பெண்கள் அனைத்துவகை கல்வியும் பெற தகுதியானவர்கள் என முன்மொழிந்த்து. அதுவரை ஆசிரியர் தொழில் செவிலியர் மற்றும் தட்டச்சாளர் பயிற்சி மட்டுமே பெற தகுதிபடைத்தவராக இந்த பெண்கள் அனைத்து பிரதான தொழில் கல்வியிலும் இணைந்தனர். இந்த அறிக்கை பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி அமைத்தது.

அதிகம் பேசப்பட்ட பேசப்படும் கோத்தாரிகமிஷன் கல்வியின் அனைத்து நிலைகளையும் மழலையர் கல்வி முதல் பல்கலைகழக கல்வி வரை எதையும் விட்டுவைக்கவில்லை. அறுபது ஆண்டுகள் கழித்தும்கூட இன்றும் பேசப்படுகிறது. என்றால் அதன் முக்கியத்துவம் விளங்கும். அந்த அறிக்கையின் ஒரு சில முன்மொழிவுகளில் மட்டுமே அமுலுக்குவந்தன என்றாலும் பல நல்ல விஷயங்கள் தொடாமலே விடப்பட்டன. கோத்தாரி கமிஷன் நாடு முழுவதும் 10 +2+3 வகை கல்வியை அறிமுகம் செய்து பலவகை கல்விக்கு முற்றுபுள்ளி வைத்ததே அதன் பெரிய வெற்றியாகும்.

கோத்தாரி கமிஷன் அறிக்கையை அடுத்து முதல் தேசிய கல்விக்கொள்கை வெளியானது. பொதுக்கல்வி மற்றும் அருகாமை கல்வி நிலையம் என்பது தேசத்தின் கல்வி நோக்கமாக கொள்கையாக ஏற்கப்பட்டது. துரதிஷ்ட வசமாக நம் குழந்தைகளின் ஒட்டுமொத்த நலன் சார்ந்த பலமான ஆதார கட்டமைப்பை நிகழ்த்தி இருக்க வேண்டிய இக்கல்விக்கொள்கையின் முழு பிரகடனமும விரைவில் கிடப்பில் போடப்பட்டன.

பிறகு வந்ததுதான் பகுப்பாய்ந்த ஆவணமான ‘கல்விக்கான சாவால்கள் (Challenge of Education) விடுதலைக்குப்பிறகான நம்கல்வி முறையின் பலவீனங்களை, தோல்விகளை குறித்து அலசி பல அமைப்புகள் கருத்தரங்களில் விவாதிக்கப்பட்ட ஆவணம் அதன் வழியே வந்ததுதான் 1986 தேசியகல்விக்கொள்கை இந்த புதிய கொள்கை வேற்றுமைகளை களைந்து கல்வியை பரந்துபட்ட வாய்ப்பாக மாற்றுதல் என்பதை அறிவித்துக்கொண்டது. குறிப்பாக இந்திய பெண்கள், பழங்குடியினர் (Scheduled Tribes ) மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் (Scheduled Caste) சமூகங்களை மேம்பாடு அடைய வைத்தல். அத்தகைய சமுதாய ஒருமைப்பாட்டு வளர்ச்சியை அடைய தேசிய கல்விகொள்கை (1986) கல்வி உதவிதொகைகளை விரிவுபடுத்துதல், முதியோர் கல்வி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து ஆசிரியர்களை நியமித்தல், பள்ளிக்கு குழந்தைகளை அனுப்பும் ஏழை குடும்பங்களுக்கு நிதிஉதவி, புதியபல கல்விநிலையங்களை ஏற்படுத்துதல் மற்றும் குடியிருப்பு என பல திட்டங்களை அறிவித்த்து. இந்த தேசிய கல்வி கொள்கை (NPE) ஆரம்பகல்வியில் குழந்தைகள் மைய போதானமுறையை முன்மொழிந்து கரும்பலகை நடவடிக்கை (Operation Black Board) எனும் திட்டத்தை தேச அளவில் ஆரம்ப கல்வியை மேம்படுத்த அறிமுகம் செய்தது. இந்த கல்வி கொள்கை திறந்த நிலை பல்கலைகழக மாதிரியை 1985 ல் உருவாக்கப்பட்ட இந்திராகாந்தி திறந்தநிலை பல்கலைகழகத்தின் வழியே விரிவாக்கியது. இக்கொள்கை காந்தியடிகளின் கிராமபுர பொருளாதார சமூக வளர்ச்சியை கிராமிய பல்கலைகழக மாதிரிகள் மூலம் சாதித்து

சமூகத்தின் அடித்தட்டு மக்களை மேம்படுத்தவும் முன்மொழிவுகளை கொண்டிருந்தது. கல்வியில் தரத்தைமேம்படுத்திட கல்வியில் தனியார் மயமாதல் ஒன்றே மருந்து என அது முன்மொழிந்தது.

1986 கல்விக்கொள்கை, மீண்டும் உலகமையமாதல் மற்றும் திறந்த சந்தைகளின் அடிப்படையில் - அனைத்து மட்டங்களிலும் கொள்கை கட்டுமானங்களில் உலக வங்கி தலையிட தொடங்கிய 1992ல் மாற்றத்திற்கு உட்பட்டது. ஐ.நா சபையில் 2000 ஆண்டில் அனைவருக்கும் கல்வி என்பது புதிய நோக்கமாக ஏற்கப்பட்டது. ஆனால் இது கட்டாயக் கல்வி ஆண்டுகளை எட்டிலிருந்து வெறும் ஐந்தாக குறைத்தது மட்டுமல்லஆரம்பகல்வியில் கூட தனியார் நுழைவது இருகரம் நீட்டி வரவேற்கப்பட்டது.

மோஹினி ஜெயின் எதிர் - கர்நாடக அரசு மற்றும் உன்னிகிருஷ்ணன் எதிர் - ஆந்திர அரசு - ஆகிய இரு முக்கிய கல்வி வழக்குகளின் தேசிய அளவிலான உச்சநீதிமன்ற தீர்ப்புகள் பத்தாண்டுகளில் அரசு நிறைவேற்ற கடமைப்பட்ட 14 வயதுக்கு உட்பட்டோருக்கான கட்டாயகல்வி நடைமுறைபடுத்தாததை குறையாக கண்டதோடு 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் கல்வி என்பது கட்டாய உரிமை என அறிவித்தது. இது தேச அளவில் சமூக போராளிகளின் கவனம் பெற்று நாடு முழுதும் கட்டாயகல்வி உரிமைச்சட்டம் கொண்டுவரபோரட்டங்களாக வெடித்தது. இதன் காரணமாக 2002ல் கட்டாய இலவச கல்வி உரிமைச்சட்டம் ஏராளமான ஓட்டைகளுடன் அறிமுகமானது அரசு குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதை தனது கடமையாய் தோள்களில் சுமக்க இன்றுவரை முன்வரவில்லை. குழந்தைகளின் அடிப்படை உரிமையாக கல்வி இன்னும் மாற்றப்படவில்லை. எனவே அனைவருக்கும் தரமான சம்மான கல்வி என்பதை நோக்கியே நமது போராட்டம் தொடரவேண்டிஉள்ளது.

IV

# பள்ளிக் கல்வியின் படிநிலைகள்

*கோத்தாரி கல்விகுழு அறிக்கையை அடுத்து நாடு 10+2+3 எனும் கல்வி மாதிரிக்கு முழுமையாக தன்னை மாற்றிக்கொண்டது. அதாவது பத்தாண்டு பள்ளி, இரண்டாண்டு மேல்நிலைப்பள்ளி பல்கலைகழகத்திற்கு முந்தைய கல்வி, மற்றும் 3 ஆண்டுகளில் பல்கலைகழக பட்டபடிப்பு பள்ளிக்கல்வி என்பது தொடக்கல்வி, உயர்நிலைகல்வி , மேல்நிலைக்கல்வி என மூன்றாக பிரிக்கப்படுகிறது. தொடக்க்கல்வி மேலும் இரண்டாகி 5 ஆண்டு ஆரம்ப கல்வி மற்றும் மூன்றாண்டு நடுநிலைபள்ளிக்கல்வி என பிரிகிறது. இது பொதுமாதிரி என்றாலும் சில மாநிலங்களில் லேசான மாறுதல்கள் இருக்கலாம். பள்ளிக்கு செல்வதற்கு முந்தைய மழலையர் கல்வி* (Pre - Schooling ) *அல்லது ஆரம்ப குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது மிகவும் மோசமாக கையாளப்படும் அவலம் என்பது ஒருபுரம் இருப்பினும் ஞ் இந்த பருவ கல்வி குறித்து ஒரு தேசிய கொள்கைதேவை என்று இப்போது சிலகாலமாக உணரப்பட்டுள்ளது.*

IV

# பச்சிளம் குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி

*மனித வளர்ச்சியில் இந்த முன் குழந்தை பருவகால வளர்ச்சி குறித்து இந்த வரலாற்று தருணத்தில் நம் அறிவும் புரிதலும் வெகுவாக வளர்ச்சி அடைந்துள்ளது.மூளைவளர்ச்சியின் ஆழமான துரித வளர்ச்சி ஒரு குழந்தை பிறந்த 36 மாதங்களில் நடக்கிறது. ஒரு குழந்தை உணர்வுப்பூர்வமாகவும் அறிப்பூர்வமாகவும் பலமானதாக வளர சமூக அளவில் வளமாக கட்டமைத்த சூழல் பெற்றோர் ஆதரவு குறைந்த பட்சம் மூன்று வயதுவரை அத்தியாவசியம் ஆகும் தற்போதுள்ள ஐசிடிஎஸ்* (ICDS) *நலன்களை வழங்குதல் என்பது சத்தான உணவு, ஆர்வதூண்டல் மற்றும் பெற்றோர் ஆதரவு ஆகியன இந்த படிநிலையின் அத்தியாவசியதேவை ஆகும்.*

*3 முதல் 5வயது வரை எல்லா குழந்தைகளும், பள்ளிக்கு தயாராகுதல், உடல்திறமேம்பாடு மற்றும் சமூகவளர்ச்சி என அனைத்து வளர்ச்சி திட்டங்களும் சென்றடையப்பட்டவர்களாக இருக்கவேண்டும் அரசு இத்தகைய அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சுகாதார சூழலை சார்ந்த வளர்ச்சியை வழங்கவேண்டும் தேசிய மற்றும் மாநில அளவிலான குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (ணிசிசிஓ) அமைப்புகளை அரசு நிருவினாலும் அவை பயனற்றவையாகவே உள்ளன. அது போன்ற கண்காணிப்பு அமைப்புகள் பின்பற்ற நாம் முன்வைக்கும் முன்மொழிவுகள்*

1. *0-5 வயதினருக்கான ஒட்டுமொத்த முழுமை வளர்ச்சிக்கான தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். பெற்றோர் வழிகாட்டுதல், குழந்தை காப்பக தரம்மேம்பாடு, அங்கன்வாடி, நர்சரிபள்ளிகளின் ஒழுங்கமைக்க தெளிவான சட்டம் தேவை.*
2. *சத்துகுறைபாடு ஆபத்து மற்றும் சரியான பராமரிப்பு வசதி இல்லாத பெற்றோர்களின் குழந்தைகளுக்கு உள்ளூர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மழலையர்பள்ளி திட்டங்களில் முன்னுரிமை வழங்கவேண்டும்.*
3. *குழந்தை சுகாதாராக்கொள்கை, குடும்ப நலன் மற்றும் கல்வி சார்ந்த மனித வளர்ச்சி குறித்தஒருங்கிணைந்த சட்டதிட்ட வரையறைக்குள் மழலைப்பள்ளிகளை இணைத்தல் .*
4. *உள்ளூர் பஞ்சாயத்து மற்றும் நகராட்சி அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு பொது கண்காணிப்பு திட்டமிடல் குழுவிடம் பல்வேறு துறைகளில் இருந்து இதற்காக பெறப்பட்ட தொகை ஒப்படைக்கப்பட்டு வளர்ச்சி முழுமையானதாக ஆக்கப்படவேண்டும்.*
5. *ஒவ்வொரு அரசுத்துறையும் 5% வளர்ச்சி நிதி வழங்கி உள்ளூர் சுகாதரா குழு ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் முழுசுகாதாரம், கல்வி மேம்பாட்டு அடைய உதவிகள் கட்டாயமாகும்.*
6. *குழந்தை நல மருத்துவர்கள் பிரத்யோகமாக நியமிக்கப்பட்டு பெற்றோர் ஆலோசனை முதல் குழந்தை பராமரிப்புவரை இந்த குழுவின் கண்காணிப்பிற்கு கீழ்வரலாம்.*
7. *மனிதவள மேம்பாடு என்பது ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை உயிரோடு பாதுகாத்தலில்தான் இருக்கிறது.படித்து முடித்தவர்கள் வெளிநாடு போகும் போது அல்லஞ் ஐந்து வயதுக்குள் வரும் பலவகை சுகாதார பேராபத்துகளால்தான் நம்நாட்டில் மூளை - இழப்பு* (Brain Drain) *அதிகம் ஏற்படுகின்றது.*
8. *மழலையர் பள்ளிகள், பராமரிப்பு மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள காலி இடங்கள் அவசரகால அடிப்படையில் நிரப்பப்படவேண்டும். தேவை ஏற்பட்டால் அரசு சாரா நிறுவனங்களின் (ழிநிளி) உதவி, பெரிய பல்கலை கழகங்களின் துணையோடு சிறந்த கல்வியாளர்களைக்கொண்டு இந்த மழலை நிலை கல்வியில் சிறப்பான பங்களிப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். சமூகத்தின் பல்வேறு அமைப்புகளை அதன் அங்கமாக்கவேண்டும்.*
9. *இந்த நிலை கல்வியிலும் தனியார் மையம் புகுந்துவிட்டது என்பது ஆபத்தான நிலை. 18 மாதங்களிலேயே பராமரிப்பு* (Creche) *பெயரில் சேர்ப்பது ஞ். கிட்ஸ்கூல் என சுகாதாரமற்ற சூழல்களில் குழந்தைகளை அடைத்து வைப்பது போன்றவற்றை*

நிறுத்தி ஆழமான ஆய்வுக்குப்பின் சரியான நடைமுறை விதிகள் அறிவிக்கப்படவேண்டும்.

10. தற்போது இதுபோன்ற மழலையர் (Nursery) கல்வி நிலைய அங்கீகாரம் என்பது பல்வேறு துறை சார்ந்து உள்ளதால் அவ்வகை அங்கீகாரம் முறையாக பெறுவதற்கு முன்பே குழந்தைகளை சேர்ப்பது நடக்கிறது. இந்தநிலை மாற்றப்படவேண்டும். வளாக சூழல், சுகாதாரம், போக்குவரத்து சேவை என யாவும் பரிசோதிக்கப்பட்டு பின்னரே முறைப்படி கல்விநிலையம் செயல்படவேண்டும். இதற்கு உள்ளூர் பெற்றோர் குழுமம், பிரதநிதிகள், ஓய்வுபெற்ற கல்வியாளர்கள் அல்லது ரோட்டரி போன்ற அமைப்புகள் (ஏனெனில் போலியோ சொட்டுமருந்து முகாம்களை இப்போது அவர்கள் நடத்துக்கிறார்கள்) வணிகர் அமைப்பு பிரதிநிதிகளை பயன்படுத்தலாம்.

11. மழலையர் மாதிரி மையங்கள் கிராமப்புர மற்றும் நகர்புர மக்கள் தொகைக்கு ஏற்ப கட்டமைக்கப்படவேண்டும். இதுபோன்ற சிறப்பு மையங்கள் குழந்தை பராமரிப்பில் முன்னுதாரணமாகி போக்குவரத்து உட்பட பேணி பெற்றோர் குழந்தைகளை எளிதில் விட்டுச்செல்லும் தொலைவில் இயக்கப்படவேண்டும்.

12. மழலையர் சுகாதார மையங்களை முழுதும் பெண்கள் மயமாக்குதல் என்பது அதனை முறைப்படி கற்றுதேர்ந்த அம்சங்கள் கொண்ட தொழில் ரீதியில் தரமிக்கவர்களைக்கொண்டு அவர்களுக்கான வேலை சூழலை வளமாக்குதலையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

13. கண்காணிக்கும் அலுவலர்கள் அவ்வப்போது இந்த மழலையர் மையங்களை பார்வை இடவேண்டும். அவற்றில் தரத்தை தொடர்ந்து கண்காணிக்க அவசியம்.

14. வல்லுநர்கள் , கல்வி நிறுவனங்கள் சார்ந்த மழலையர் பராமரிப்பு குறித்த அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அதில் மழலையர் பள்ளி ஆசிரியைகள், சமூக சேவகர்கள், உளவியலாளர்கள், சிறப்புக்கல்விவல்லுநர்கள், பொதுசுகாதரா வல்லுநர்கள் , உடற்பயிற்சியாளர்கள், பொதுநல பெற்றோர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என அனைத்துவகை உள்ளூர் வசதி வாய்ப்புகளும் பயன்படுத்தபடவேண்டும்.

15. தேசிய மழலையர் கொள்கை மூலம், மகளிர் ஆணையம் மனிதவளமேம்பாட்டு அமைச்சர்கள், எஸ்.சி.பி,சி, ஆர் மற்றும் ஐ.சி.பி.எஸ் போன்றவைகளின் ஒன்றிணைந்த கண்காணித்தலின் கீழ் இந்த குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி கொண்டுவரப்படவேண்டும்.

# குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி (ECCD)

மனித குல மேம்பாடு நமது அறிவு நிலையின் இந்த கட்டத்தில் உள்ள வரலாற்று தருணத்தில் பெரும் அளவில் மேம்பட்டுள்ளது. குழந்தையின் முதல் 36 மாதங்களில், மனித மூளையின் மிக அதிவேக மற்றும் ஆழமான மேம்பாடு உருவாகிறது. சமூகரீதியில் நன்கு இணைந்து செயல்பட வேணடிய உலகத்தில், குழந்தைகள் உணர்ச்சிபூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் வலிமையாக வளரும் போது, மூன்று வயதிற்குட்பட்ட காலங்களில், பெற்றோர்களுக்கு உதவி அத்தியாவசியமாகிறது. ஊட்டச்சத்து, ஊக்கமளித்தல், ஆரம்ப நிலை தலையீடு மற்றும் இந்த நிலையில் பெற்றோர்களுக்கு உதவி ஆகிய முன் ஏற்பாடு வசதிகள் அது குறித்த தகவல்களைத் தரும் வகையில் தற்போதைய ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (ICDS) முன் ஏற்பாடு வசதிகளுடன் ஒன்றிணைக்கப்பட்ட வேண்டிய தேவையுள்ளது. பள்ளிக்கான தயாரிப்பு செயல்பாடுகளும், ஆரோக்கியமான உடல்நிலை & சமூக மேம்பாடுகளும் உள்ளடக்கிய மேம்பாட்டுத் திட்டங்களை 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் அணுகி பெறக்கூடிய தேவையுள்ளது. மேம்பாட்டிற்கான தகுந்த செயல்பாடுகளை ஒரு செயல்படும் சூழலில் அதை பாதுகாப்பானதாகவும், சுத்தமாகவும் அரசு முன்னேற்பாடு வசதிகளின் பகுதிகளாக தருவது தேவையாக உள்ளது. குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி Early child hood care & Development - ECCD) அதற்கான மத்திய & மாநில குழுமங்கள் அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அவை செயலற்றதாகி இருக்கின்றது. இந்த குழுமங்களின் கொள்கை பரிந்துரைகளாக கீழ்க்கண்டவைகள் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1. 0 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளின் ஒட்டு மொத்த மேம்பாட்டிற்கு உதவி செய்ய சரியான திசைவழி காட்டுதல்களை இறுதி செய்ய வேண்டும், அவையாவன பெற்றோர்களுக்கு அறிவுரை, குழந்தைகள் காப்பகம், மழலையர் பள்ளிகள் & ஊட்டச்சத்து மையங்கள் ஆகியவற்றிற்கு அனைத்து தரங்களை உள்ளடக்குதல், பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளின் மூலம் நடத்தப்படும் இத்தைகைய நிறுவனங்களின் ஒழுங்கு முறை வரம்புகள் ஏற்படுத்த வேண்டும்.
2. மேம்பாட்டுத் தாமதங்கள் & குறைபாடுகள் ஆகியவற்றால் குழந்தைகளின் பெற்றோர்கள் அபாயத்தில் உள்ளதால் உள்ளூர் ஆரம்ப சுகாதார நிலையம் Primary Health Centre - PHC அல்லது ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம் - Integrated Child

Development Scheme - ICDS அல்லது தனியார் மருத்துவர் முன்னுரிமை கொடுப்பதற்கு தேவையுள்ளது - ஆகவே ஆரம்பநிலை தலையீடு அவசரத்தில் தொடங்க முடியும்.

3. ஆரோக்கியம், குழந்தை & குடும்ப நலன், கல்வி & மனித மேம்பாடு ஆகியவை குறித்த ஒன்றிணைந்த பாணியில் கொள்கையை வகுப்பதற்கு ஒழுங்குமுறை வழிகாட்டு நெறிமுறைகள் தேவைப்படுகிறது.

4. உள்ளாட்சி அமைப்புகள் & உள்ளூர் சுய அரசு குழக்களை உள்ளடக்கிய, பல்வேறு துறைகளின் ஒன்றிணைப்பு & பொறுப்பேற்கும் தன்மையை அதிகப்படுத்தக் கூடியதான, அரசு நிதி ஒதுக்கீடு மற்றும் மூல வளங்கள் குறித்த முன்னேற்பாடு வசதிகள் ஏற்படுத்த தேவையுள்ளது.

5. குறைந்தபட்சம் 5% மேம்பாட்டு நிதியை இந்தத் துறைகளிலிருந்து, உள்ளூர் சுய அரசு குழுக்களான ஊராட்சிகள் போன்றவற்றிற்கு குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கல்விக்காக அர்ப்பணிக்க தேவையுள்ளது. இந்த நிதி, பொது குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சிகான வசதிகளை நல்ல முறையில் செய்ய உறுதிப்படுத்த பயன்படுத்த முடியும் என்பது மட்டுமல்லாமல், அருகே உள்ள 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் குழந்தை நலன் ஆகியவற்றை தேவைப்படும் தருணத்திலேயே உறுதி செய்யும்.

6. குழந்தை பிறந்த பின் பெற்றோர்களுக்கும், கவனித்துக் கொள்பவர்களுக்கும், குழந்தை நல மருத்துவர்கள் & மற்ற ஆரோக்கிய தொழிற்முறை வல்லுநர்கள் மூலம் பெற்றோர்களுக்கான அறிவுரைகளின் ஒரு பகுதியாக வழங்கப்படுவது ஆரம்பநிலை ஊக்கம் ஊட்டுதலுக்கு தேவையாக உள்ளது.

7. பிழைத்து வாழ்தல் - நலம் பெறுதல் ஆகியவை உள்ளடக்கிய மனித வளமேம்பாடு, குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி (ECCD) திட்டத்தின் முக்கிய குவியமாக இருக்க தேவையுள்ளது.

8. வயதிற்குட்பட்ட குழந்தைகள் குறித்து அறியாமையால் அலட்சியமாக இருப்பதால் மிக மோசமான மூளை ஆற்றல் இழப்பு நேரிடுகிறது, இது கல்லூரி படிக்கும் காலகட்டத்தில் நடப்பதல்ல.

9. குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி - சம்பந்தமான துறைகளில் உள்ள காலி பணியிடங்கள், அவசரத் தன்மையை பெரிதும் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் உடனே நிரப்பப்பட வேண்டியுள்ளது. குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி - குழுமங்கள் அதில் உறுப்பாக உள்ள கல்வியாளர்கள், ECCD-யில் சிறப்பு தன்மை பெற்று தன்னார்வ தொண்டு நிறுவனங்கள். பல்லைக்கழகங்கள்

& பிற உயிர்கல்வி நிலையங்கள், தன் கீழுள்ள இத்துறையின் பணியாளர்களுக்கு அவர்தம் அறிவு & தொழில்முறை வளர்ச்சிக்கு தொடர்ச்சியான கவனம் செலுத்துவது தேவையாக உள்ளது. வட்ட அளவில் பெற்றோர் குழுக்களை உருவாக்கி அதன் மூலம் பொது சமூக மக்களை அதில் இணைத்து செயல்பட வைப்பது தேசிய, மாநில & உள்ளூர் அரசுகளின் யுக்தியின் பகுதிகளாக இருப்பது தேவையாக உள்ளது.

10. இந்தத் துறைகளில் செயல்படும் தனியார் துறை சார்ந்தவர்களை ஒழுங்குபடுத்துவதில் கவனம் செலுத்துவது மிக உயரிய முக்கியத்துவமாக இத்துறைகளில் உள்ளது. 18 மாதத்திற்குப்பின் அந்த இளம் பருவத்திலேயே குழந்தைகளை, குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கும் போக்கு நடைபெற்று வருகின்ற காலகட்டத்தில், நல்ல ஆய்வுகள் மூலம் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகள் & வழிகாட்டுதல்கள் இதைக் கண்காணிக்கும் போது ஆக்கப்பூர்வமாக அமைய முடியும். தனியார் மழலையர் பள்ளி பணியாளர்களை - வட்டக் குழுக்கள், ஆலோசனை வாரியங்கள் தொழில் முறை உறுதுணை கூட்டமைப்புகளில் இணைத்து, இருக்கக்கூடிய பொது சமூகத்திலுள்ள மனித வளத்தை நமது நாடு பயன்படுத்த முடியும்.

11. மழலையர் பள்ளிகளும், குழந்தைகள் காப்பகங்களும் அங்கீகாரம் & அனுமதி பெறுவது, தற்போது, முற்றிலும் வேறான பலதுறை அதிகாரிகளின் கைகளில் உள்ளது. அது தவிர, குழந்தைகள் சேர்க்கை ஏற்கனவே முடிந்து விட்ட நிலையிலும் அங்கீகாரத்திற்கான வழிமுறைகள் நடந்து கொண்டே இருக்கும் சூழல் இருக்கிறது. இந்த நிலை மாறத் தேவையுள்ளது. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இந்த நிறுவனங்கள் தகுதி உடையது என்று, போக்குவரத்து, கட்டமைப்பு அது போன்ற சுத்தத்திற்கான வசதிகள் கீழ்க்கண்டவர்களால் ஆய்வு செய்யப்பட்டு & சான்றளிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அந்த அமைப்புகள், வட்ட (ஊராட்சி) உறுப்பினர்கள் அப்பகுதியில் வசிக்கும் ஓய்வு பெற்ற உயர் அலுவலர்கள், பெரிய சேவை நிறுவனங்கள் - ரோட்டரி போன்றவை (போலியோ தடுப்பு சொட்டுமருந்து போடுதல் பரப்புரையில் முக்கிய கருவியாக இருந்த அமைப்பு), வர்த்தகத் துறை நிறுவனங்கள் ஆகியோரை உள்ளடக்கிய உள்ளூர் அதிகாரக் குழுவினர்.

12. அரசு உதவி பெறும் பள்ளிகளின் செயல்பாட்டார்வத்தைப் போல பொதுத்துறை - தனியார் - பங்களிப்பு (PPP) முறையில் மாதிரி குழந்தைப் பருவ பராமரிப்பு, வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இது நகரமயமாக்கலின் நெருக்கமான மக்கள் மத்தியிலும் தொலைதூரங்களில் வாழும் மக்களிடமும்

அவர்தம் பகுதிகளில் ஏற்படுத்த தேவையுள்ளது. இந்தப் பகுதிகளில் உருவாக்கப்படும் மாதிரி ணிசிசிஞீ மையங்கள், பாதுகாப்பான போக்குவரத்து & பகல் நேர கவனிப்பு மையங்களின் நெகிழ்வான பணி நேரங்கள் அத்துடன் எப்போது முடியுமோ அப்போது பெற்றோர் குழந்தையை விட்டுச் செல்லும் வசதி செய்தல் ஆகியவற்றை வெளிக்காட்ட முடியும்.

13. ECCD மையத்தில் பெண்களை மட்டுமே நியமனம் செய்து, அதனுடன் மிகக் கடுமையான தொழில்முறை செயல்பாட்டையும், வெகுமதியளிக்கும் பணிச் சூழல்களையும் அவர்களுக்கு தரவேண்டும். இந்த அளவீடுகளை உள்ளடக்கிய கொள்கைகள் தேவைப்படுகின்றன.

14. கண்காணிக்கும் அதிகாரிகள் இந்த மையங்களுக்கு இருவராகவும் & அடிக்கடியும் செல்லத் தேவையுள்ளது இது ECCD மையங்களை வட்டார அளவில் தொழில்முறை கூட்டமைப்பாக வளர்த்தெடுப்பதற்கும், ECCD மைய அளவில் தரத்தை உயர்த்திட உதவி செய்யவும் வழி செய்யும்.

15. உள்ளூரில் துறை சார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய தொழில்முறை & கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டிய, பதிவு செய்ய வேண்டிய, செயல்பட செய்ய வேண்டிய தேவையுள்ளது. குழந்தை நல மருத்துவர்கள், ECCD ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், உளவியல் நிபுணர்கள், சிறப்பு கல்வியாளர்கள், பொது ஆரோக்கிய தொழில்முறை நிபுணர்கள், விளையாட்டு பயிற்சியாளர்கள், பொதுப்பணியில் ஆர்வமுள்ள பெற்றோர்கள், தொண்டு நிறுவனங்கள், பொறியாளர்கள். எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகிய அப்பகுதியை சேர்ந்தவர்கள் இதில் சிறப்பாக உறுப்பினராக செயல்பட முடியும். இந்த கூட்டமைப்பு ECCD மையங்களை பார்வையிட்டு தரம் உயர்த்த உதவி செய்ய முடியும். அது போன்று தேவையான சமயங்களில் இந்த ECCD மையங்கள் அவர்களை அழைக்க முடியும். இதுவே மாநில ECCD அளவிலான குழுமங்களின் அறைகூவலாக இருக்க வேண்டிய தேவை உள்ளது.

16. மனித உரிமை ஆணையம் (HRC) பெண்கள் ஆணையம், மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (state commission for protection of child Rights - SCPCR) ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் Integrated child protection scheme - ICPS, மத்திய அரசின் பெண்கள் & குழந்தைகள் நலத்துறை) ஆகியவற்றிற்கிடையே தொடர்பு இணைப்புகள், அனைத்து குழந்தைகளின் ணிசிசிஞீ மையங்களை கண்காணிக்கும் மாநில குழந்தைகள் குறித்த கொள்கையின் பகுதிகளாக இருக்க வேண்டிய தேவையுள்ளது.

# V. ஆரம்பக் கல்வி

86 வது அரசியல் அமைப்புச்சட்டம் கல்வி உரிமையை பல தடைகளுடனே வழங்கி உரிமையினை அரசு கட்டுப்படுத்தி விட்டது. ஒரு வழியாக 2009ல் கல்வி உரிமைச்சட்டம் பிரேரிக்கப்பட்டு 2010 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமுலாக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஆயினும் எல்லாக்குழந்தைகளும் பள்ளியில் சேரவில்லை. தரமான கல்வியும் வழங்கப்படவில்லை. இது அப்பாவிக் குழந்தைகளை ஏமாற்றியது போல் ஆகிவிட்டது.

கோத்தாரி கமிஷனின் உறுப்பினர் செயலராக இருந்த டாக்டர் ஜே.பி.நாயக் என்ற கல்வியாளர் ஆரம்பக் கல்வி பெரும் தோல்வி எனக் கூறுகிறார்.

கல்வி உரிமைச்சட்டம் சட்டத்தில் சமத்துவம் தரம் ஆகியனவற்றில் இருந்து விலகி

தனியார் பள்ளிகள் ரத்தம் உறிஞ்சும் பங்காளிகளாக மாறி உள்ளனர். இது இரண்டு இணையான அமைப்புகளாக கீழிறங்கிய அரசுப் பள்ளிகள் கட்டண வசூலிக்கும் தனியார் ஆங்கிலப் பள்ளிகள் என உருவாக்கிவிட்டது.

தனியார் பள்ளிகளில் 25% சதவீத ஒதுக்கீடு என்ற காரட்டை சாதாரண மனிதனுக்குக் காட்டி உண்மையில் அவர்களின் குழந்தைகள் சேர்க்க முடியாதது மட்டுமல்ல சேர்ந்த குழந்தைகளுக்கான கட்டணத்தை அரசு வழங்கி வருகிறது.

கல்வி உரிமைச் சட்டப்படி பள்ளி நிர்வாகக்குழு மற்றும் கிராம கல்விக்குழு ஆகியன இரண்டிற்குமான சட்ட ரீதியான ஒருங்கிணைப்பு துவக்க நிலையிலேயே தேங்கி இருக்கிறது.

இந்தச் சட்டம் வந்தது முதல் விட்டதும் தொட்டதும் நடந்தாலும் தவறு செய்தவர்கள் மீது சட்டப்படி எந்த விதமான நடவடிக்கையும் இல்லை. இதனால் தண்டனைக்கான வாய்ப்பு இருந்தும் சட்ட மீறல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நமது முக்கிய கோரிக்கை என்பது கல்வி உரிமைச் சட்டத்தை மாற்றி

அமைத்து கீழ்க்கண்டன கொண்ட புதிய உரிமைச்சட்டம் இயற்ற வேண்டும்

1. கட்டாய இலவசக் கல்வி என்பது ஐநா சபை குறிப்பட்டபடி 18 வயது வரை இலவச கட்டாயக் கல்வயை வழங்க வேண்டும்.
2. மூன்று கட்டக் கல்வி: ஆறு வயது வரை குழந்தமைக் கல்வி, ஆறு முதல் பதினான்கு வரை ஆரம்ப நடுநிலைக் கல்வி, பதினான்கு

முதல் பதினெட்டு வரை உயர்நிலை மேல்நிலைக் கல்வி.

3. குழந்தைமை, ஆரம்பக் கல்வி அருகாமைப் பள்ளி மூலமே வழங்கப்பட வேண்டும். அப் பகுதியில் இயங்கும் இப் பள்ளிகள் கட்டாயம் குழந்தைகளைச் சேர்கக வேண்டும.
4. ஒவ்வொரு வருடமும் பள்ளி சேர்ப்புக் குழந்தைகள் கணக்கெடுப்பு செய்து பள்ளிகளே குழந்தைளைச் சேர்ப்பதில் முன்னணி வகிக்க வேண்டும்.
5. சுமையில்லாக் கற்றல் என்ற யஷ்பால் கோட்பாட்டின் படி பாடத்திட்டம் புத்தகப்பை வகுப்பு நடைபெறுதல் பாடப் பத்தகங்கள் சிறு சோதித்தல் தேர்வுகள் ஆகியன கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.
6. எது மேன்மையான தேவையாக எந்த மாநிலம் கொண்டிருக்கிறதோ அந்த குறைந்த பட்ச கட்டமைப்பு பள்ளிகளுக்கு உறுதிப்படுத்த வேண்டும்.
7. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு ஆசிரியரும் மேலும் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் நியமனமும் பணி மாற்றமும் பள்ளி அந்த ஆண்டு துவங்குவதற்கு முன் நடைமுறைப்படுத்த வேண்டும்.
8. வருடத்திற்கு 1100 மணி நேரக் கற்பித்தல் உறுதிப்படுத்த வேண்டும்.
9. விளையாட்டு ஓவியம் நடனம் கைவினைகள் போன்றவற்றிற்கு கால ஒதுக்கீடு தர வேண்டும்.சற்றுப்புறத்தை அறிய வெளிஉலா ஏற்பாடு செய்ய வேண்டும்.
10. மாதாந்திர பெற்றோர்கள் கூட்டம் நடத்தப்பட வேண்டும். தொடர்ந்து வரத் தவறும் பெற்றோர்களை ஆசிரியர்கள் சந்தித்து குழந்தையின் கல்வி வளர்ச்சியைத் தெரிவித்திடல் வேண்டும்.

**கலைத்திட்டம்**

பள்ளி இடைவிலகலுக்கும் கற்றல் குறைபாட்டிற்கும் முக்கிய காரணம் சுமையான கலைத்திட்டமும் குழந்தை அனுபவத்தைப் புறக்கணித்த முதியோர் சார் அணுகுமுறையுமே ஆகும்.

மொழிக் கற்றலையே நாம் குழந்தைகளுக்கு கவனம் செலுத்தி அதன் மூலம் சுயமாகக் கற்றுக் கொள்ளும் திறனை உருவாக்க வேண்டும்.

மொழிச் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கணக்கில் கொண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது விஷயத்தில் இந்திய அந்நிய மொழிகள் மைய குறிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

70% மொழி கேட்பதற்கும் பேசுவதற்கும் பயன்படுவதால் வாய்வழிப் பயிற்சிக்கு முக்கியத்துவமம் கொடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவது மொழியாக ஆங்கிலம் ஆறாம் வகுப்பில் இருந்து ஆரம்பிக்கலாம். அதிக மொழிகள் பயிற்றுவிக்கப் படும் போது கணிதம் அறிவியல் சமூக அறிவியல் ஆகியனவற்றிற்கான பாடவேளைகள் குறைக்கப் பட வேண்டாம்.

அலையன்ஸ் பிராங்காஸ் மேக்ஸ்முல்லர் பவன் போன்ற நிறுவனங்கள் மூலம் பிற மொழி கற்பிக்கப் படுவதுபோல் பிற இந்திய மொழிகள் கற்க விரும்புவோர் கற்றுக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். தற்போது இந்தி சமஸ்கிருதம் தற்சமயம் அஞ்சல் வழிமூலம் நடத்தப்படுகிறது.

பிற பாடங்களுக்கு 2005 தேசிய கலைத்திட்ட முறை பின்பறறல் வேண்டும்.

விடுதலைப் போராட்ட வீரர்கள் பிற இலக்கியவாதிகள் உள்ளிட்ட உள்ளூர் வரலாறுமும் நீர் வளம் உள்ளிட்ட உள்ளூர் புவியியலும்இடம் பெற வேண்டும்.

மக்களுக்குள் நம்பி இருத்தல் வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துதல் ஆகியனவற்றிற்கு அழுத்தம் தருதல். யுத்தம் தகராறுகளால் ஏற்படும் உயிர் பொருளாதார நஷ்ட்டத்தைவிளக்கி அமைதி ஒற்றமை ஆகியனவற்றிற்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

கற்றல் வழிமுறைகள் மாணவர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தல் வேண்டும். கூட்டு கற்றலை ஊக்குவிக்க வேண்டும்.

பாடப்புத்தகங்கள் பாலின சமத்துவம் கொண்டிருக்க வேண்டும். எளிய முறையில் எழுதப்பட்டு குழந்தைளே சுயமாய் கற்றுக் கொள்ளும் வண்ணம் உருவாக்க வேண்டும்.

**மதிப்பிடுதல்**

ஆசிரியர் மதிப்பிடும் முறையில் இருந்து விடுபட வேண்டும். மாநில கல்வி அமைப்புகளுடன் ஞிமிணிஜிஷி ஆகியனவற்றுடன் இணைந்து ழிசிணிஸிஜி சோதிக்கப்பட்ட மதிப்பீட்டு முறையை குழந்தைகளுக்குத் தயாரிக்க வேண்டும்.

குழந்தைகளே தன்னைத்தானே சோதிக்கும் முறையைப் பயன்படுத்தி அவர்களின் குறைபாடுகளைக் கண்டறிய வேண்டும். சோதித்தலும் தேர்வு முறைகளும் ரகசியத் தன்மை கொண்டுள்ளதைத் தவிர்க்க வேண்டும். திறந்த புத்தக வழித் தேர்வு முறை மூலம் கேள்விகளுக்கான பதில் தேடும் முறையை ஊக்கப்படுத்த வேண்டும்.

தேர்வு என்பதும் ஒரு கற்றல் முறையாகச் செய்யப்பட வேண்டும்.

VI.

# உயர்கல்வி & மேல்நிலைப்பள்ளி நிலை..

**அறிமுகம் :**

*சுதந்திரம் வாங்கிய போது ,1947ம் ,ஆண்டு, இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் வெறும் 10 %மட்டுமே இருந்தது.. 2002ல், அதாவது சுதந்திரத்தின் 50 ஆண்டுகளுக்குப் பின்னர், அனைத்து வித முயற்சிகளையும் செய்த பின்னரும் கூட , மைய மற்றும்மாநில சதவீதம் 52 ஆக மட்டுமே உயர்ந்தது. 2002ம் வருடம் மிக குறிப்பிடத்தகுந்தஆண்டாகும். ஏனெனில், அந்த ஆண்டுதான், அரசியலமைப்பு சட்ட அடிப்படை உரிமையான துவக்க கல்வியை (8 ம் வகுப்பு வரை) இலவசமாக ஆக்குவது என திருத்தப்பட்டது. நம் நாட்டில்தான், உலகிலேயே அதிகமான எழுத்தறிவற்றவர்கள், அதாவது சுமார் 480 மில்லியன் பேர்கள்உள்ளனர்.. என 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. ... இந்தியாதான் , ஆசியாவிலேயே, (மியான்மரைத்தவிர) மற்ற நாடுகளிடமிருந்து கல்வியில் பின் தங்கி இருக்கிறது. இன்று ஜப்பான், தென் கொரியா, தைவான், தாயலாந்து, மலேசியா, மற்றும் சிங்கப்பூர் போன்றவை இன்று கல்வியில் மிகவும் அதிசயிக்கத்தக்க அளவில் முன்னேறியிருக்கின்றன. அங்கிருக்கும் எழுத்தறிவற்றவர்களின் மொத்த எண்ணிக்கையும் கூட இதைவிட குறைவாகவே இருக்கிறது. தாய்லந்தில் 1990, மார்ச்சில் நடந்த, டோமடியன் மாநாட்டிற்குப் பின்னர்,முக்கியமாய் பேசப்பட்ட, அனைவருக்குமான கல்வி என்றஇந்தியாவின் அர்ப்பணிப்பு எல்லாம் இன்று சந்தேக வினாக்களை எழுப்புகிறது. 2000ம் ஆண்டு நியூயார்க்கில் நடந்த, ஐக்கிய நாடுகள் சபையின் மில்லினியம் உச்சி மாநாட்டில், இந்தியாவும் ஒரு பங்காளி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதில் நாம் மில்லினியம் வளர்ச்சியின் இலக்காக, அனைவருக்குமான துவக்க கல்வியை, 2015 க்குள் எட்டிவிடுவோம் என்ற விஷயத்தை முழுமையாகவே ஏற்றுக்கொண்டோம்.ஆனால்,2000களில், நாம் அனைவருக்குமான கல்வி* (Sarva Shiksha Abhiyan) *என்பதை, அறிமுகப்படுத்தியும் கூட,இன்றும் 2016-17 ல் கூட கல்வியின் இலக்கை அரைக்கிணறு கூட தாண்டவில்லை..இப்போது உயர்நிலைக் கல்விக்கும் அதே விதிதான் நேர்ந்துள்ளது என்பது மிகவும் கொடுமை. அதுவும்,உலகிலேயே அதிகமான இடைநிற்றல் என்பது உயர்நிலைக்கல்வியிலும்கூட இந்தியாவில்தான் அதிகமாக உள்ளது.*

இங்கே உயர்நிலைக்கல்வி என்பது மிஙீ & ஙீ வகுப்புகளை உள்ளடக்கியது, அதுவே, மேல்நிலைபள்ளி கல்வியான ஙீமி & ஙீமிமி வகுப்புகளுக்கு இட்டுச் செல்வது. இது அடிப்படையாக 14-18 வயதிலுள்ள பதின்ம வயது குழந்தைகளை,உயர்கல்விக்கு கொண்டு செல்ல ஒரு முன் தயாரிப்பு என்றே சொல்லவேண்டும். இது பள்ளிக்கல்விக்கும், உயர்கல்விக்கு இடையில் உள்ள ஒரு முக்கியமான படிம நிலையாகும். ஆனால், நம் நாட்டில், இந்த 14-18 வயது கல்வியானது, துவக்க கல்வி போலவோ அலல்து உயர்கல்வி போலவோ அவ்வளவு முக்கியமாக கருதப்படவில்லை என்பது மிக்வும் பரிதாபமான நிலையாகும்.இருப்பினும் கூட,இது துவக்க கல்வி மற்றும் உயர் கல்விக்கு இடையே உள்ள பலமாகவே இருப்பதால், இந்த காலம் /பருவம் என்பதுமிகவும் முக்கியமாக நிலைதான்.எனவே இந்த காலம் மிகவும் பலமாக/, வலுவுள்ளதாக இருக்க வேண்டும்.

**நிர்வாகம் :**

1986 ல் வந்த புதிய கல்வி கொள்கையும் (ழிறிணி),மற்றும் அதனுடைய செயல்பாட்டு திட்டமும்,(1992) இணைந்து, இந்தியா முழுவதும், உயர்கல்வியை விரிவு படுத்துவது தொடர்பாகவும் திட்டமிட்டு அழைத்தது. இப்போது அது, அனைவருக்குமான கல்வி போலவே பிரிக்கப்பட்டு ராஷ்டிரிய மத்யாமிக் சிக்ஷா அபியான் என்ற அமைப்பின் மூல நிதி உதவியும் செய்யப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது. 1986 ம் ஆண்டின் கல்விக் கொள்கை, தமிழ் நாட்டில் உள்ள, செகண்டரி பள்ளி போர்ட்களை (Boards of Secondary Education ) முழுமையாசீரமைப்பதாக வாக்குறுதி அளித்தது.

ஆனால் தமிழ்நாட்டில் நீண்ட நெடிய போராட்டத்துக்குப் பின்னரே, சமச்சீர் கல்வி என்ற பொது மேடையை உருவாக்கியது. . இதில் 4 விதமான பள்ளிகள் உள்ளன., அதாவது மாநில போர்டு ,ஆங்கிலோ இந்தியன் போர்டு,மெட்ரிகுலேஷன் போர்டு மற்றும் சி.பி.எஸ்.இ., என உருவானது.

கல்லூரிக்கல்வி படிப்புக்கு அடித்தளம் இடும் /இட்டுச்செல்லும் மேல்நிலைப்பள்ளிக்கு கல்வி என்பதற்கு அரசால், மிக்க குறைவான அளவு நிதியே/பங்களிப்பே கொடுக்கப்படுகிறது. 1986 ம் ஆண்டின் ழிறிணி எனபது, மேல்நிலைக்கல்வி மூலம், பரந்துபட்ட கல்வி வாய்ப்புக்கு வழிகோலும் எனவே தனிப்பட்ட வேலைவாய்ப்புக்காக திறன் வளர்க்கப்படும் என்றெல்லாம் உறுதி அளித்தது. மேலும் இது பள்ளிகளில், வேலைவாய்ப்பு படிப்பு & திட்டம, பற்றியும் அதிகம் பேசியது. ஆனால் துரதிருஷ்ட வசமாக, தனியார் பள்ளிகள் சிறப்பு மனன கலாச்சாரத்துகான சந்தையாக,மாறியது. அதற்கு தனியார் டியூஷன் மையம் மூலம் ஆட்கள் சேர்க்கும் கலையைக்

கைக்கொண்டதன மூலம், தமிழகத்தின் குழந்தைகளின்மன மற்றும் உடல் நலம் அச்சத்துக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த டியூஷன் கலாச்சாரம், குழந்தைகளின் கற்றல் திறன் என்ற உண்மையான திறனை /சாரத்தை அடியோடு கொன்றுவிட்டது.

**கற்பிக்கும் கலை :**

2005,NCERT ல் உள்ள தேசிய பாடத்திட்ட அமைப்பு பணியில் உள்ள படி/சொல்வதாவது: கல்வியின் பாடத்திட்டம் என்பது ஒரு நாட்டின் தேசிய இலக்கை, கல்வியின் அனுபவங்களுக்குள் மாற்றும் ஒரு சாதனமாகும். இதுவும் கூட 1975 ழிசிணிஸிஜின் ஆவணத்தின் அடிப்படையிலேயே செய்யப்படுகிறது. ‘‘பத்தாண்டு ‘‘பள்ளிக்கான பாடத்திட்டம்‘‘

இன்றைக்கு கற்பித்தல் கலை என்பது,NCERT ஆவணத்தின்படி,உருவாக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. அவற்றில் பள்ளியின் அனைத்து நிலைகளும், துவக்க கல்வியிலிருந்து, உயர்நிலைக்கல்வி வரை அடங்கும். National Curriculum Frame Work என்பது , ஒவ்வொரு குழந்தையின்க்குமான, சமூக-கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதார அம்சங்களை உள்ளடக்கியதே..ஆனால் இன்றைய கற்பித்தல் முறையில், இவற்றை சமனப்படுத்துதல் , வாழ்வியல் திறன், மனித மதிப்பீடுகள் கண்டுகொள்ளப்படுவதே இல்லை. இல்லவே இல்லை என்பதுதான் நிதர்சனம். உலக மயமாக்கல், தனியார் மயமாக்கல் என்ற அம்சங்களின் பின்புலத்தில், கல்வியும், கற்பித்தல் கலையும் அடிப்படையிலேயே, நிறுவனமயமாக்கப்பட்டு,வணிகப் பொருளாக மாறி, சமுதாயத்தில், கல்வி மாணவருக்கு வாங்கும் பொருளாகவும், ஆசிரியர்/பள்ளிக்கு விற்பனை பண்டமாகவும் உருவெடுத்து விட்டது.

**கல்வி**

நமது நாட்டில், உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி என்பது, ஒவ்வொரு நிலையிலும் பொது தேர்வு முறையைக் (SSLC & Hsc) கொண்டுள்ளது. இதனை 10மீலீ & +2 என்றும் சொல்கிறோம். இரண்டு தேர்வுகளும், வாழ்வின் பிரச்சனைகள் /விளைவுகள் மற்றும் நம் குழந்தைகளின் உடல் நலம் பற்றி சொல்கிறது. இதில் சிஙிஷிணி எனப்து, அதிலுள்ள மற்றும் விரிவான மதிப்பீடு (contain & comprehensive evaluation) பற்றியும், புத்தகம் திறந்து பார்த்து தேர்வு எழுதும் முறை பற்றியும் சொன்னாலும், இதில் சமுதாய பாதிப்புகள் பற்றி சொல்வதே இல்லை. பெரும்பாலோருக்கு அதில் அவ்வளவாக ஈடுபாடு இல்லை.ஆனால் மாநில போர்டு எனப்படும் தமிழ்வழி கல்வி கடினமாகவும், உண்மைக்குப்புறம்பாகவும் உள்ளது. மேலும் இதில் அவ்வப்போது நிலைமைகளை மேம்படுத்துவது இல்லை.

அத்துடன் இதிலுள்ள தேர்ச்சி. தேர்வுபெறாத நிலை என்பது நிறைய மனித உரிமைப் பிரச்சனைகளை கிளறி விடுகிறது. இந்த மதிப்பெண் கலாச்சாரம், நிறைய ஆபத்தை தூண்டிவிடுகிறது. மனித உயிர்களை பலி வாங்கி இருக்கிறது வாழ்க்கை சூழலை சிக்கலாக்க செய்யும்.. அதைவிட முக்கியமாக, தேர்வில் முறைகேடுகளை ஊக்குவிக்கிறது. ஆகவே ஒட்டுமொத்தமாக, தேர்வுகள் எனபவை, சமூகம் ஒரு குழந்தை வாழவா? சாகவா என்பதற்கான விகிதாசாரத்திற்கான போராட்டத்தை/ தேவையை கருதி வைக்கபப்டுகிறது என்றே கூறலாம்.

எனவே.., அதற்காக கீழேயுள்ள, கொள்கை முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. எல்லா குழந்தைகளும், கட்டணமின்றி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி, முறையான அமைப்பு மூலம் படிக்க,ஆவன செய்தல்,Right to Education -ஐக்கிய நாடுகள் நிறுவன கொள்கைப்படி, ஒரு குழந்தை 18 வயது வரை படிக்க ஏற்பாடு செய்தல்
2. பள்ளிக்கல்வியில் தனியார்மயமாக்கலை நிறுத்துதல் மட்டுமே, அனைவருக்குமான துவக்க கல்வி மற்றும் முழுமையாக விரிவாக்கம் செய்யப்பட்ட உயர்நிலைக்கல்வி என்ற நிலையை எட்ட முடியும். தனியார் நிறுவனங்களை குழந்தைகளுக்கு கட்டண மின்றி கல்வி கொடுக்க ஏற்பாடு செய்தல். .
3. வளர்ச்சியடைந்த நாடுகள் போலவே, மற்றும் தென் கொரியா, ஜப்பான், சிங்கப்பூர் போலவும், நமக்கு அருகமைப் பொதுப்பள்ளிகள் தான் ஒவ்வொரு குழந்தைக்கும் இடமளிக்கும் வகையில் தான் தேவை. அவையும் கூட, குழந்தைகள் நடக்க கூடிய 1 கி. மீ தூரத்துக்குள்
4. ஒவ்வொரு அரச பள்ளியும், கட்டாயமாக முன்பருவ வகுப்பிலிருந்து (லிரிநி ) பனிரெண்டாம் வகுப்பு வரை கொண்டிருக்க வேண்டும். ஒரு குழந்தை அரச பள்ளிக்குள் நுழைந்துவிட்டாலே, அது பள்ளி இறுதி வகுப்பு வரை பள்ளி மாறாமல் ஒரே பள்ளியிலேயே படிக்கும்படி இருக்க வேண்டும்.
5. அ) பள்ளிக் கல்வி என்பது முன்போலவே மாநில பட்டியலுக்கு ( மாண்டகு மறுமலர்ச்சி திட்டம் 1919 போலவே) மாற்றப்படவேண்டும். இப்போதுள்ள உள்ளூர் பிரதிநிதிகள் பங்கேற்று குழந்தைகள் கல்வியில் ஈடுபடுவதிற்குப் பதிலாக ..கல்வி மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படுதல் வேண்டும். ஆ) இன்றைய உயர்கல்வி முறை எனப்து அதீதமாக அதிகாரிகள் மையமாக இருக்கிறது. கல்வி கெட்டி தட்டிப் போனதிற்கு இதுவும் ஒரு காரணம், நாம் ஒரு பள்ளியை முன்மொழிவோம்.

அதில் கல்விக்குழு இருக்கும். அதில் அந்த பள்ளி முழுமைக்கும் உள்ள பள்ளி அமைப்பில், உள்ளூர் சமூகம்,பங்கு பெற்று, மேற்பார்வையிடும்படியான ஓர் அமைப்பு இருக்க வேண்டும்.

இ) .2015, UNESCO கணக்கெடுப்பின் படி, பள்ளி செல்லும் வயதில் பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை 22 மில்லியன். . இது வளர்முக நாடுகளில் அதிகமாகவே உள்ளது. இந்த எண்ணிக்கையில் 43.16 % பெண் குழநதைகள் இதில் தலித் குழந்தைகளை 19.62% மற்றும் பழங்குடியினர் :9.06 %. எனவே அருகமைப்பள்ளிகளை உடனடியாக உருவாக்க அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இங்கு குழந்தைகளுக்கு +2 வரை, எவ்வித இடையூறும் இன்றி எளிதாக அனைவரும் வந்து போகும்படி, ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பு தேவை

6. மாவட்ட துவக்க கல்வி திட்டம் என்பது. பயனுள்ள வகையில் நன்றாக செயல்படவேண்டும். அதனை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.பள்ளி இடைநிற்றல் தவிர்க்கப்பட வேண்டும்.
7. பள்ளி சேர்க்கையில் உள்ளூர் கல்வி குழு தலையிட்டு, பள்ளியின் பதிவை அதிகப்படுத்த வேண்டும். பாலின மற்றும் சமூக வேறுபாடுளை களைய ஏற்பாடு செய்ய வேண்டும். (உள்ளூர் கல்விக்குழுவின் பணி )
8. மதிய உணவுத்திட்டம், பனிரெண்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்த பட வேண்டும்.மதிய உணவு, பள்ளியிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்க வேண்டும். அப்பள்ளியில்,குழந்தைக்கும் உடல்நலதிட்டம் மற்றும் .ஊட்டச சத்துணவு பள்ளியின் பகுதி செயல்பாடாக இருக்க வேண்டும்.
9. யார் வீட்டுக்குழந்தைகள் வாய்க்கும் கைக்குமான போராட்டத்தில் இருக்கிறார்க்ளோ, அவர்களுக்கு முறையான பள்ளி அமைப்பில் படிக்க போதுமான பணம் நேரம் , ஆற்றல் போன்றவை இருப்பதில்லை. நமது நாட்டிலுள்ள வறுமைதான் கல்வி பெற முடியாததிற்கும் , தொடர் கல்விக்கும் முக்கியமான காரணியாக உள்ளது.அவர்களே தொலைதூரத்தில், அரசின் எவ்வித தொடர்புக்கும் கிட்டாதவர்களாக உள்ளனர்.இவர்களில் அனுகூலமற்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்களும், பழங்குடியினரும். அது போலவே , மாற்றுத் திறனாளிகளும் இதில் எவ்வித அரசு மற்றும் பள்ளிகளின் பயன் பெற வாய்ப்பு இல்லாதவர்களாக உள்ளனர். நமது பள்ளிக்கல்வி முறை எனப்து பெரும்பாலும் நகரை மையமாக வைத்தே, நகர்மயமாக்கப்பட்டு இருக்கிறது.

பள்ளிப்பாடத்திட்டம் சரியான முறையில் இல்லை. பள்ளி கட்டிடங்களும் சரியான பாதுகாப்பில்லாத நிலையில், பள்ளியில் சோதனை சாலைக்கருவிகளும் இல்லாத நிலையில் உள்ளன. மாணவர்கள மற்றும் ஆசிரியர்களிடையேயும் சாதி ரீதியான படிநிலை அமைப்பு காணப்படுகிறது. இதனைக் களையவேண்டும். ப.ள்ளி நிர்வாகத்திலும் இவர்களுக்கு இடமில்லை.எனவே இவர்களுக்கு எங்கு திரும்பினாலும் பிரச்சினையே. இதனைக் களைந்து, இந்திய அரசியல் சாசன சட்டப்படி, அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்திட வழிசெய்ய வேண்டும்.

10. 1986 ன் புதிய கல்விக் கொள்கைப்படி, உயர்நிலைப் பள்ளியின் தொழில் ரீதியான அணுகுமுறை என்பது பள்ளிக்கல்வியை,நாட்டின் முதுகெலும்பான விவசாய வேலைகளிலிருந்தும், அந்நியப்படுத்தியது. எனவேதான், விவசாயம் 6 ம் வகுப்பிலிருந்து பள்ளியின் பாடத்திட்டத்திற்க்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

11. 1966ல் கூறப்பட்டுள்ள, கோத்தாரி கமிஷன் அறிக்கையின்படி, வேலை அனுபவமும், சமூகத்திற்கான பயனுள்ள பணிகளும், பள்ளிப்பாட திட்டத்தின் ஒரு அங்கமாக கொண்டு வரப்படவேண்டும். பள்ளிகளின் உயர் அடுக்குகளில் இவை யாவும் கொண்டுவரப்பட வேண்டும்.

12. கல்வியில் SCERT (state council for education Research&Training) என்ற அமைப்பு பள்ளியின் தரம்,, அதனை தரப்படுத்துதல், மேம்பாடு அடையச்செய்தல்,, கற்றல் திறனை அதிகரித்தல்,என கல்வியின் மதிப்பீட்டிலிருந்து, மேலும் உள்ளூர் தகவல்களையும் அனைத்தையும் உள்ளடக்கிய கல்வியை அவர்களுக்கு நாம் தான் முறைப்படுத்த வேணும்.

13. தாயமொழியே பயிற்று மொழியாக பனிரெண்டாம் வகுப்பு வரை இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளவும், உரையாடவும், விவாதிக்கவும், சித்தனை, கற்பனை செய்யவும் முடியும். பின்னர் ஆங்கிலம் உட்பட எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் படிக்கட்டும்.

14. 10 &+2 மாணவர்களுக்கான பொது தேர்வுகளை முற்றிலும் நீக்கப்படவேண்டும். பத்தாம் வகுப்பு எனப்து சிசிணி முறைக்குள் முப்பருவ வகைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். நீ & நீமிமி இரண்டு வகுப்புகளும் இரு பருவ வகைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். அந்தந்த பாடங்கள், உள்ளூர் சமூக பங்களிப்பு, செய்முறை பணி மற்றும் அனுபவம் போன்றவை முக்கியத்துவம் பெற வேண்டும். அத்துடன் கிரேடு முறை அமுல்படுத்தவேண்டும். மதிப்பெண் முறை வேண்டாம். 15.+1,+2 படிக்கும் மாணவர்கள்

பள்ளிக்கல்வி முறையின் பங்கேற்பு களாக இருக்க வேணும். அதில் மாணவர்கள், நிர்வாக அமைப்பு, ஒழுக்கம், பாடத்திட்டம், போன்றவைகளில் இடம் பெற வேண்டும். சில அடிப்படை கல்வி(துவக்க கல்வி மற்றும் முன்பருவ கல்வி ) போதிக்கவும் அவர்களைப் பயன்படுத்த வேண்டும்.

15. இந்தியா போன்ற ஜனநாயக நாடுகள், கல்வியை மிக்வும் ஊக்குவிக்க வேண்டும். மேலும் பலவகையான கலாச்சார வேறுபாடுகள் இருந்தாலும் , நாட்டை பன்முகத்தனமையுடன்,பன்முக கலாச்சசார முரணுடன், கொண்டு செல்ல அவற்றை பாதுகாக்க, தேசிய ஒற்றுமையுடன் இருக்ககற்றுத்தரவேண்டும். நமது அரசியல் சாசன சட்டப்படி, சமூக நீதியும்,மதச் சார்பின்மையும் பாதுகாக்கப்படவேண்டும்.எக்காரணம் கொண்டும், மத அடிப்படை வாதத்தை தூண்டுவது போல இருப்பதை நிச்சயம் அனுமதிக்க முடியாது.

16. அவ்வப்போது பாடத்திட்ட வளர்ச்சி எனப்து உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி யில் தொடர்ந்து நடைபெற வேண்டும். பாடத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் போன்றவற்றில் புதிய கற்பனைகள்,புதுமைகளை புரட்ச்சிகர சிந்தனைகள்,அறிவியல் விழிப்புணர்வு, போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

17. ஆசிரியர்கள்தான், கல்வி முறையின் முதுகெலும்புகள் .ஆசிரியர்கள் கல்வியின் அனைத்து தளங்களிலும் பங்கெடுக்கும் கற்றல் திறனை உருவாக்குபவர்கள் பல குழுக்களில் பங்கு பெற்று கல்வியின் பல அம்சங்களை கருத தருபவர்கள். பாடத்திட்டத்திலிருந்து, தினப்படி வாழ்க்கையிலிருந்து, நிர்வாகத்திலிருந்து அனைத்தும் கற்றுத் தரும் ஆசான்கள்.

## உயர்கல்வி

எந்த கல்விக்கொள்கையும் இந்திய அரசியல் சாசனத்தில் இடம் பெற்றுள்ள கோட்பாடுகளை பின்பற்றி அமைய வேண்டும். அடிப்படை வழிகாட்டி இலக்குகள் சமத்துவம், சக்திப் படுத்துதல், அனைவருக்கும் இடம் என்பவை. ஐக்கிய நாடுகளின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் தொடர்பான

நெறிமுறை இரண்டும் உயர் கல்வி மனித உரிமை என்றும் இதை குறிப்பாக இலவச கல்வி மூலம் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றும் கூறுகின்றன. இது இந்திய சூழலில் மீண்டும் வலியுறுத்தப்படவேண்டும். ஏனெனில்,பள்ளி, கல்லூரி மற்றும்

பல்கலை கழக மட்டங்களில் கல்வி வணிகமயமாவதை தொடர்ந்து பெரும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. நுகர்வோரின் பணம் தரும் வசதியை பொருத்து தரம் வேறுபடுகிறது. பாரம்பர்யமாக குறைவான பிரதிநிதித்வம் பெற்றிருந்த பகுதியினருக்கு வாய்ப்புகள் மேலும் சுருங்கியுள்ளன.

பணம் உள்ளோருக்கு மட்டுமின்றி சமூகத்தின் அனைத்துப்பகுதியினரும் அனுபவிக்கக வேண்டிய உரிமை என்று உயர்கல்வி பார்க்கப்படவேண்டும், மேலும் மேலும், தொழில்சார் படிப்புகள் நிதிபடைத்தொருக்கு மட்டுமே என்ற நிலை உருவாகிவருகிறது. இதனால் தான் மனிதர்களால் மானுடத்திற்காக உருவாக்கப்படும், அனைவருக்குமான சக்திப்படுத்தும் வளம் என்பதற்கு பதில் இன்று கல்வி என்பது பலலட்சம் கோடி டாலர் தொழிலாக பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் உயர்கல்வியில் சம்பந்தப்பட்ட வயது இடைவெளியில் ஆறில் ஒருபங்கினர் தான் உள்ளனர். கணிசமான அளவில் தலித், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் உயர்கல்வியில் இடம் பெறுவதில்லை.ஏழைகள் மிகக் குறைவு.

அரசிடம் நிதி இல்லை என்றும் எனவே உயர்கல்வியை விரிவாக தருவதற்கு றிறிறி முறை தேவை என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் உயர்கல்வியில் மகா ஊழல் நடப்பது (உ-ம் கேதன் தேசாய் மருத்துவ கல்வி ஊழல்) இந்த வாதம் பொய் என்பதை உணர்த்துகிறது.

கடந்த காலங்களில் வணிக நோக்கம் இல்லாமல் செல்வந்தர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவி நடத்திவந்தனர். ஆனால் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சமூக அக்கறையின்றி கொள்ளை லாபம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாக கொண்ட கல்வி தனியார்மயம் நிகழ்ந்துள்ளது. றிறிறி என்ற பெயரில் தனியாருக்கு லாபம் ஈட்டித்தரும் ஏற்பாடு தான் இது றிறிறி தீர்வு அல்ல. விளிம்பு நிலை மக்களின் பங்கேற்புக்கு உதவாது.

நமது உயர்கல்வி நிறுவனங்கள் கட்டமைப்பு அம்சத்தில்கூட மாற்று திறனாளிகளுக்கு உதவிகரமாக இல்லை. தனியார்மயம் இதை மேலும் மோசமாக்குகிறது என்பது கடந்த இருபதுக்கும் மேலான ஆண்டுகளில் காளான்போல் முளைத்துள்ள தனியார் கல்லூரிகளும் பல்கலைகழகங்களும் உணர்த்துகின்றன.

பிரச்சினை கட்டிடம் மட்டுமல்ல. நிலப்ரபுத்வ அணுகுமுறையும் ஜனநாயகமற்ற செயல்பாடும் மாற வேண்டும். பட்டதாரிகளின் கல்வி தரத்தின் குறைவுக்கு முக்கிய காரணம் அரசு உயர்கல்வியில் இருந்து ஒதுங்குவதாகும். கட்டுப்பாடுகள் நீக்கப்படிருப்பது தனியார் நிறுவனங்களில் ஜனநாயகமற்ற சூழலை ஊக்குவிக்கிறது. உயர்கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள் ஜனநாயகப் படுத்தப்படவேண்டும்.

அரசு தனது கடமையிலிருந்து விலகுவதும் உயர்கல்வியை கொள்ளை லாபம் ஈட்டுவதற்கான களமாக மாற்றுவதும் உயர்கல்வியை

அனைவருக்கும் கொண்டு செல்ல உதவாது. உயர்கல்வியை வலுப்படுத்த பள்ளி கல்வி வலுப்படுத்தப்படவேண்டும்.

பரிந்துரைகள்

1. மத்திய மற்றும் மாநில பல்கலை கழகங்களின் கல்வி மற்றும் நிர்வாகம் சார்ந்த தன்னாட்சி தன்மை உறுதிப்படுத்தப்படவேண்டும். அரசியல் தலையீடு கூடாது.
2. உயர்கல்வியில் அரசின் ஒதுக்கீடு உயர்த்தப்படவேண்டும்.

(ஆ) ஐந்தாண்டுக்கு ஒருமுறை எல்லா நிலைகளிலும் இரட்டிப்பாக்கப்படவேண்டும்.

(ஆ) மத்திய மாநில பல்கலைகளிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் கட்டமைப்பு மற்றும் ஆய்வு வசதிகள் மேம்படுத்தப்படவேண்டும்.

(இ) எல்லா மாவட்டங்களிலும் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வகையில் அரசு கல்லூரிகள் அமைக்கப்படவேண்டும். பலவீனமான பகுதிகளுக்கு சிறப்பு கவனம் வேண்டும்.

(ஈ) ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் அரசால் நிறுவப்படவேண்டும்.

(உ) பல்கலை மற்றும் கல்லூரிகளிடையே ஆய்வு வசதிகளை பகிர்ந்திட தக்க இணைப்பை ஏற்படுத்திட வேண்டும்.

(ஊ) மத்திய பல்கலைகள்,மண்டல ஆய்வு மையங்கள் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவேண்டும்.

(எ) அரசு உயர்கல்வி நிறுவனங்களில் கல்விகட்டணங்கள் குறைக்கப்படவேண்டும். முதல் தலைமுறை மாணவர்களுக்கு கட்டணம் கூடாது.

(ஏ) தரமான ஆசிரியர்களும் நிர்வாகிகளும் இட ஒதுக்கீடு நெறிமுறைகளின் அடிப்படையில் நியமிக்கப்படவேண்டும்.

3. தரமதிப்பீடு அதிகாரம், நிதி, ஒழுங்காற்றுதல் தொடர்பான அதிகாரங்கள்: (அ) NCHER மற்றும் HEFA அமைப்புகள் அதிகாரங்களை மையப்படுத்துகின்றன. அவை தேவையில்லை.
4. உயர்கல்வி மேலாண்மை ஜனநாயகப் படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள். மக்கள் பிரதிநி-திகள் கூடுதல் எண்ணிக்கையில் ஜனநாயகபூர்வமான முறையில் மேலாண்மை அமைப்புகளில் இடம் பெற வேண்டும்.
5. உயர்கல்வி அமைப்புகள் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படவேண்டும். ACCOUNTABILITY அவசியம்.
6. துணைவேந்தர் நியமனம் உள்ளிட்டு எல்லா நியமனங்களிலும் இதர செயல்பாடுகளிலும் ஊழல் முற்றிலுமாக தவிர்க்கப்படவேண்டும்.
7. திறந்தவெளி பல்கலைகழகங்களின் தரம் உயர்த்தப்படவேண்டும்.

# ஆய்வுக்கான கல்வி

*இந்தியாவின் அறிவியல் தொழில்நுட்பத்தின் மகத்தான வெற்றி விண்வெளித்துறையில் எனலாம்; சமூகத் தேவைகளுக்கான மகத்தான விண்வெளித்திட்டம், மற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் மிகக் குறைந்த செலவீட்டில் நிகழ்த்தப் பெறுகிறது. அரசு நடத்தும் விண்வெளித்துறை ஜனநாயக ரீதியாக வரவுகள் கொண்டு ஒருங்கிணைந்து குறிக்கோளை நோக்கி அதிநவீன தொழில்நுட்பத்தை இந்தியாவில் உருவாக்க முடியும் என்று நிரூபிக்கிறது.*

*அதே நேரம் வேறொரு கோணத்தில் பார்வையிட்டால், மிகவும் இருண்ட காட்சியே தெரிகிறது. நம் வெற்றியில் உயர்கல்வியின் பங்கு மனித வளம் உருவாக்குதலோடு நின்று விடுகிறது. நம் பல்கலைக்கழங்களும் கல்லூரிகளும் கவலை தரும் நிலையில் உள்ளன - சாதி ஊடுருவிய ஊழல் நிறைந்த கட்டமைப்பும் நிர்வாகமும், அடிப்படை ஆய்வு வசதியின்மை எனப் பல பிரச்சனைகள், பல்கலைக்கழங்களில் ஜனநாயக முறை இன்றைய அத்தியாவசியம். நாம் முன்னேற, இன்றைய பிரச்சனைகளை உடைப்பதும், அறிவுப் பிரிவுகளின் எல்லைகளை மறுப்பதும் அவசியம்.*

*நம் நாட்டின் உயர்கல்வி முறை பெரும்பாலானோரை வெளியே நிறுத்தியுள்ளது. ஆய்வுகளில் பங்கேற்போரின் எண்ணிக்கையோ மிக மிக்க் குறைவு. ஸி & ஞ்ரி யில் இந்தியாவின் செலவீடு உலகின் பெரிய நாடுகளிலேயே மிக்க் குறைவு எனலாம் - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.8% (ஒப்பீட்டுக்கு அமெரிக்காவில் - 2.6%, சீனாவில் -1.3%). ஆக எல்லா மட்டங்களிலும், எல்லா துறைகளிலும் செலவீட்டை அதிகரிப்பதோடு, செலவு செய்வதில் உள்ள தடைகளை அகற்றுவதிலும், பணியைக் கண்காணிப்பதிலும் கவனம் தேவை.*

R&D*ஐ பொறுத்தவரை நம் கல்வி முறை பரிசோதனைகளிலும், படைப்பாற்றலிலும், புதுமையை ஊக்குவித்தலும், அக்கறை காட்டாததே பெரிய தோல்வி எனலாம். இளைஞர்கள் கலையையும் அறிவியலையும் ஒருங்கிணைந்ததாக உணர்வதில்லை. சாதிமுறையில் ஊறிய கல்வி, உடலுழைப்பை ஏளனம் செய்து மூளை உழைப்பையே உயர்த்துகிறது. மதிப்பீட்டு முறை இயற்கையோடும் சமூகத்துடனும் பரிசோதனை கலந்த ஆய்வுக் கண்ணோட்டத்தைச் சிதைக்கிறது. தகவல்களை உட்கொண்டு தேர்வுகளில் வெளிப்படுத்துவதே கல்வியாகி, ஆய்வு பின் தள்ளப்படுகிறது. கள ஆய்வுகளை ஊக்குவிப்பதோடு,*

ஆய்வு மாணவர்க்கு கல்வி நிர்வாகத்தில் பங்கு பெறப் பயிற்சியும் தரவேண்டும். ஆய்வுகளின் தரம் உயர, ஆய்வுக்கான நிதி இளம் ஆய்வாளர்களுக்கு தேவைக்கேற்றபடியும் உடனடியாகவும் தரப்பட வேண்டும்.

இந்தியாவின் மையமான பிரச்சனைகளான நீர், ஆற்றல், சுற்றுச்சூழல், ஏழ்மை ஒழிப்பு போன்றவற்றுக்குத் தீர்வு காண ஆய்வுக் கலாச்சாரமும் அதில் சுதந்திரமும் புதுமையும் அவசியம். இன்று கணிணியல், தொடர்பியல், பொருளியல், உயிரியல் எனப் பலதுறைகளில் இன்று காணும் முன்னேற்றம் ஆய்வு வழிமுறைகளை அடியோடு மாற்றி, சிறு சிறு பரிசோதனைகள் வெற்றிபெற வாய்ப்புள்ளது. இதில் இந்தியாவின் R&D புது வடிவம் பெற்று மலர நல்ல வாய்ப்புள்ளது.

## ஆசிரியர் கல்வி

நம் கல்வியின் முக்கியக் குறைபாடுகளில் முக்கிய ஒன்றாக, "ஆசிரியர் தயாரிப்பின் போதாமை" யைக் குறிப்பிடுகிறது ழிசிதி 2005. ஆசிரியர் கல்விக்கான அமெரிக்க கமிஷன் இவ்வாறு கூறுகிறது, "ஒரு நாட்டின் தரம் அதன் குடிமக்களின் தரம் கொண்டு உள்ளது. குடிமக்களின் தரம் பெரிதும் அவர் பெறும் கல்வியின் தரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. கல்வியின் தரம், வேறு எந்தக் காரணியையும் விட, ஆசிரியரின் தரம் சார்ந்தே உள்ளது" நாடு வளர்ச்சி பெற, தகுதி வாய்ந்த தொழில் முனைப்புள்ள ஆசிரியர் படை இன்றியமையாதது.

எந்தக் கல்வி முறையையும் அதன் ஆசிரியர்களின் தரத்தை விட உயர்ந்து நிற்க முடியாது. இன்று நம் ஆசிரியர்களின் நிலை எவ்வாறு கவலைக்கிடம் என்பதை, ஆசிரியர் தகுதித் தேர்வுகளில் எவ்வளவு பட்டதாரிகள் தோல்வியடைகின்றனர் என்பது தெளிவாக்கும். மிக அடிப்படை அறிவு கூட எதிர்பார்க்க முடியாத நிலையில் இன்று நாம் உள்ளோம். ஆசிரியர் தேவைக்கேற்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் பல மடங்கு எண்ணிக்கையில் அதிகரித்தாலும், அவற்றில் அடிப்படை வசதி, பேராசிரியர்கள் எண்ணிக்கை, கற்பித்தல் தரம் பெரும்பாலும் குறைவே. கிட்டத்தட்ட 85% நிறுவனங்கள் தனியார் துறையில் இருக்கின்றன, அரசின் கண்காணிப்பு மிகக் குறைவாகவே உள்ளது.

ஆசிரியரின் தொழில்ரீதியான வளர்ச்சியை உறுதி செய்ய ஒரு தெளிவான கல்விக் கொள்கை மிகத் தேவையானது.

### ஆசிரியர் கல்விக்கான தொலைநோக்கு

வகுப்பறையில் தேவையான உத்திகளை உருவாக்கவும் கையாளவும் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு அவ்வாறு வழிநடத்தும் சுதந்திரமும் உறுதுணையும் தேவை. இதற்குத் தன்னுணர்வு கொண்ட

ஆசிரியர்கள் வேண்டும். வகுப்பறையில் பலவிதமான மாணவர்களை வழிநடத்திச் செல்லும் திறன் வேண்டும். இத்தகைய ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரியர் கல்வி பணிக்கு வருமுன் கல்வி, ஆரம்ப கால உறுதுணை, பணியிடைப் பயிற்சி - தொழில் முறை வளர்ச்சி என்று வகைப்படுத்தப்படுகிறது.

- இத்தகைய ஆசிரியர் கல்வியில் போதனா முறையியலுக்கும், நடைமுறைப்படுத்துதலுக்கும் சம பங்கு உண்டு. கல்வியின் ஒவ்வொரு நிலையும் எந்த தத்துவரீதியான, சமூகவியல் ரீதியான, உளவியல் ரீதியான அடிப்படை கொண்டுள்ளது என்று அறிவதோடு, ஆசிரியத் தொழிலின் நுணுக்கங்கள் அறிந்து தொழில் முன்னேற்றத்தில் பங்கு பெறுபவராக ஆசிரியர் இயங்க வேண்டும். தங்கள் துறை குறித்த ஆழம்.
- களா ஆய்வுகள் நிகழ்த்தும் திறம், இன்றைய நவீன தொழில்நுட்பங்களை வகுப்பறையில் பயன்படுத்தும் திறனோடு அவற்றை விமர்சனப் பார்வையுடன் அணுகும் விவேகம், என பல பரிமாணங்கள் ஆசிரியருக்கு முக்கியம்.
- இன்றைய ஆசிரியர் கல்வி முறையின் முக்கியமான குறைபாடு, கற்பித்தல் பயிற்சியில் உள்ளது. ஆசிரியர்-மாணவர்களை 16 வாரங்களுக்கு ஒரு பள்ளிக்கு அனுப்பினால் மட்டும் போதாது. அங்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய தெளிவும் வழிநடத்துதலும் மிக முக்கியம். பள்ளிகளுக்கும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கும் உள்ள தொடர்பை சீரமைப்பதும் வலுப்படுத்துவதும் இன்றைய தேவை.
- ஆசிரியர்களுக்கு பலவிதமான கல்விப் பொருட்களை, வளங்களை உருவாக்கித் தருதல் நாட்டின் முக்கியப் பணி. ஆசிரியர் கையேடுகள் கூடத் தயார் செய்யாமல் கல்வித்தரம் பற்றிப் பேசுவது சரியல்ல.
- ஆசிரியர்களுக்கும் பயிற்சி தந்து சான்றிதழ் தருவதோடு, அவர்களை வழிநடத்தும் ஆலோசகர்கள், ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு ஆசிரியர் உறவு வலுப்பட இணையங்கள், ஆசிரியர்களுக்கான பத்திரிகைகள், அறிஞர்களின் ஆலோசனை, அவ்வப்போது நம் கற்றலை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு எனப் பல அம்சங்கள் ஆசிரியத் தொழிலுக்குத் தேவை. தொழில்ரீதியான அங்கீகாரமும் மதிப்பும் அவசியம்.
- உயர்கல்வியில் ஆசிரியர் கல்வி என்று ஏதும் தனித்து இல்லை. இந்நிலையில் 5 மாதப் பயிற்சி என்ற ஆலோசனை வரவேற்கத்தக்கது.

**ஆசிரியர் தகுதி**

*இன்று ஆசிரியர் கல்வியில் நான்கு நிலைகள் உள்ளன. மழலையருக்கான, ஆரம்பப்பள்ளிக்கான, உயர்நிலைப்பள்ளிக்கான, உயர்கல்வி ஆய்வுக்கான என்ரு. இதில் முதல் மூன்றும் வேலை வாய்ப்பை ஒட்டியவை. மழலையர் ஆசிரியருக்கு 10ஆம் வகுப்பு தகுதி, ஆரம்பப் பள்ளி ஆசிரியருக்கு 12ஆம் வகுப்பு மர்றும் ஆசிரியர் பயிற்சி உயர்நிலைக்குப் பட்டம், மேல்நிலைக்கு முதுநிலைப் பட்டம் என்ற நிலை நிலவுகிறது. அதற்கேற்ப ஆசிரியர் கல்விச் சான்றிதழும் பயிற்சியும் வழங்கப்படுகின்றன -* D.Ed., B.Ed *என்றுபல நிலைகள் உள்ளன. இவற்றோடு* M.Ed, B.P.Ed., M.P.Ed., M.Phil, PhD *என்று பல பட்டங்களும் உண்டு. ஆசிரியர்களின் ஆசிரியருக்கு இறுதி சொன்ன தகுதிகள் விரும்பப்படுகின்றன*

*ஆசிரியர் கல்விக்கான தேசியக் கழகம்* (NCTE) *ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதோடு, ஆசிரியர் கல்வியின் பல அம்சங்களையும் நிர்வகிக்கிறது. சமீபத்தில் ழிசிஜிணி ஆசிரியர் கல்விக்கான தேசியப் பாடத்திட்ட வரையறை உருவாக்கியுள்ளது. அதில் 4 வருடப் பாடத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் துணைவேந்தர் கொண்ட கல்விக்கான பல்கலைக்கழகங்களும் உண்டு. இது தவிர மாநிலங்களில், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் ஆசிரியர் பயிற்சி, கல்வி நிறுவனங்கள் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் யார் பொறுப்பு என்ன, கடமை என்ன என்று நிர்ணயிக்கும் ஒரு தெளிவான கல்விக் கொள்கை தேவை.*

NCTE *இதுவரை ஆசிரியர் கல்வியின் தனியார்மயமாக்கத்திலோ அங்கீகாரம் தருவதில் நிலவும் ஊழலிலோ பெரும்பாலும் தலையிடாது நிற்கிறது. பணி அமர்த்தும் நிலையில் ஆசிரியர்களின் தகுதி உத்தரவாதப்படுத்தாது, பணியின் போது தேவையான கல்விப் பொருட்களைத் தராமல், ஆசிரியத் தொழில் வலுப்பெற உறுதுணை தராது. இந்தியாவின் கல்வித் தரத்தை உயர்த்த முடியாது.*

## கல்வியில் பட்டியலின / பழங்குடி மக்களுக்கான நலன்களுக்கான பரிந்துரைகள்

- *பட்டியலின / பழங்குடி மாணவர்கள் பள்ளி கல்வி முதல் ஆராய்ச்சி பட்டப் படிப்பு வரை, அனைத்துறை கல்வித் துறைகளிலும், அவர்களின் சேர்க்கையை, கடும் உறுதியுடன் அமுல்படுத்தும் முறையின் மூலம், கட்டாயம் அதிகரிக்கப்பட வேண்டும்.*

- பட்டியலின / பழங்குடி மாணவர்கள் கல்வி வளாகங்களில் சக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரால் பாரபட்சமாக நடத்தப்பட்டால், உடனே இதைத் தடுப்பதற்கான கல்வி வளாக குழுவிடம் கண்டிப்பாக கொண்டு செல்லப்பட்டு, பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனே நீதி கிடைக்க வழி வகை செய்யப்பட வேண்டும்.
- பட்டியலின / பழங்குடி மாணவர்கள் 11ம் வகுப்பில் எந்த பாடப்பிரிவில் சேர்ப்பது என்று வரும்போது கணிதம் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளில், முறையாக திட்டமிடப்பட்டு தவிர்க்கப்படுகின்றனர். அவர்கள் தொழில் பிரிவுகளைத் தேர்வு செய்ய கட்டாயப்படுத்தப் படுகின்றனர். இந்தப் பாரபட்சம் நிச்சயமாக போக்கப்பட வேண்டும்.
- பட்டியலின / பழங்குடி சமுதாய அமைப்புகள் நடத்தும் பள்ளிகளுக்கு சிறப்பு மானியங்களை அரசு உருவாக்கிட வேண்டும்.
- தமிழகத்தில் பல பள்ளிகள் பட்டியலின / பழங்குடி சமுதாய அமைப்புகளால் நடத்தப்படுகின்றன, உதாரணம் ஆதி திராவிட கல்வி அபிவிருத்தி சங்கங்கள், நந்தனார் பள்ளி, அம்பேத்கர் பள்ளி, இவை அனைத்தும் ஆங்கிலேயகாலனி ஆதிக்கம் இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டவை. ஆனால் இந்தப் பள்ளிகள் அனைத்தும் தொடக்கப்பள்ளிகள் என்ற மட்டத்தில் மட்டுமே உள்ளது. ஆகவே இந்த பள்ளிகளை மேம்படுத்த சிறப்பு மானியங்களை அரசாங்கம் கண்டிப்பாக உருவாக்கிட வேண்டும்.
- கிராமப்புற பட்டியலின / பழங்குடி மாணவர்களின் இடைநிற்றல் கல்வியில் அதிகம் உள்ளது, எனவே அரசு சிறப்பு கவனம் செலுத்தி இந்த இடைநிற்றலை குறைத்திட வேண்டும்.
- ரோகித் வெமுலா மற்றும் நூற்றுக்கணக்கான பட்டியல் இன மாணவர்கள், மத்திய பல்கலைக்கழகங்கள், மிமிஜி (இந்திய தொழில்நுட்ப நிலையம்), மிமிவிஷி (இந்திய மேலாண்மை கல்வி நிலையம்) கிமிமிவிஷி (அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையம்) ஆகிய உயர் கல்வி நிறுவனங்களில் தற்கொலை செய்து கொண்டது, அந்த உயர் கல்வி வளாகங்களில் விரிந்து பரந்து கிடக்கும் பாரபட்சத்தைக் காட்டுகிறது, இது பெரும்பாலும் ஆராய்ச்சி பட்ட மாணவர்களுக்கு (றிபி.ஞ் ஷிநீலீஷீறீணீக்ஷீஉ) நேருகிறது ஏனென்றால் ஆராய்ச்சி பட்ட மேற்பார்வையாளரிடம், பட்டம் வழங்குவதில் முழுக் கட்டுப்பாடு இருப்பதால் இப்படி நேருகிறது..
- ஆகவே பட்டியலின / பழங்குடி & பெண் ஆராய்ச்சி பட்ட

மாணவர்கள் (மற்ற ஒதுக்கப்பட்ட பிரிவு மாணவர்களையும் கூட இதில் சேர்த்துக் கொள்ளலாம்) தங்கள் ஆராய்ச்சி பட்ட ஆய்வுக்குழு உறுப்பினர்களை, கல்வி வளாகத்திலோ, கல்வி வளாகத்திற்கு வெளியேவோ தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப் படலாம்.

- 68 ஆண்டு கால சுதந்திரத்திற்கு பிறகும் கூட உயர் கல்வியில் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட கல்வி போதிக்கும் பணியிடங்களில், பட்டியலின / பழங்குடி மக்களின் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப இல்லாமல் மிகவும் குறைவாக உள்ள நிலையே இருக்கிறது. ஆகவே அனைத்து மத்திய மற்றும் மாநில பல்கலைக்கழகங்கள், அவர்களுக்கு இட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட காலியிடங்களை சிறிதும் தாமதிக்காமல் உடனே கண்டிப்பாக நிரப்பிட வேண்டும். இது இந்த கல்வி வளாகங்களில் தலித் மாணவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை குறைப்பதற்கு உதவி செய்யும். பேராசிரியர்கள் உள்ளிட்ட கல்வி போதிக்கும் ஆசிரியர்களில் தலித்களும் இருக்கும் பட்சத்தில், தலித் மாணவர்களுக்கு ஒரு தார்மீக ஆதரவையும், நம்பிக்கையையும் இது கொடுக்கும்.

## பழங்குடி குழந்தைகளுக்கான சிறப்பு பரிந்துரைகள்

573 வகையான பழங்குடிகள் 67 மில்லியன்பேர் வாழும் இந்தியாவில் இதுவரை உருவாக்கப்பட்ட கல்விக்கொள்கைகள் பெரும்பான்மை சமவெளிமக்களை கருத்தில்கொண்டே உருவாக்கப்பட்டிருக்கிறது இக்கொள்கைகளில் உள்ள பல சரத்துக்கள் பழங்குடிகளின் நிலையையோ அவர்களின் பிரச்சினைப்பாடுகளோ கொள்கை வகுக்கும்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை வெளிச்சம்போட்டுக்காட்டுகிறது இதுவே பல்வேறு முயற்சிகள் எடுத்தபின்னும் பழங்குடிகள் கல்விக்கு வெளியே நின்றிருப்பதற்கு காரணமாக இருக்கிறது.

பிரிட்டிஷ் அரசின் ஆளுகையின்கீழ் இந்தியா இருந்தபோது பழங்குடிகளுக்கான கல்வி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை அல்லது விரும்பப்படவில்லை அதற்குப் பதிலாக பழங்குடிப்பகுதிகளில் கிருத்துவ மிஷினரிகள் கல்விப்பணிகளை செய்ய அனுமதித்தினர்

இந்திய சுதந்திரத்திற்குப்பிறகு உருவாக்கப்பட்ட பல கல்விக்கொள்கைகள் பழங்குடிகளுக்கான பார்வையில் ஏற்படுத்தப்படவில்லை .இதன் உச்சமாக கல்விக்கொள்கை 2016

முழுக்க முழுக்க சமூகத்தை குலக்கல்விமுறையை நோக்கி நகர்த்தும் ரகசியத்திட்டத்தோடும் அன்னியர்களின் கட்டளைக்கு கீழ்படிந்தும் தயாரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது இவற்றை திரும்பப்பெறுவதுடன் பழங்குடி கல்வியாளர்குழுவை அமைத்து அவர்களின் கருத்து கேட்புக்கு பிறகு கல்விக்கொள்கை 2016 ஏற்படுத்தப்படவேண்டும்

**சில பரிந்துரைகள்**

- உண்டுறைவிடப்பள்ளிகள் றிறிறி என்னும் public private partnership மூலம் தனியாருக்கு விடுவதை கைவிடவேண்டும் அப்படி அளிக்கப்பட்ட சில உண்டு உறைவிடப் பள்ளிகள் மடங்களுக்கு கையளிக்கப்படுகிறது .அங்கே முட்டையைக்கூட உணவில் தவிர்க்கப்படுகிறது அது போலவே அதிகாலையில் எழுப்பி அவர்களுக்கு சம்பந்தமில்லாத சமஸ்கிருத மந்திரங்களையும் மனனம் செய்யக் கட்டயாப்படுத்தப்பட்ட சம்பவங்கள் நம்மிடம் இருக்கிறது ஆகவே உண்டுறைவிடப்பளிகளை அரசே நடத்தவேண்டும் அல்லது பழங்குடிகளின் கூட்டுறவு சங்கம் அல்லது பழங்குடிகளால் இயக்கப்படும் அமைப்புகளுக்கு கையளிக்கப்படவேண்டும்
- கற்பித்தல் அந்தந்த பழங்குடிகளின் மொழியிலேயே இருக்கவேண்டும்
- பழங்குடிநலத்துறையின்கீழ் கீழ் செயல்படும் பள்ளிகளின் கண்காணிப்பும் மதிப்பீடும் ஆழமாக செய்யப்படுவதில் சுணக்கமே நீடிக்கிறது ஆகவே பழங்குடிநலத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து கல்விச்சாலைகளையும் கல்வித்துறையிடம் ஒப்படைக்கப்படவேண்டும்
- உள்ளூரில் உள்ள கற்பித்தலில் ஆர்வமுள்ளவர்களைக் கண்டுணர்ந்து அவர்களுக்கு சிறப்பு ஆசிரியர் பயிற்சியளித்து பள்ளிகளில் நியமிக்கவேண்டும் அதுபோலவே தற்போது பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பழங்குடிகள்குறித்த Sensitization பயிலரங்குகள் வருடத்துக்கு இரண்டுமுறையாவது வழங்கப்படவேண்டும் கட்டாயம் ஆசிரியர்களை நியமிக்கும் உரிமையில் பழங்குடி மூத்தோரின் தலையீடு இருக்கவேண்டும்
- பழங்குடிகள் பெரும்பாலான பகுதிகளில் வேலைக்காகவும் இதர காரணங்களுக்காகவும் இடம்பெயர்ந்துபோவது அடிக்கடி நடக்கிறது மேலும் நாடோடிப்பழங்குடிகள் பிரிவும் இருக்கிறது அவர்களுக்கென்று சிறப்புத்திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் உதாரணமாக இடப்பெயர்வாகி வாழும் இடங்களில் இங்கே படிக்கும் அதே கல்வியை இடம்பெயர்ந்து பணிபுரியும் இடங்களில் உள்ள பள்ளிகளில் வகுப்பில் கொடுக்கலாம் அதற்கென சிறப்பு card system அறிமுகப்படுத்தலாம் அல்லது Barefoot teachers

நியமிக்கலாம் அல்லது seasonal hostels ஏற்படுத்தலாம்

- 100 சதவீத தேர்சியை இலக்காகக்கொண்டு 9 மற்றும் 11 ஆம் நிலையில் படிக்கும் சுமாரான மாணவர்களை பெற்றோரை அழைத்துப்பேசி வற்புறுத்தி இணங்கச்செய்து பள்ளியிலிருந்து நீக்கப்படுகிறர்கள் அதை கண்காணிக்க 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் இடைநிற்கும் மாணவ்ர்களின் மாற்றுச்சான்றிதழ் பெறும் திட்டம் மாவட்ட கல்வி மையத்தோடு இணைக்கப்படவேண்டும் அதற்கென குழு ஒன்று ஏற்படுத்தபடவேண்டும் அந்தக்குழுவில் பழங்குடி அமைப்புகளுக்கு உறுப்பினர்பொறுப்பு வழங்கப்படவேண்டும்
- மேற்படிப்பில் இடைநிற்கும் நிலை பெரும்பாலும் கல்லூரிகளின் தூரம் காரணமாகவே நிகழ்கிறது ஆகவே 20 கிலோமீட்டருக்கு ஒரு கல்லூரி இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும் மேலும் extension centers மேல்நிலை பள்ளிகள் செயல்படும் பகுதிகளின் அமைக்க பெரிய பல்கலைகழகங்களை முன்வரவைக்க ஏதுவான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும்
- சிறப்பு பணியாளர் அல்லது உளவியல் ஆலோகர்கள் பழங்குடி பள்ளிகளுக்கு நியமிக்கப்படவேண்டும் நேரடி களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு அவர்கள் குழந்தைகளின் வருகைப்பதிவுகளில் கல்விகற்க்கும் ஆர்வங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தயார்படுத்தப்படவேண்டும்
- பாடத்திட்டம் curriculum development பழங்குடிசமூகத்தை வைத்தே உருவாக்கப்படவேண்டும் மேலும் அது அவர்கள் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும்படி இருக்கவேண்டும் அவர்களைக்கொண்டு உருவாக்கப்படமுடியாத பாடத்திட்டங்களை மறுஆய்வுசெய்யவும் அவர்களுடைய யோசனைகளை கேட்டுப்பெறும் வகையில் நெகிழ்வுத்தன்மை உடையதாகவும் இருக்கவேண்டும்
- Exchange classes வாரம் ஒருமுறை அருகாமை பள்ளிக்கும், மாதம் ஒருமுறை சமவெளிப்பள்ளிகளுக்கும் அழைத்துசென்று அங்கு நடக்கும் வகுப்புகளில் பங்குபெறும் திட்டம் ஏற்படுத்தப்படவேண்டும் .அது மாணர்களின் கற்கும் திறனை விரிவடையச்செய்யவும் சமவெளி மாணவர்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் வலிமையை அவர்களுக்கு ஏற்படுத்தும் . பள்ளிகளில் மாணவர்களின் வருகையையும் அதிகரிக்க உதவும்
- பத்தாம் வகுப்பிலேயே கணிதமும் அறிவியலும் வரப்பெறாத மாணவ்ர்களை கி ஙி என்று வகைப்படுத்தி மற்ற பாடங்கள்மட்டுமே படிக்கும் நிலைக்கு தள்ளுவது எதிர்காலத்தில் அறிவியல் தேவைப்படும் ஆய்வுகூடம் சம்பந்தமான பணிகளைக்கூட பெறமுடியாத நிலைக்கு தள்ளப்படும் வாய்ப்பிருக்கிறது. இம்முறைய

*திணிப்பதால் பெரிதும் பாதிக்கப்படுவது பழங்குடி மக்களாகத்தான் இருக்கும் ஆகவே 10 ஆம் நிலைக்கு மேல்தொழிற்கல்விக்கு இடம் அளிக்கவேண்டும் அதுவும் தொழிற்பயிற்சி மையங்கள் பழங்குடிகள் பகுதியில் அமைக்கப்படவேண்டும்*

- *இடைநிற்றல் பெரும்பாலும் 5, 8 ,11 வகுப்ப்புகளில்நிகழ்கிறது அது ஆரம்பப்பள்ளியில் இருந்து நடுநிலைப்பள்ளிக்கும் நடுநிலைப்பள்ளியில் இருந்து உயநிலைப்பள்ளிக்கும் உயர்நிலைப்பள்ளியில் இருந்து மேல்நிலைப்பள்ளிக்கும் மாறும்போது நிகழ்கிறது இதைத்தடுக்க அனைத்து வகுப்புகளும் அடங்கியே 'ஒரேபள்ளித்திட்டம்' விடுதி வசதியுடன் குறிப்பிட்ட தொலைவுக்கு ஒன்று மைக்கப்படவேண்டும்*
- *பழங்குடிகளின் பண்பாடு கலை மொழி ஆகியவற்றிற்கு புத்துணர்வு அளிப்பதன்மூலமே பழங்குடி குழந்தைகளின் வாழ்வும் மனமும் கல்வியும் பக்குவப்படவாய்ப்பிருக்கிறது ஆகவே இரவுகளில் முறைசார, பண்பாட்டு இரவுப்பள்ளிகள் இளையோர்கூடங்கள் போல் உருவாக்கப்படவேண்டும்*
- *தண்டனைப்பகுதியாக கணக்கிட்டே பழங்குடிகளின் பகுதிகளில் ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். இந்நிலைமாறி ,அர்பணிப்பும் ஈடுபாடும் கல்வியில் புதியவற்றை சாதிக்கும் எண்ணம்கொண்ட ஆசிரியர்களையே பழங்குடி பகுதிக்கு நியமிக்கப்படவேண்டும்*
- *பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இப்போது வெறும் கையெழுத்து பெறும் கழகமாக மட்டுமே செயல்பட்டு வருகிறது .அந்தக்கூட்டங்களை கிளஸ்டர் முறையில் ஓரிடத்தை தேர்வுசெய்து பெற்றோர்க்கான மாதாந்திரக்கல்வி விழிப்புணர்வு பயிற்சியாக மாற்றி அமைக்கவேண்டும். குறிப்பாக அவை உள்ளூர்விடுமுறை தினங்களை கணக்கில்கொண்டு நடத்தப்படவேண்டும். இது பெற்றோர்களின் கூட்ட வருகையை அதிகரிக்கவும் கல்விகுறித்த விழிப்புணர்வையும் அவர்களுக்கு ஏற்படுத்தும்*
- *பழங்குடிப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணியிடத்திலேயே தங்கும் வசதிகள் செய்துதரப்படவேண்டும்*
- *விடுதியில் தங்கியிருந்தாலும் ஆசிரியர்கள் மாணவர்களின் ஊரில் வாரம் ஒருமுறையாவது தங்கி பொதுவகுப்புகளை நடத்தவேண்டும்.*
- *பெரும்பாலான பழங்குடிகளின் நேரம் காலம் சமவெளி பண்பாட்டிலிருந்து மாறுபட்டது, அவர்களுடைய பள்ளி நேரத்தை பள்ளியின் நாட்களில் அவர்களோடு கலந்து மாற்றம் செய்யவேண்டும்*

- பள்ளிவேலை நாட்கள் விடுமுறை நாட்கள் உள்ளூர் விழாக்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படவேண்டும் அதை தயாரிக்கும் பொறுப்பு பழங்குடிசமூக தலைமைகளிடம் விடப்படல்வேண்டும்
- குழந்தைகளின் உடல்நலம் கருத்தில் கொள்ளப்பட்டு ஊரக மருத்துவ திட்டத்தோடு இப்பள்ளிகள் இணைக்கப்படவேண்டும்
- பள்ளிகளில் சத்துணவுத்திட்டம் செயல்படுகிறது இந்த சத்துணவுத்திட்டங்களில் அவர்களின் பாரம்பரியமான உணவுகள் ஒரு காலத்திலும் இடம்பெற்றதில்லை வாரம் ஒருமுறையேனும் அவர்கள் உணவுகள் கொடுப்பது பள்ளியோடு இன்னும் நெருக்கமாக அவர்களை உணரச்செய்யும்
- அங்கன்வாடிகள் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 25 குழந்தைகள் வேண்டும் என்று ஒரு வரையறை இருக்கிறது. பழங்குடி பகுதிகளில் அந்த வரையரையறையை தளர்த்தி மாற்று முறைகளை பரிசீலிக்கவேண்டும் உதாராணமாக Community anganwadis இது உள்ளூர் ஆசிரியர்களை வளர்த்தெடுப்பதற்க்கும் உதவிகரமாக இருக்கும்
- பழங்குடிகளின் கற்றல்முறை எப்போதும் மடைமாறிவருவது அதுபோன்ற ஏதுவான சூழலும் மகிழ்சிகரமான இயல்பான கற்பித்தல்முறையை கையாளவேண்டும் கற்பிக்கும் கல்வி உபகரணங்கள் பழங்குடிகளின் வாழ்வில் இருந்தே எடுக்கப்படவேண்டும் .

பழங்குடிகளின் குழந்தைகள் வித்தியாசமான சமூக சூழ்நிலையிலிருந்தும் வஞ்சிக்கப்பட்ட பின்னனியிலிருந்தும் வருகிறார்கள் என்பதை உணர்ந்து கற்பிக்கும் நிலை இங்கு வேண்டும் இதுவரை கடைபிடித்துவந்த கல்விகொள்கையால் பெரும்பாலான மாணவர்கள் மிகக்கடுமையாகப்போராடி இரண்டுக்கும் இடைப்பட்ட இடத்தில் நின்று தங்கள் எதிர்காலத்தை இழந்திருக்கிறார்கள் என்பது கசப்பான உண்மை பழங்குடிகளின் கல்வியானாது எப்போதும் அவர்களுக்கு உவப்பான அவர்களை மேலெடுத்துவரும் அக்கறையோடு செய்யப்படவில்லை ,முழுக்க முழுக்க சம்பந்தமில்லாதவர்களால் உருவக்கப்பட்டு திணிக்கப்பட ஒன்றாகவே காலம்காலமாக இருந்து வருகிறது

மிகக்கூர்மையாக அப்சர்விங் திறன்கொண்ட ஒரு சமூகத்திலிருந்து வருகிற குழந்தைகளை, தவறான முறைகளால் பாழடிக்கின்ற வேலையை கல்விக்கொள்கைகள் இங்கே தொடர்ந்து செய்துவருகிறது

ஒவ்வாத முறைகளையும் கற்பித்தல்திட்டங்களையும் பாடத்திட்டங்களையும் சதித்திட்டங்களையும் உள்ளடக்கி புறவாசல்வழியாக வரும் இந்தக்கல்விக்கொள்கை திரும்பப்பெறவெண்டும்

# கல்வி உரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு

- மூட்டா
- தமிழ்நாடு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம்
- தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர்சங்கம்
- தனியார் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள்சங்கம்
- தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்சங்கம்
- தமிழ்நாடு ஓய்வு பெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர் சங்கம்
- தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர், இயக்குநர் சங்கம்
- தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்
- தமிழ்நாடு தொடக்க, நடுநிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்
- தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு
- தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்
- பொதுப் பள்ளிக்கான மாநில மேடை
- தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி
- 1தமிழ்நாடு ஆசிரியர் சங்கம்
- தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம்
- இந்திய மாணவர் சங்கம்
- தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டண்
- தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்சங்கம்
- ஏசு சபை (SEC - JESUIT)
- தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
- தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர்கள் கழகம்ட
- தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கழகம்
- தமிழ்நாடு மாணவர் பெற்றோர் நலச் சங்கம்
- தமிழகத் தமிழாசிரியர் கழகம்
- ஜே.எஸ்.ஆர். தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி
- அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- பாரதியார் பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- பெரியார் பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- அழகப்பா பல்கலைழக ஆசிரியர்கள்சங்கம்
- பாரதிதாசன் பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- தமிழக ஆசிரியர் கூட்டணி
- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்
- அகில இந்திய மாணவர் பெருமன்றம்
- தமிழ்நாடு ஆசிரியர் மன்றம்
- பதவி உயர்வு பெற்ற பட்டதாரி மற்றும் தமிழாசிரியர் கழகம்
- காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- சென்னை பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- காந்தி கிராம பல்கலைக்கழக ஆசிரியர்கள்சங்கம்
- தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர்கள் சங்கம்